உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 04 புதன்கிழமை (18.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 173



02 கில்லி ஒட்ட மழை



03 நடப்புச் சம்பியன் மரணம்



04 பிரளயத்தின் பொழுதுகளில்



16 பெண்கள் மீதான வன்முறைகள்



25 வடிவேலுவின் வீட்டில் தாக்குதல்

# தேசிய துக்க நாளான இன்று தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்குச் சபதம் எடுப்போம்

கொழும்பு, மே 18

தேசிய துக்க நாளாகிய இன்று முள்ளிவாய்க்கால் வரலாற்றுப் பெருந்துயரை நெஞ்சில் இருத்தி இலங்கைத் தீவில் தமிழர்கள் இழந்து போன தமது தன்னாட்சி உரிமையை வென்றெடுக்க சபதம் எடுப்போம்.

- இவ்வாறு கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த வரலாற்றுப் பெருந்துயரை நினைவு கொள்ளும் முகமாகத் தமிழ் மக்கள், மே 18ஆம் திகதியை தேசிய துக்க நாளாகக் கடைப்பிடித்து வருகின்றனர் என்று கூட்டமைப்புத் தெரிவித்

## கூட்டமைப்பு அழைப்பு

துள்ளது. அதேவேளை, போரில் உயிரிழந்தவர்களுக்காக நாளைய தினமும் பிரார்த்தனையில் ஈடுபடுமாறும் அது கேட்டுள்ளது.

கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் மீது முள்ளிவாய்க்கால் காலத்தால் ஆற்றமுடியாத பெருந் துயரமாகப் பதிந்துவிட்டிருக்கிறது. இங்குதான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற முற்றுகைப்போரில் எமது மக்கள் பால், வயது வேறுபாடின்றி வகை, தொகையின்றி ஈவிரக்கமற்ற முறையில் கொல்லப்பட்டார்கள்; அங்கவீனமாக்கப்பட்டார்கள்; உணவும் மருந்தும் இன்றிப் பரிதவிக்க விடப்பட்டார்கள்; அவலங்களைக் கண்ணுற்று சித்தசுவாதீனமாக்கப்பட்டார்கள்.

எஞ்சியோர் முள்வேலி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டார்கள். மொத்தத்தில் இங்குதான் மூன்று தசாப்த கால (29 ஆம் பக்கம் பார்க்க)

### அவசரகாலச் சட்டத்தையும் உடன் நீக்க வேண்டும்

# மனித உரிமை மீறல் விசாரணை அவசியம்

## இலங்கையிடம் இந்தியா திட்டவட்டமாகத் தெரிவிப்பு

புதுடில்லி, மே 18

மனித உரிமை மீறல் தொடர்பில் இலங்கைக்கு எதிராக எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்கள்குறித்து விசாரணை செய்யுமாறு இலங்கைக்கு நெருக்குதல் கொடுத்துள்ளது இந்தியா. அத்துடன் அவசரகாலச் சட்டத்தை கூடிய விரைவில் நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் படியும் அது கொழும்பு அரசை வலியுறுத்தியுள்ளது. போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளியாகி உள்ள நிலையில் இந்தியாவின் இந்த வலியுறுத்தல் வெளிவந்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் மூன்று நாள் உத்தியோகபூர்வ இந்தியப் பயணத்தின் முடிவில் இரு நாடுகளும் இணைந்து (31ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாடு உலகில் வலுக்கிறது

கொழும்பு, மே 18

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் இலங்கை அரசுக்கு எதிரான போக்கு உலக அரங்கில் அதிகரித்து வருகிறது. அந்த அறிக்கையை இலங்கை அரசு முற்றாக நிராகரித்துள்ள போதும், அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களை அரசு நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் என்ற கருத்தே மேற்குலக நாடுகளாலும் ஏனைய (29 ஆம் பக்கம் பார்க்க)






லண்டனில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் அகவணக்கம் செலுத்தும் ஈழத் தமிழர்கள்.

## உலக நாடுகள் பலவற்றிலும் உணர்வுபூர்வ நினைவேந்தல்

லண்டன், மே 18

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவுகூரும் இரண்டாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கனடா-ரொறன்றோ ஸ்காபுறோ நகரசபை முன்றிலில் கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நினைவேந்தல் (29 ஆம் பக்கம் பார்க்க)

## பான் கீ-மூனுடன் அமைச்சர் விமல் ஐ.நா. நிகழ்வில் நேற்றுப் பங்கேற்பு

நியூயோர்க், மே 18

நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் இடம்பெற்ற புத்த ஜயந்தி விழாவில் அமைச்சர் விமல் வீரவன்ஸ கலந்துகொண்டமையானது சமாளிக்கும் தன்மை என்பதை வெளிக்காட்டியுள்ளது என்று 'இன்னர்சிற்றி பிரஸ்' விமர்சித்துள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்ஸ ஐ.நா. சபையையும் அதன் செயலாளர் நாயகம் பான் கீ-மூனையும் கடுமையாக (31ஆம் பக்கம் பார்க்க)

### போர் முடிவடைந்து இரண்டு வருடங்களாகியும்

# ஒரு லட்சம் தமிழர்கள் இன்னும் சொந்த இடம் திரும்பவில்லை

கொழும்பு , மே 18

இலங்கையில் போர் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கடந்து விட்ட போதும் இன்னும் ஒரு லட்சம் தமிழர்கள் மீளக்குடியமர்த்தப்படாமலேயே இருக்கிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் புதிய அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

"2011 மே மாதம் 13ஆம் திகதி நிலைவரப்படி, உள்ளூரில் இடம்பெயர்ந்த குறைந்தது ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 888 பேர் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை" என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா. ஒருங்கிணைப்பு அலுவலகம் இந்த அறிக்கையை விடுத்துள்ளது.

இலங்கை அரசின் கூற்றுப்படி இவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் இடத்தங்கல் அல்லது நலன்புரி முகாம்களிலிருந்துவெளியேறிச்சென்றுவிட்டார்கள். (31 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

கல்விச் சுடர்

தரம் 5 புலமைப்பரிசிலுக்கான வினாத்தாள்-1 உதயனின் 20 ஆம் பக்கத்தில். வினாத்தாள் - 2 நாளை உதயனில். பிரதிகளுக்கு முந்துங்கள்.

# 13ஆவது திருத்தம் தாண்டிய தீர்வை இப்போது வலியுறுத்துகிறார் டக்ளஸ்

கொழும்பு , மே 18

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இதுவரை கூறி வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இப்போது 13ஆவது திருத்தத்துக்கு மேலே சென்று அரசு தீர்வை முன்வைக்க வேண்டும் என்று முதல் தடவையாகக் கூற ஆரம்பித்திருக்கிறார்.

அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையிலான பேச்சுக்களில் அதிகாரப் பகிர்வுக்கு கொள்கையளவிலான இணக்கம் ஒன்று எட்டப்பட்ட நிலையில், அமைச்சர் டக்ளஸ் செனட் சபை ஒன்றைஉருவாக்குவது குறித்தும் 13ஆவது திருத்தத்தில் உள்ள, மாகாண மற்றும் மத்திய அரசுகள் இரண்டும் அதிகாரம் செலுத்தக் கூடிய பட்டியலை (கொன்கரன்ட் லிஸ்ட்) நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

அண்மையில் அரச தரப்பினருடன் தான் நடத்திய பேச்சின் போது தனது அரசியல் தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளார் என்றும் அமைச்சர் டக்ளஸ் கூறினார்.

அதேவேளை, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முதற்படியாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் ஊடகங்களிடம் கூறினார்.

"அரசு 13ஆவது திருத்தத்தையும் தாண்டிச் செல்ல வேண்டும் என்பதே எமது அவா. செனட் சபையை உருவாக்குமாறும் (29 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# கில்லி ஓட்ட மழை; ஏமாற்றினார் அதிரடி வீரர் கெயில் !

- டிலீப் -

கில்லியின் அதிரடி ஆட்டம். சாவ்லாவின் சவாலான சுழற் பந்து வீச்சு. பெங்களூரின் சொதப்பல் களத்தடுப்பு. 111 ஓட்டங்களால் வெற்றி பஞ்சாப் கையில் சேர்ந்தது. பெங்களூரின் வெற்றிப் பயணம் எட்டியது முடிவை.

63 ஆவது ஐ.பி.எல் ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும், பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியும் நேற்று மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணியின் தலைவர் கில்கிறிஸ்ட் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

பஞ்சாப் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வல்த்தாட்டி - கில்கிறிஸ்ட் இருவரும் களமிறங்கினர். முதலாவது ஓவரை வன்டவார்த் வீசினார். வல்த்தாட்டி பவுண்டரி மட்டுமே முதலாவது ஓவரில் பெற்றார். லங்காவெல்த் வீசிய இரண்டாவது ஓவரில் வல்த்தாட்டி முதலாவது ஓவரில் சிக்ஸர் அடித்து அதிரடியைத் தொடக்கினார். இருப்பினும் நான்காவது ஓவரை லங்காவெல்த் மீண்டும் வீச 17 பந்துகளில் 20 ஓட்டங்களுடன் வல்த்தாட்டி ஆட்டமிழந்து வெளியேறினார். 25 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பஞ்சாப்பின் முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது.

இதன் பின்னர் ஜோடி சேர்ந்தனர் கில்கிறிஸ்ட் - ஷோன் மார்ஷ். தொடங்கியது பஞ்சாப்பின் அதிரடியாட்டம். மித்துன் வீசினார் ஏழாவது ஓவர். கில்லி அடித்தார் ஐ.பி.எல்லில் தனது கணக்கில் 100 ஆவது சிக்ஸர். எட்டாவது ஓவர் வீசினார் அரவிண்ட். கில்லி, மார்ஷ் துடுப்பில் பட்டுப் பறந்தன ஓட்டங்கள். வாரி வழங்கினார் 21 ஓட்டங்கள். பஞ்சாப் 45 பந்துகளில் அரைச்சதம் பூர்த்தி.

தொடங்கியது கில்லியின் சிக்ஸர் மழை. ஒன்பதாவது ஓவர் வீசினார் கெயில். இறுதி இரண்டு பந்தும் எல்லையைத் தாண்டியது. பத்தாவது ஓவர் வீசினார் லங்காவெல்த். மூன்று சிக்ஸர்கள் தொடர்ந்து சென்றது எல்லையைத் தாண்டி. கில்லி 25 பந்தில் அரைச்சதம் பூர்த்தி. 61 பந்துகளில் அணி கடந்தது சதம். விடாது சென்றது சிக்ஸர்கள். பெங்களூரின் முயற்சி தவிடுபொடி. 14 ஆவது ஓவர் மார்ஷின் பிடி தவறியது.

15 ஆவது ஓவருக்கு வன்டவார்த் மீண்டும் அழைப்பு. பந்து வீச்சை எதிர்த்தார் மார்ஷ். மூன்று சிக்ஸர்கள், பவுண்டரிகள் தாராளமாய் வாரி வழங்கல். 30 ஓட்டங்கள் முத்தாய் போய்ச் சேர்ந்தது பஞ்சாப்பிடம். பஞ்சாப் ஆட்டத்தை குறுக்கீடு செய்ய வந்தது மழை. இருந்தும் நீடிக்கவில்லை நீண்ட நேரத்துக்கு. 34 பந்துகளில் மார்ஷ் தொட்டார் அரைச்சதம்.

பஞ்சாப் எட்டியது இரட்டைச் சதம். எடுத்தது 107 பந்துகள். கில்லி அடித்தார் சதம். அதிரடியாய் 53 பந்துகளில் எட்டப்பட்டது அவரது சதம். சாதனை படைத்தது கில்லி - மார்ஷ் இணைப்பு. புது வரலாறு எழுதியது 'ரி-20' கிரிக்கெட்டில். 207 ஓட்டங்கள் பகிரப்பட்டது இரண்டாவது விக்கெட் இணைப்புக்காய்.

முடிந்தது 20 ஓவர். எடுத்தது 232 ஓட்டங்கள். ஐ.பி.எல்லில் அதிகூடிய ஓட்டத்தில் மூன்றாமிடம் பெற்றது இந்த ஓட்ட எண்ணிக்கை. இழந்தது 2 விக்கெட்டுக்கள். கில்லி 55 பந்துகள் சந்திப்பு. 9 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் அடிப்பு. பெற்றது 106 ஓட்டங்கள். மறு முனையில் மார்ஷ் 49 பந்துகள் எதிர் கொண்டு 79 ஓட்டங்கள் பெற்றுக் கொடுப்பு. 5 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகள் அடக்கம் அதில். உதிரிகளாய் பெங்களூர் வாரி வழங்கியது 27 ஓட்டங்கள்.

எட்ட முடியாத இலக்கை விரட்டத் தொடங்கியது பெங்களூர். முதலாவது ஓவர் பிரவீண் குமார் வீசல். கெயில் - திவாரி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாய் நுழைவு. கடந்தது ஓட்டமற்ற ஓவராய் முதலாவது ஓவர். அதிரடி மன்னர் கெயில் அடக்கமாய் ஆறு பந்தையும் விட்டு விட்டார். வீசினார் ஹரிஸ் இரண்டாவது ஓவர். வீழ்ந்தது கெயில் விக்கெட். கணக்கு தொடங்குமுன் முடிந்தது கெயில் ஆட்டம். அடங்கியது பெங்களூரின் உற்சாகம்.

ஹோக்லி நுழைந்தார். வந்த வேகத்தில் விரட்டினார் இரண்டு பவுண்டரிகள். நீடிக்கவில்லை அவரது ஆட்டம். நான்காவது ஓவர் ஹரிஸ் பந்தில் பவிலியனுக்குத் திரும்பினார் ஹோக்லி. 11 பந்துகளில் 11 ஓட்டங்கள். ஹோக்லி ஆட்டம் அவ்வளவே. திவாரி - வில்லியர்ஸ் இணைந்தனர் அடுத்த விக்கெட்டுக்காய். பகிர்ந்தனர் 17 ஓட்டங்கள். வீழ்ந்தார் திவாரி 6 ஓட்டங்களுடன்.

வந்தார் அஷாட் பதான். நுழைந்த வேகத்தில் பந்து வெளியேறியது எல்லையைத் தாண்டி. ஏழாவது ஓவரின் இறுதிப் பந்தில் வல்த்தாட்டியிடம் வீழ்ந்தார் 7 ஓட்டங்களுடன். சிறீ வாஸ்ரா வீசினார் எட்டாவது ஓவர். கைப் நுழைந்த வேகத்தில் அடித்தார் அடுத்தடுத்து மூன்று பவுண்டரிகள். சாவ்லா வீசிய 9 ஆவது ஓவர். பறந்தது வில்லியர்ஸ் துடுப்பில் பட்டு சிக்ஸர். சாவ்லா முடித்தார் கைப் ஆட்டத்தை. 11 பந்துகள் சந்தித்து பெற்றுக் கொடுத்தார் 15 ஓட்டங்கள்.

சாவ்லா சரித்தார் பின்வரிசை விக்கெட்டுக்களை. ஒற்றை ஓட்டங்களுடன் வெளியேறினர் பெங்களூர் வீரர்கள். முன்வரிசையில் இறங்கி அணிக்கு முண்டு கொடுத்த வில்லியர்ஸ் 34 ஓட்டங்களுடன் சாவ்லா பந்து வீச்சில் வெளியேற்றம். 15.3 பந்து வீச்சுகள் முடிந்தது. இழந்தது 9 விக்கெட்டுக்கள். பெற்றது 103 ஓட்டங்கள். இறுதி விக்கெட்டுக்காய் அரவிண்ட் - லங்காவெல்த் முடிந்தவரை ஆடினர் அதிரடியாட்டம்.

பவுண்டரிகள், சிக்ஸர்கள் துடுப்பில் பட்டு எகிறிப் பறந்தன. சிறீவாஸ்ரா வீசினார் 17 ஆவது ஓவர். இறுதிப் பந்தில் வீழ்ந்தது லங்காவெல்த் விக்கெட். மறுமுனையில் ஆட்டமிழக்காது அரவின்ட் 11 ஓட்டங்கள். பந்து வீச்சில் சாவ்லா வீழ்த்தினார் 4 விக்கெட்டுக்கள். கொடுத்தது 17 ஓட்டங்கள். ஹரிஸ், சிறீவாஸ்ரா சரித்தனர் முறையே 3, 2 விக்கெட்டுக்கள்.

கில்கிறிஸ்ட் கையில் ஆட்டநாயகன் விருது.

கில்கிறிஸ்ட்

## இன்றைய ஆட்டம்

- சென்னை சூப்ப கிங்ஸ் எதிர் கொச்சி ருஸ்கேர்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- மார்ஷ் – பஞ்சாப் (13 ஆட்டங்கள் 491 ஓட்டங்கள்)
- வல்த்தாட்டி – பஞ்சாப் (13 ஆட்டங்கள் 458 ஓட்டங்கள்)
- கெயில் – பெங்களூர் (8 ஆட்டங்கள் 436 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை (12 ஆட்டங்கள் 27 விக்கெட்டுக்கள்)
- முனாப் பட்டேல் – மும்பை (12 ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)
- ராகுல் சர்மா – புனே (12 ஆட்டங்கள் 16 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE

## அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 13 | 08 | 04 | 0 | 1 | + 0.283 | 17 |
| சென்னை சூப்ப கிங்ஸ் | 12 | 08 | 04 | 0 | 0 | + 0.544 | 16 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 08 | 04 | 0 | 0 | + 0.245 | 16 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 07 | 05 | 0 | 0 | + 0.403 | 14 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 13 | 07 | 06 | 0 | 0 | + 0.271 | 14 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 13 | 06 | 07 | 0 | 0 | - 0.186 | 12 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 05 | 07 | 0 | 1 | - 0.969 | 11 |
| டெக்கான் சார்ஜஸ் | 13 | 05 | 08 | 0 | 0 | - 0.080 | 10 |
| புனே வாரியர்ஸ் | 12 | 04 | 08 | 0 | 0 | - 0.033 | 08 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 13 | 04 | 09 | 0 | 0 | - 0.448 | 08 |

# ஹசான் மீதான விசாரணை நிறுத்தம்

ஆட்ட நிர்ணய சதி தொடர்பாக ஹசான் திலகரட்ண தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப் பட்டு வந்த குற்றப்புலனாய்வுப் பிரிவின் (சி.ஐ.டி) விசா ரணை நிறுத்தப்பட்டுள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் உத்தர வின் பேரிலேயே இந்த விசாரணைகள் நிறுத்தப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு முதல் இலங்கை கிரிக்கெட்டில் ஊழல் இடம்பெற்று வருவதாக ஹசான் திலகரட்ண ஊடக வியலாளருக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தி ருந்தார். அத்துடன் கிரிக்கெட் சபைத் தேர்வாளர்களும் இத்தகைய ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவ தாகவும் தெரிவித்திருந்தார். பின்னர் அத்தகைய ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களின் பெயர்களை வெளியிடப் போவதாகவும் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து தனக்கு வெளிநாட்டு தொலைபேசியிலிருந்து மிரட்டல் அழைப்பு வந்ததால் தனக்கும் தனது குடும்பத் தினருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதால் ஊழலில் ஈடுபட்டவர்களின் பெயர்களை வெளியிடப் போவதில்லை யென்று தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் ஹசான் திலகரட்ண தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக விசாரணைகள் மேற் கொள்ளுமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந் தானந்த அளுத்கமகே குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவுறுத்தியிருந்தார். இதன்போது உத்தியோகப்பற்றற்ற நிலையில் ஆட்டநிர்ணய சதியில் ஈடுபட்டவர்களின் பெயர் களை ஹசான் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகி யிருந்தன. பின்னர் ஹசான் பத்திரிகைகளுக்குத் தெரிவித் தவற்றை விட மேலதிகமாக தன்னிடம் ஏதும் தகவல்கள் இல்லையென்று தெரிவித்ததை தொடர்ந்து விசாரணைகள் விளையாட்டு அமைச்சின் உத்தரவின் பேரில் நிறுத்தப் பட்டுள்ளன.

(15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நடப்புச் சம்பியன் திடீர் மரணம்

நடப்பு ஒலிம்பிக் மரதன் சம்பியனான கென்யாவைச் சேர்ந்த சாமுவேல் வன்ஜிரு, தனது வீட்டின் மேல்மாடியிலிருந்து விழுந்து உயிரிழந்துள்ளார். 24 வயதான சாமுவேல் வன்ஜிரு, மனைவியுடன் ஏற்பட்ட வாக்குவாதமொன்றையடுத்து ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இறுதியாக 2008 ஆம் ஆண்டு சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 2 மணித்தியாலம், 6 நிமிடங்கள், 32 விநாடிகளில் மரதனை ஓடி முடித்துத் தங்கப்பதக்கம் பெற்றவர் வன்ஜிரு. அது புதிய ஒலிம்பிக் மரதன் சாதனையாகும். மரதன் ஓட்டத்தில் ஒலிம்பிக் தங்கப்பதக்கம் பெற்ற முதலாவது கென்ய வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சாமுவேல் வன்ஜிருவின் மனைவி த்ரிஸா என்ஜேரி, அன்றைய தினம் வெளியில் சென்று எதிர்பாராத விதமாக முன்கூட்டியே வீடு திரும்பியபோது வன்ஜிரு மற்றொரு பெண்ணுடன் படுக்கையை பகிர்ந்துகொண்டிருப்பதை கண்டதாகவும் அதையடுத்து அவர் இவருவரையும் வீட்டின் உள்ளேவைத்து பூட்டி விட்டு சென்றதாகவும் கூறப்படுகிறது.

சில நிமிடங்களின்பின்னர் வீட்டின் பல்கனியிலிருந்து வன் ஜிரு குதித்துள்ளார். 6 மீற்றர் உயரத்திலிருந்து குதித்த அவர், கொங்கிறீட் தரையில் தலை மோதிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

இது தற்கொலை என்று பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் முதலில் தெரிவித்திருந்தார். எனினும் இது பற்றிக் உறுதியாக கூற முடியவில்லை என்று பிராந்திய பொலிஸ் தலைவர் ஜாஸ்பர் ஓம் பாட்டி கூறியுள்ளார்.

இதேவேளை, வன்ஜிரு தற்கொலை செய்திருக்கமாட்டார் என்று தான் 100 சதவீதம் நம்புவதாக அவரின் இத்தாலிய முகவரான பெடேரிக்கா ரோஸா கூறியுள்ளார். 2005 ஆம் ஆண்டு அரை மரதன் ஓட்டத்தில், உலக சாதனை படைத்த வன்ஜிரு 2007 ஆம் ஆண்டு லண்டன் மரதனில் முதலிடம் பெற்றார். 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வெல்லும் கனவை நனவாக்கிய அவர்.

2009 ஆம் ஆண்டு சிகாகோ லண்டன் மரதன் போட்டிகளிலும் 2010 ஆம் ஆண்டு சிகாகோ மரதன் போட்டியிலும் தங்கப்பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் வீட்டில் அவரின் வாழ்க்கை கொந்தளிப்பானதாகவே இருந்தது. கடந்த டிசெம்பர் மாதம் அவர் தனது மனைவி த்ரிஸாவை தாக்கியதுடன் அவரையும் பணிப்பெண்ணையும் கொல்லப் போவதாக அச்சுறுத்தியதாகவும் பாதுகாப்பு ஊழியர் ஒருவரை காயப்படுத்தியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டது. எனினும், த்ரிஸா தனது புகாரை பின்னர் வாபஸ் பெற்றுக் கொண்டார்.

சாமுவேல் வன்ஜிருவின் மரணம் பெரும் அதிர்ச்சியளிப்பதாக இரு தடவை ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வென்ற புகழ் பெற்ற மரதன் வீரரான எத்தியோப்பியாவின் ஹேய்ல் கெபர்சேலாஸி தெரிவித்துள்ளார்.

இந்த மரணம் வன்ஜிருவின் குடும்பத்தினருக்கு மாத்திரமல்லாமல் கென்யாவுக்கும் உலகின் மெய்வன்மை விளையாட்டு சமூகத்திற்கும் பேரிழப்பாகும் என கென்ய பிரதமர் ரெய்லா ஒடின்கா தெரிவித்துள்ளார்.(15)



கலிஸ்

# தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்.....

பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தோற்றது. இந்த ஆட்டத்தில் மழையால் 'டக் வேர்த் லூயிஸ்' விதி முறை பின்பற்றப்பட்டது. இது கொல்கத்தாவுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது. இது குறித்து அந்த அணி வீரர் கலிஸ் கூறியதாவது:-

20 ஓவர் போட்டியை பொறுத்த வரை 'டக் வேர்த் லூயிஸ் முறை தேவையில்லாதது. அது பொருத்தமாக இருக்காது. சராசரி ஓட்டத்தை கணக்கிடுவது பொருத்தமாக அமையாது. பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் நாங்கள் தோற்றது சரியான முறை இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

இதே கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் மழை விதியால் சென்னை அணிக்கு ஏற்கனவே பாதிப்பு ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (15)

# மீண்டும் வருவேன் நான்

தோள்பட்டை காயத்துக்கு அறுவை சிகிச்சை செய்து கொண்ட இந்திய அணி அதிரடி தொடக்க வீரர் சேவாக், இங்கிலாந்து அணியுடனான தொடரில் விளையாட முடியும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். ஐ.பி.எல் தொடரில் டெல்லி டெயாடெவில்ஸ் அணியின் தலைவராக இருந்த விரேந்திர சேவாக், தோள்பட்டை காயத்தால் அவதிப்பட்டார். தொடர்ந்து விளையாட முடியாத அளவுக்கு வலி அதிகமானதால், தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்தார். லண்டனில் சில தினங்களுக்கு முன் அவருக்கு அறுவைச் சிகிச்சை நடந்தது. சிகிச்சைக்குப் பிறகு நாடு திரும்பிய சேவாக், இங்கிலாந்து அணியுடனான தொடரில் தன்னால் விளையாட முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இது குறித்து கூறுகையில், இப்போது வலி வெகுவாகக் குறைந்துள்ளது. ஒன்றரை மாதத்துக்குப் பிறகு மீண்டும் லண்டன் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள உள்ளேன். அதன் பிறகு முழு உடல் தகுதியுடன் விளையாடத் தயாராகி விடுவேன். இங்கிலாந்து அணியுடனான தொடரில் விளையாட முடியும் என்று நம்புகிறேன் என்றார். சச்சினின் முழங்கை காயத்துக்கு அறுவை சிகிச்சை செய்த டாக்டர் அண்ட்ரூ வாலஸ் தான் சேவாக்குக்கும் சத்திர சிகிச்சை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (15)



சேவாக்

# ஜொகோவிச், ஷரபோவா சம்பியன்

இத்தாலியின் ரோமில் நடைபெற்ற இத்தாலி திறந்த ரென்னிஸ் போட்டியில் சேர்பியாவின் ஜொகோவிச், ரஷ்யாவின் மரியா ஷரபோவா ஆகியோர் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் நோவக் ஜொகோவிச் 6-4, 6-4 என்ற நேர் செட்களில் ஸ்பெயினின் ரபேல் நடாலையும், மகளிர் ஒற்றையர் ஆட்டத் தில் மரிய ஷரபோவா 6-4, 6-4 என்ற நேர் செற்களில் ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசரையும் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றனர்.

இந்த ஆட்டத்தில் ஜொகோவிச் வென்றதன் மூலம் இந்த ஆண்டில் அவர் பங்கேற்ற ஆஸ்திரேலிய ஓபன் உள்ளிட்ட 7 சம்பியன் போட்டிகளிலும் பட்டம் வென்றுள்ளார். இந்த வெற்றியின் மூலம் 4 ஆவது முறையாக நடாலை வீழ்த்தியுள்ளார் ஜொகோவிச்.

சமீபத்தில் நடைபெற்ற மாட்ரிட் திறந்த டென்னிஸ் போட்டியின் இறுதிச்சுற்றில் ஜொகோவிச், நடாலை வீழ்த்திச் சம்பியனானார். களிமண் ஆடுகளத்தில் 8 முறை நடாலிடம் தோற்றுள்ள ஜொகோவிச், மாட்ரிட்டில் தொடரில் வென்றதன் மூலம் அதற்கு முற்றுப்புள்ளி வைத்தார். இப்போது இத்தாலி திறந்த தொடரில் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.

**ஷரபோவா சாம்பியன்**

மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் ரஷ்யாவின் மரிய ஷரபோவா 6-2, 6-4 என்ற நேர் செற்களில் ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசரை வென்றார். இதுவே ஷரபோவா இந்த ஆண்டில் வெல்லும் முதல் சம்பியன் பட்டம் இதுவாகும்.

பிரெஞ்ச் திறந்த போட்டி ஆரம்பிக்க இன்னும் சில நாள்களே உள்ள நிலையில் ஷரபோவாவின் இந்த வெற்றி மிக முக் கியமான தாகக் கருதப்படுகின்றது. (15)


ஷரபோவா


ஜொகோவிச்

## முதலிடத்தை நெருங்கும் ஜெகோவிச்

இப்போது சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கிறார் ஜொகோவிச். மாட்ரிட் திறந்த தொடர், இத்தாலி திறந்த தொடர் ஆகிய போட்டிகளில் தரவரிசையில் முதல் இடத் தில் உள்ள நடாலை வென்றதன் மூலம் ஜொகோ விச் நடாலின் முதலிடத்தை நெருங்கியுள்ளார்.

நடால் 12070 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். ஜொகோவிச் 11665 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். அடுத்து நடைபெறவுள்ள பிரெஞ்ச் திறந்த ரென்னிஸ் போட்டியில் ஜொகோவிச் பட்டம் வெல்லும் பட்சத்தில் அவர் முதலிடத்தைப் பிடித்துவிடுவார் என்று எதிர்பா[illegible]கிறது.

(15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
18 மே 2011 புதன்கிழமை

# பிரளயத்தின் பொழுதுகளில்...



**2009.05.18**

**முள்ளிவாய்க்கால்.**

ஒப்பாரிகளின் ஒலி அந்தச் சிறுவெளியை நிறைத்திருந்தது. பெரும் வெடிச்சத்தத்தோடு மேலெழுந்த கரும்புகை வலியின் கனதியை அதிகரித்திருந்தது. அந்தப் புகையின் மறைவில் கண்கள் கட்டப்பட்டு, நிர்வாணமான ஆண்களின் தலைகளில் துப்பாக்கி ரவைகள் செந்நிறக்கோலம் போட்டிருந்தன. அரைகுறை உயிரோடிருந்த அல்லது உயிரிழந்து இருந்த பெண்களின் உடலங்கள் அவசர புணர்வுக்காக இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தன. பங்கர்கள் ஏராளமான பிணங்களோடு கைவிடப்பட்டிருந்தன. புழுதி மூடிய வீதிகளில் விழுந்திருந்த பிணங்களிலிருந்து புழுக்கள் வெளியே எட்டிப்பார்த்தன. எல்லாப் பக்கங்களிலும் ஒரே விதமான காட்சியே பிரதிபலிப்பதைப் போன்று சிதைவுகளின் தோற்றம் மட்டுமே கண்ணுக்குத் தெரிகின்றது. ஆவேசத்தோடு முழங்குகின்ற ஆயுதங்களிலிருந்து வெளிப்படுகின்ற கந்தக நெடியை, பெருக்கெடுத்து ஓடும் நிணநீரின் மணம் அமுக்கி விடுகின்றது.

**சயனைட் குப்பிகளே தேவாமிர்தமாக...**

''யாராவது எங்களைக் கொல்லுங்கள் !''

அந்த வெளியெங்கும் சிதைந்துபோன உடலில் இருந்து தம் உயிர் பிரியவில்லை என்ற தவிப்பில் இருந்த பலர் வினோதமான இந்த வேண்டுகோளை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்கின்ற காயங்களும், கண்முன்னே கண்ட கோரங்களும், 'எல்லாமே முடிந்துவிட்டது' என்ற ஆற்றாமையும் இத்தகைய வார்த்தைகளை அவர்களிடத்தே இருந்து வெளிப்படுத்தியிருந்தன.

காயம்பட்டிருந்த போராளிகளும், பொதுமக்களும் இறந்துபோன போராளிகளின் உடல்களை அவசர அவசரமாகத் தேடிக்கொண்டிருந்தனர். உயிரற்ற அந்த உடல்களில் எஞ்சியிருந்த 'சயனைட்' குப்பிகளை கண்களில் ஒளி மின்ன, ஆவலோடு எடுத்து தம் வாய்க்குள் புதைத்துக் கொண்டனர். அந்த நேரத்தில் - பிரளயம் ஒன்றின் உச்சத் தருணத்தில்- அவர்களுக்கு அந்தக் குப்பிகள்தான் தேவாமிர்தமாக மாறியிருந்தன.

நெஞ்சில் நெருஞ்சியாய் உருவெடுத்திருந்த துக்கமும் எங்கும் வியாபித்திருந்த கந்தகமும் எஞ்சியிருந்தோரையும் நடைபிணங்களாக மாற்றியிருந்தன. வெளியின் மறுபுறத்தே புதிதாக மின்னிக் கொண்டிருந்த முட்கம்பிகளில் இருந்து இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. கந்தகப் பூமியில் இருந்து முட்கம்பிப் பிரதேசத்துக்கு எஞ்சியிருந்தவர்களை போர் விரட்டத் தொடங்கியது. கையில் எதுவுமே இல்லாத நிலையில் சூனிய வாழ்வுகளைச் சுமந்தபடி எல்லோரும் சீருடைப்பகுதிகளுக்கு நகர்ந்துவந்தார்கள். வரும்வழியிலேயே உயிரை விட்டவர்களும் உண்டு. அரைகுறை உயிரோடு பாதி வழியில் வீழ்ந்த உறவுகளைத் தூக்குவதற்குக் கூட அவகாசத்தை காலம் அவர்களுக்கு வழங்கவில்லை.

முள்ளிவாய்க்கால் பிரளயம் முடிந்து இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனாலும் இன்னமும் அது தந்துவிட்டுப் போன வலிகளின் வடுக்கள் ஆறவில்லை. போர் தின்ற மக்களின் வாழ்வு இன்னமும் பூஜ்ஜியப்புள்ளியிலேதான் தரித்து நிற்கின்றது.

போர் முடிந்த பின்னர் நலன்புரி நிலையங்களில் அடைக்கப்பட்டிருந்த மக்களின் வாழ்வுக்காகப் பல்வேறு நாடுகள் உதவ முன்வந்திருந்தன. எனினும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் யாவும் பாதுகாப்பு அமைச்சு கை நீட்டுகின்ற பகுதிகளில் மட்டுமே தமது அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளமுடியும் என முகத்தில் அடித்ததுபோல் சொல்லப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் கைகள் பெரும்பாலான சமயங்களில் வன்னிப் பகுதியைவிடவும் அம்பாந்தோட்டையை நோக்கியே அதிக தடவைகள் நீண்டன.

**இன்னமும் முடங்கிக் கிடக்கும் வாழ்வு**

தகரங்களோடும், தடிகளோடும் முடிந்துபோனது மீள்குடியமர்வு. 'இதைவிட பேசாமல் முகாமிலையே இருந்திருக்கலாம்' என்று எண்ணுமளவுக்கு மீள்குடியமர்ந்த மக்களை இயற்கையும் ஆட்டிப் படைக்கி றது. சிறிய மழைத் தூறலுக்குக்கூட தாக்குப்பிடிக்க முடியாத வகையிலேயே அவர்களது இருப்பிட அமைவுகள் உள்ளன. அதிகாரிகள் மீள்குடியேற்றம் நூறு வீதம் நடந்தேறிவிட்டதாகப் புள்ளிவிவரத் தாள்களுடன் பெருமைபேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்னமும் மக்களின் வாழ்வு தறப்பாள் கூடாரங்களுக்குள் முடங்கியபடியே தான் இருக்கிறது.

இன்னமும் படையினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்படாத பிரதேசங்களும் நிறைய உண்டு. குறிப்பாக போர் கடைசி நேரங்களில் மையங்கொண்டிருந்த பகுதிகளான முள்ளிவாய்க்கால் முதல் மூங்கிலாறு வரை அந்தப் பட்டியலின் நீளம் மிகப் பெரியது. தங்களின் சொந்த நிலங்களைப் பறி கொடுத்துவிட்டு இன்னமும் அகதி முத்திரையோடு நலன்புரி நிலையங்களில் இந்த மக்களின் வாழ்வு ஏக்கப் பெருமூச்சுகளால் சூழப்பட்டுள்ளது.

மக்களின் விடுதலைக்காக மனப்பூர்வமாகவோ அல்லது பலவந்தமாகவோ களமுனைக்குச் சென்றவர்கள் இப்போது தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு நாள் மட்டுமே பயிற்சியைப் பெற்றிருந்தவர்கள் கூட முன்னாள் போராளிகள் ஆக்கப்பட்டு அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றது. என்றோ ஒரு நாள் விடுவிக்கப்படுவோம் என்ற நம்பிக்கை மாத்திரமே தடுப்பிலுள்ளோரை உயிரோடு வைத்திருக்கின்றது. அந்த நம்பிக்கையையும் மெல்லமெல்லக் காலம் கரைத்துக் கொண்டிருக்கின்றது. ஒரு சில முன்னாள் போராளிகள் தம் விடுதலை பற்றிய ஏக்கத்தால் தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்களும் தலை தூக்கத் தொடங்கிவிட்டன.

இதேவேளை, சர்வதேச தமிழர் பேரவை, நாடு கடந்த தமிழீழ அரசு, தாய நிலம் மீது அக்கறை கொண்ட புலம்பெயரிகள், மனிதாபிமானத்தை நிலை நாட்ட முயலும் ஊடகங்கள் என்போர் இறுதிப் போரின்போது நிகழ்ந்த மனிதப் பேரவலங்களை ஆதாரங்களாக நாளொரு படமும் பொழுதொரு வீடி யோவுமாக வெளியிட்டுப் பெரும் அதிர்வலைகளைச் சர்வதேச ரீதியாக உருவாக்கிவிட்டிருந்தன.

இந்த அதிர்வலையே இன்று ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது வரையான நிலைமையை உருவாக்கியிருந்தது. அந்த அறிக்கை பக்கச் சார்பற்று போரின் இறுதிநாள்களின் கோரத்தை குறுக்குவெட்டுமுகமாக வெளிப்படுத்தியது. மக்களைக்காக்கின்றோம் என்று கூறிக்கொண்டு இராணுவமும் புலிகளும் மக்களின் வாழ்வை ஏறி நசித்த கதைகளை இயன்றவரை அந்த அறிக்கை பட்டவர்த்தனமாக்கியது. இதில் புலிகள் மீதான குற்றங்களுக்கு பதில்சொல்ல எவருமில்லை. ஏனெனில் வன்னியில் நிகழ்ந்த போரில் ஈடுபட்டிருந்த புலிகளின் முக்கிய தலைவர்கள் உயிரிழந்து விட்டனர். அதன் இரண்டாவது தலைவராக முடிசூடிக்கொண்ட கே.பி யும் அரசின் விருந்தாளியாகிவிட்டார். எனினும் புலிகள் சார்பில் ஐ.நா அறிக்கைக்குப் பதில் சொல்ல தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பாளர் றெஜி தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

**அறிக்கையை நிராகரிக்கும் அரசு**

ஆனால் இந்த அறிக்கையை நிராகரிக்கும்படி உலக நாடுகளிடம் கெஞ்சிக் கூத்தாடிக்கொண்டிருக்கிறது இலங்கை அரசு. இது ஒரு தனிநபரின் (தருஸ்மனின்) விருப்பு வெறுப்பை மாத்திரமே பிரதிபலிக்கின்ற புனையப்பட்ட கதைகளைக்கொண்ட அறிக்கை என்று அரசுத்தரப்பு வாதிடுகின்றது. எனினும் அரசின் 'மாய்மாலத்தை' நம்ப எந்தவொரு நாடும் தயாராகவில்லை. போதாக்குறைக்கு அரசின் பொய் முகமூடியைக் கழற்றும் போர்க்குற்ற ஆதாரங்களும் வெளிவந்தபடியே இருக்கின்றன.

## ஔண்யன்

புலிகளின் முக்கிய தலைவர்களை வெள்ளைக் கொடியோடு சரணடையுமாறு அரசின் முக்கிய பிரமுகர் பாலித கோஹன்ன, புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த பா.நடேசனுக்கு அனுப்பிய எஸ்.எம்.எஸ் இப்போது வெளியாகி அரசின் நெருக்கடியை இன்னும் அதிகரித்திருக்கிறது. அந்த எஸ்.எம்.எஸ் அனுப்பப்பட்ட மறுநாள் வெள்ளைக் கொடியோடு சரணடைந்த புலித்தேவன், நடேசன், றமேஷ் உள்ளிட்ட புலிகளின் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்று கூறப்பட்டது. ஆனாலும் அவர்கள் சண்டையின் போதே உயிரிழந்தனர் என இப்போது அரசு கற்பூரத்தைக் கொளுத்திச் சத்தியம் செய்கிறது.

எல்லாமே நடந்து முடிந்துவிட்டன. இந்த நிலையில் போரின்போது நிகழ்ந்த அல்லது திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட சம்பவங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு இருந்தால் மாத்திரமே நாட்டில் நல்லிணக்கம் தோன்றுவதற்கான அறிகுறிகள் மீளத்தென்படலாம். அவ்வாறில்லாமல் நாம் எதுவுமே செய்யவில்லை. எல்லாவற்றையும் புலிகளே செய்தார்கள் என அரசு பூச்சாண்டி காட்டிக் கொண்டிருந்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வு கிட்டவரப் போவதில்லை. ஏனெனில் வெளியே நல்லிணக்கம், அமைதி பற்றிப் பேசும் அதிகாரத்தின் வாயிலிருந்து பிணநாற்றம் வீசினால் அதில் எப்படி இதய சுத்தி இருக்கமுடியும்?

கடைசிப் போரின்போது மாபெரும் மனித அழிவு நிகழ்ந்ததை எவரும் மறுக்கமுடியாது. அந்த அழிவுக்கான காரணம் புலிகளின் துப்பாக்கி முனையிலிருந்தோ, படையினரின் பல்குழலில் இருந்தோ புறப்பட்டிருக்கலாம். ஆனால் மக்கள் கொல்லப்பட்டதும், இழப்புக்களைச் சந்தித்ததும் இரண்டு வருடங்களையும் தாண்டி இன்னமும் நீதி கிடைக்காத வலியாகவே நீள்கிறது. யார் குற்றம் செய்தார்கள்? யாருக்குத் தண்டனை வழங்குவது என்ற கேள்விகளை விடவும், போரில் வெந்துபோன மக்களுக்கு இனியாவது நீதி கிடைக்குமா என்ற கேள்வியே பெரிதாக எழுந்து நிற்கிறது. அந்தக் கேள்விக்கான விடையே எதிர்காலத்தைத் தொலைத்து நிற்கின்ற, போர் விழுங்கி உமிழ்ந்த மக்களின் வாழ்வில் ஒரு வெளிச்சத்தைக் கொண்டு வரலாம்.



*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ் மக்களுக்கு இன்று துக்கதினம்

இலங்கைத் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் ஒன்றான வன்னிப் பிரதேசத்தில் அரசாங்கம் நடத்திய அகோரப் போர் - தமிழ் மக்களைப் பல்லாயிரக்கணக்கில் கொன்றொழித்த போர் - முடிவுற்ற நாளின் இரண்டாவது வருடம் இன்று பூர்த்தியாகிறது.

இலங்கை அரசாங்கம் இந்த நாளை வெற்றி நாளாகக் கொண்டாடுகிறது. இதே தினத்தை இலங்கையில் வாழும் தமிழர்கள் மட்டுமின்றி அகில உலகத் தமிழ் மக்களும் தமிழ்த் தேசியத் துக்க நாளாக, பலி கொள்ளப்பட்ட ஆன்மாக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நாளாக - துக்க தினமாகக் - கொண்டு அஞ்சலி செய்கின்றனர்.

தாம் வெற்றிகொண்டுவிட்டதாக அரசாங்கம் புளகாங்கிதம் கொள்ளும் வன்னிப் போரில் தமிழ் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர் என்பது உலகறிந்த ஒன்று.

போரில் கொல்லப்பட்ட மக்களில் மிகப் பெரும்பாலானோரைப் புதைக்கவோ, சமயாசார முறைகளின் பிரகாரம் அந்திமக் கிரியைகள் செய்யவோ விடாமல் உறவினர்களைக் குண்டுகளும் ஏவுகணைகளும் துரத்தியமை சர்வதேசம் அறிந்த சங்கதி.

தமது உயிருக்கு உயிரான இரத்தச் சொந்தங்களின் இழப்புக்களைத் தாங்க முடியாத பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள், உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு நடமாடும் பிணங்களாக மாறி, நாள்களைக் கழிப்பது போர் விளைவித்த பெரும் நாசங்களில் ஒன்று.

குடும்பத் தலைவர்களை, கணவர்மாரை, மனைவியரை, பிள்ளைகளை, சகோதர சகோதரிகளை இழந்த சோகத்திலிருந்து தாள முடியாமல் கடந்த இரண்டு வருடங்களாக விநாடிக்கு விநாடி, அணு அணுவாகச் செத்துக் கொண்டிருக்கும் எமது உறவுகள் பல்லாயிரம்.

மனிதாபிமானமும், மனிதநேயமும் செத்துப்போயுள்ள நாட்டில், இறந்து போன - இல்லை, இல்லை கொலையுண்ட - மக்கள் குறித்து பரிதாபம் கொள்ளும் நிலையில் அரசு இல்லை. கழிவிரக்கம் காட்டும் பண்பையேனும் பார்க்கமுடியவில்லை.

தனது அங்கங்களில் ஒன்றான இராணுவம் போர்க் குற்றங்கள் புரிந்தது என்ற ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது தவறு என்று நிலைநாட்ட மூச்சுடனும் வீச்சுடனும் ஓடியோடிக் குலுங்கிக் குலுங்கிச் செயற்படும் அரசு -

தமது உறவுகளை இழந்து, தமது வாழ்வு சிதைந்துள்ள லட்சக்கணக்கான தமிழ் மக்களின் வாழ்க்கையை, வாழ்க்கைநிலையைச் சீராக்குவதற்கு அவசர நிலையாகக் கருதியோ, தானே உண்டாக்கிய (செயற்கை) அனர்த்த நிலையாகக் கருதியோ செயற்படுவதாக இல்லை.

ஆட்டைக் கடித்தேன், மாட்டைக் கடித்தேன் என்ற நிலை தழுவி, மீளக்குடியமர்விலும் சரி, ஏனைய வாழ்வாதார வசதிகளைச் செய்வதிலும் சரி அரசு, ஆர் சோரக் கருமமாற்றி வருகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன்டியாகச் சகல வசதிகளையும் கொட்டிக்கொடுக்க முடியாது; போருக்கு முந்திய நிலையைக் கொண்டு வருவதற்குரிய உட்கட்டுமானங்களை மீள்குடியமர்ந்த பதினெட்டு மாதங்களில் செய்துவிட முடியுமா? - என்று கேட்கும், கூறும் நிலையிலேயே அரசு உள்ளது.

அதாவது, முள்ளிவாய்க்கால் இராணுவ நடவடிக்கையின் பின்னர் - அது இடம்பெற்று இரண்டு வருடங்கள் கழியும் தறுவாயிலும் -

அதனால் உண்டான கோர விளைவுகளை மனிதிற் கொண்டேனும், அவற்றிலிருந்து மக்களை ஒரு சில சத வீதமேனும் மீட்டெடுக்கும் அளவை எட்டவில்லை. அரசின் மீள்குடியமர்வுச் செயற்பாடுகளும், புனர்வாழ்வு, புனருத்தாரண நடவடிக்கைகளும் அடிமட்டத்திலேயே இன்னமும் கிடக்கின்றன.

அது ஒரு புறமிருக்க -

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை விவகாரத்தை அடக்கி வாசிக்கச் செய்யும் உத்திகளில் ஒன்றாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் திடீர் அக்கறை கொண்டு -

ஆரம்பித்திருக்கும் அரசியல் தீர்வுகாணும் முயற்சி என்ற நகர்வும் தமிழ் மக்களுக்கு அதிருப்தி தரும் நிலையிலேயே மெது மெதுவாக நகர்கிறது!

தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தைக் காணப்போவதாகத் தெரிவித்து, அதன் பொருட்டு ஓர் ஆலோசனைக் குழுவை நியமித்த போதிலும், அதன் இலக்கை குறுகிய காலத்தில் எய்துவதற்கான முன்னோட்டமோ அறிகுறியோ சிறு கீற்றாகவேனும் தெரியவில்லை.

மனிதாபிமான நடவடிக்கை மூலமே வன்னிப் பிரதேசத்தைப் பயங்கரவாதத்திலிருந்து மீட்டோம் என்று சொல்லிக்கொண்டு, தமிழ் மக்களின் உயிரிழப்புகளை நியாயப்படுத்துவதில் காலத்தை நகர்த்தும் அரசாங்கம், தமிழர்களின் அரசியல் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் நேர்மையான அக்கறை கொள்ளுமா என்பது பென்னம்பெரிய கேள்விக்குறியாக ஓங்கி எழுந்து நிற்கிறது!

எதுவோ, எங்கள் உறவுகளின் இழப்பை நினைவு கூர்வதற்கு இன்றைய நாளைத் துக்க தினமாகக் கொண்டு அவர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காகப் பிரார்த்திப்போமாக. அவர்களின் ஆன்மாக்கள் அமைதி கொள்ள இறைஞ்சுவோம். எங்களுக்குள்ளே உள்ள உளவியல் சுமையைக் குறைப்பதற்கு அது ஓரளவிலேனும் உதவும்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும், மாண்டார் வருவரோ இந்த மாநிலத்தே - என்ற சான்றோர் வாக்கு, எங்கள் மனவேதனையை ஓரளவிலேனும் குறைப்பதாக.

# உரிய பதிவுகள் எவையும் இல்லாமல் குடாநாட்டில் 56 தனியார் மருந்தகங்கள்

## சுகாதாரத் திணைக்களப் புள்ளி விவரங்களில் தகவல்

யாழ்ப்பாணம், மே 18

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவுரீதியாக 91 தனியார் மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள் 2010 ஆம் ஆண்டில் 35 தனியார் மருந்தகங்களே பதிவு செய்யப்பட்ட மருந்தகங்களாக உள்ளன எனவும், ஏனைய 56 தனியார் மருந்தகங்களும் பதிவுசெய்யப்படாமல் இயங்கிவருவதாகவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக உணவு மருந்துக் கட்டுப்பாட்டுப் பிரிவின் புள்ளி விவரங்களில் இருந்து தெரியவருகின்றது.

வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் இயங்கி வரும் மூன்று தனியார் மருந்தகங்களில் இரண்டு மருந்தகங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன.

வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவில் ஐந்து தனியார் மருந்தகங்கள் இயங்கிவருகின்றன. அவற்றில் மூன்று மருந்தகங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன.

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பத்து மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. இவைகள் எவையும் உரிமையாளர்களால் பதிவு செய்யப்படாத நிலையிலேயே இயங்கிவருகின்றன.

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் ஒன்பது மருந்தகங்கள் உள்ளன. இவற்றில் நான்கு மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஐந்து மருந்தகங்கள் இயங்கிவருகின்றன. இவற்றில் நான்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. வடமராட்சி தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் ஆறு மருந்தகங்கள் இயங்குகின்றன. மூன்று மருந்தகங்கள் மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் ஆறு மருந்தகங்கள் இயங்குகின்றன. இவற்றில் மூன்று பதிவு செய்யப்பட்டுள்ளன. வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஏழு மருந்தகங்கள் இயங்கிவருகின்றன. இவற்றில் ஒரு மருந்தகமே பதிவு செய்யப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பத்து மருந்தகங்கள் இயங்கிவருகின்றன. இவற்றில் மூன்று மருந்தகங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

யாழ். பிரதேச செயலர் பிரிவில் இருபத்தொன்பது தனியார் மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 12 மருந்தகங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

தீவகம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் ஒரேயொரு மருந்தகம் இயங்கிவருகின்ற போதிலும் இந்த மருந்தகம் பதிவு செய்யப்படாத நிலையிலேயே இயங்கிவருவதாகவும் இந்தப்புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

(த-300)

# வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கு வைத்திய நிலையம்

## விரைவில் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 18

வலி. தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் கால்நடை வைத்திய நிலையம் விரைவில் அமைக்கப்படவுள்ளது. வலி. தென்மேற்குப் பிரதேச செயலர் இதற்கான துரித நடவடிக்கையை எடுத்துள் ளார்.

கால்நடை வைத்திய நிலையம் அமைப்பதற்கான காணியை முன்னாள் மாவட்ட நீதிபதியும் சமாதான நீதிவானுமாகிய இரா. வசந்த சேனன் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடலியடைப்பிலும் மேற்படி பணிமனையை அமைப்பதற்கு காணி வழங்கமுடியும் என அப்பகுதி பொது அமைப்புக்கள் கூறியுள்ளன.

முன்னாள் மாவட்ட நீதிபதி இரா. வசந்த சேனன் கட்டுடை கமநல கேந்திர நிலையத்துக்கு அருகில் உள்ள பிரதேசத்தில் 4 பரப்புக் காணியை இதற்கென இலவசமாக வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-302)

# உப தபால் அதிபர் பரீட்சையில் வட மாகாணத்தில் 7 பேர் சித்தி

யாழ்ப்பாணம், மே 18

அன்மையில் நடைபெற்ற உப தபால் அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சையில் வட மாகாணத்தில் இருந்து ஏழுபேர் சித்தி பெற்றுள்ளனர். இவர்களில் மூன்று பேர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

யாழ். மாவட்டத்தில் இருந்து 200 க்கும் மேற்பட்டோர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இதில் மூன்று பேர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர்.

யாழ். பிரதம தபாலகத்தில் இருந்து தெ. வேழவேந்தனும் மானிப்பாய் தபாலகத்தில் இருந்து தெ. ஈஸ்வரனும், திருநெல்வேலி உப தபாலகத்தில் இருந்து எஸ். சயந்தனும் இந்தப் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர்.

எஸ். விக்கிரமசிங்க (வவுனியா தபாலகம்), பி. சசிதரன் (உடையார் கட்டு தபாலகம்), திருமதி எஸ். வளர்மதி (முள்ளி வாய்க்கால் தபாலகம்), எஸ். அருள்குமரன் (பளைத் தபாலகம்)ஆகியோரே வடமாகாணத்தில் சித்தி பெற்றுள்ள ஏனையவர்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது.

(த-26)

# பன்றித்தலைச்சி அம்மனுக்கு கண்டாமணி

சாவகச்சேரி, மே 18

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயிலுக்கு லண்டன் நாட்டில் இருந்து கண்டாமணி எடுத்துவரப்பட்டுள்ளது.

உரும்பிராயைச் சேர்ந்த அம்பாள் அடியவர் ஒருவர் தனது உபயமாக ஆலய தர்ம கர்த்தா சி. சிவகுருவிடம் கண்டாமணியை கையளித்துள்ளார்.

சுமார் 600 கிலோ நிறையைக் கொண்ட வெண்கலத்தால் தயாரிக்கப்பட்ட இந்தக் கண்டாமணி லண்டனில் இருந்து விமான மூலம் கொழும்புக்கு எடுத்து வரப்பட்டு பின்னர் ஆலயத்துக்கு லொறி மூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

தற்பொழுது ஆலயத்தில் கோபுரமும் அதனுடன் மணிக்கோபுரமும் கட்டப்பட்டு வருகிறது. இந்தக் கோபுரம் சுமார் 45 அடி உயரம் கொண்ட 5 தளங்களைக்கொண்டு அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. இந்த ஆலய கோபுரமானது அடுத்த வருடம் பங்குனித் திங்கள் உற்சவத்துக்கு முன்னர் வேலைகள் பூர்த்தியாகும் எனவும் கருதப்படுகிறது. இதேவேளை ஆலய உள் வீதியில் சுற்றுப்புற கூரைவேலைகளும் நிறைவு பெற்றுவருகிறது.

(த-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
18 மே 2011 புதன்கிழமை

# இலங்கையில் குழப்பம் செய்யாதீர்; உலகுக்கு வியட்னாம் வேண்டுகோள்

கொழும்பு, மே 18

இலங்கையில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு உலக நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வியட்நாம் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

மாறாக நாட்டில் குழப்ப நிலைமைகளை ஏற்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் முனைப்புக் காட்டக்கூடாது என இலங்கைக்கான வியட்நாமின் புதிய தூதவர் டொன் சின் தன்ஹா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் நம்பகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியுள்ள அவர் இந்த விடயம் குறித்து இலங்கை அரசும் நிதானமாகச் செயற்பட வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.ஐக்கிய நாடுகள் அமைப்பும் இலங்கையும் பிரச்சினைகளுக்கு சுமூகமான முறையில் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கும் எனத் தமது நாடு எதிர்பார்க்கின்றது என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக இலங்கை ஈட்டிய வெற்றி பாராட்டுக் குரியது எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர் யுத்தத்தின் முடிவு சமாதானத்தை மட்டுமன்றி ஏனைய நாடுகளுடான உறவுகளை விஸ்தரிப்பதற்கும் வழிகோலியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் வியட்நாமிற்கும் இடையிலான உறவு நீண்டகாலமாக நீடித்து வருகின்றது. அந்த உறவுக்ளை மேலும் வலுப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ச)

# வெசாக் தினத்தில் பிறந்த குழந்தைகளுக்கு மக்கள் வங்கியின் சேமிப்புக் கணக்கு

கொழும்பு,மே18

2600 ஆவது புத்தரின் பிறந்த தினமான வெசாக் பௌர்ணமியை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை பிறந்த குழந்தைகளுக்கு இரண்டாயிரம் ரூபா பண வைப்புடன் ''இசுறு உதான'' சேமிப்புக் கணக்கொன்றை சன்மானமாக வழங்க மக்கள் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய நேற்று செவ்வாய்க்கிழமை பிறந்த சகல குழந்தைகளின் பெயரிலும் தலா 2 ஆயிரம் ரூபா வைப்புடன் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் ''இசுறு உதான'' சேமிப்புக் கணக்குப் புத்தகமொன்றை சன்மானமாகப் பெற்றுக்கொள்ளலாம் என மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ.கருணாஜீவ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ தலதா மாளிகையினதும் மக்கள் வங்கியினதும் ஒன்றிணைப்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திட்டத்துக்கு ஸ்ரீ சம்புத்த ராஜ விகாரையின் மனித நலன் அபிவிருத்தி மன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான வண.சங்சுத்கம ஞானாரத்னதேரர் இணைப்பாளராகச் செயற்பட்டார். (ச-5)

# புத்தர் பிறந்த தினத்தை முன்னிட்டு விகாரைகளுக்குத் தென்னங்கன்று

பேருவளை, மே 18

புத்தரின் பிறந்த தினத்தை முன்னிட்டு தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு நாடு முழுவதுமுள்ள விகாரைகளுக்கு தென்னங்கன்றுகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஒரு விகாரைக்கு 10 தென்னங்கன்றுகள் வீதம் 26,000 தென்னங்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படும்.

இது தொடர்பாக விகாரைகளின் விவரம் பிரதேச செயலக மட்டத்தில் திரட்டப்பட்டுள்ளது. தெங்கு செய்கைக்குத் தேவையான பசளையும் பெற்றுக் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# முள்ளிவாய்க்கால் நினைவுநாள் வவுனியாவில் உணர்வு பூர்வமாக

வவுனியா,மே18

கடந்த 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் மரணித்த உறவுகளின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வினை நடத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒழுங்குகளைச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அஞ்சலி நிகழ்வு இன்று புதன் கிழமை வவுனியா நகரசபையின் பழைய மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதில் வன்னிப் பிராந்தியத்தில் உள்ள அனைவரும் கலந்துகொண்டு தமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

வன்னியில் கடந்த 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் மரணித்த எமது உற வுகளுக்கு அஞ்சலி செலுத்துவது எமது தலையாய கடமையா கும்.

ஆகவே எமக்கு எத்தகைய கடமைகள், வேலைப்பளுக்கள் இருப்பினும் அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைத்து நிற்கின்றோம் என்றனர். (க-601)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**ஜெனற்மேரி செல்வம்**

மலர்வு 16.07.1969
உதிர்வு 18.05.2010

அம்மா அன்புதனை அருவியாக்கி
பண்புதனை சிகரமாக்கி
பார் போற்ற வாழ வைத்த
என் அன்பின் சிகரமாய் விளங்கும்
பாசமிக்க அன்னையை
நினைவு கூருகின்றோம்.

இந்நாளில் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.11, சுவாட்ஸ் லேன்,
சுண்டுக்குளி.
(4313) (38)

அன்புடன்:
கணவர், பிள்ளைகள், உறவினர்கள்.



## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சுந்தரம்பிள்ளை கதிரேசபிள்ளை**

திதி: அபரபக்க துதியை

மண்ணில் 27★12★1948
விண்ணில் 29★05★2010

அன்புத் தந்தையே தெய்வமே!
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம். துயரம்
அன்புடனே அறிவுரைகள் கூறி
அல்லும் பகலும் அரும்பாடுபட்டு
அகிலத்தில் நாம் வாழ வழி தந்தீர்
ஆண்டு பல சென்றாலும் உங்கள்
அருமை நினைவுகள் நீங்காது.

*பழைய பாடசாலை வீதி,
கல்வயல், சாவகச்சேரி.* (1680)

குடும்பத்தினர்.


# நான்கு அரச நிறுவனங்களை குத்தகைக்கு வழங்கத் தீர்மானம்

கொழும்பு,மே18

செரமிக் கூட்டுத்தாபனம், றப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம், கந்தளாய் மற்றும் எம்பிலிப்பிட்டியவிலுள்ள இரு சீனித் தொழிற்சாலைகள் ஆகியவற்றை தனியார் துறையினருக்கு குத்தகைக்கு வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

10பில்லியன் ரூபாவுக்கு மேல் பெறுமதியான சொத்துக்களைக் கொண்ட, நஷ்டத்தில் இயங்கும் இந்த நிறுவனங்களை 30 வருட கால குத்தகைக்கு வழங்கவும் சுமார் 1000 ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் வில்லி கமகே தெரிவித்தார்.

இந்த நிறுவனங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் அடுத்த 3 அல்லது 4 மாதங்களில் பூர்த்தியாகும் என இந்த [illegible] தெரிவித்துள்ளார். (ச)


## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 807
சீட்டிழுப்பு திகதி 16.05.2011

எழுத்து: R
வெற்றி இலக்கங்கள்: 13 15 16 21

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 14,336,204.80 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000/= | 304 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000/= | 602 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 100/= | 15525 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரு. 40/= | 8911 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20/= | 221289 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20/= | 34867 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,482,060.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 14,874,036.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6 மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk



## மரண அறிவித்தல்

### குமாரசாமி விஜயராசா (விஜி, கிளி)



சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி விஜயராசா (06.05.2011) வெள்ளிக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் குமாரசாமி - சிவக்கொழுந்து தம்பதியரின் அருமை மகனும் பிரமிளாவின் அன்புக் கணவரும் மதுசாளன், யாதுளன் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் சி.தர்மலிங்கத்தின் மருமகனும் காலஞ்சென்ற வ.சுப்பிரமணியம் அவர்களின் பெறாமகனும் குணரட்ணம், சோபனாம்பிகை, கௌதா (பிரதேச செயலகம், சாவகச்சேரி), யோகராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரரும் கலாதேவி (பிரதேச செயலகம், சாவகச்சேரி), ஸ்ரீகாந்தன் (துளசிகா மருந்தகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் அன்னம்மா, சுந்தரம்மா, சகுந்தலாதேவி (லண்டன்) ஆகியோரின் பெறாமகனும் கந்தசாமியின் மருமகனும் மதீசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி, தரம்-7 மாணவன்), நிலானி (திருநெல்வேலி, இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, தரம்- 4, மாணவி) ஆகியோரின் ஆசை மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.05.2011) புதன்கிழமை சுவிற்சர்லாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தொ.பே.: 0772147589.
(1679) (38-19.-20)

தகவல்:
வ.குமாரசாமி (தந்தை).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. படைக்கு இலங்கையிலிருந்து பொலிஸார்

கொழும்பு, மே 17

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையிலுள்ள பொலிஸ் பிரிவுகளுக்காக இலங்கையைச் சேர்ந்த நூறு அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதற்காக நடைபெற்ற நேர்முகத் தேர்வில் சுமார் 700 பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டு அதிகாரிகளால் இந்த நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரச்சினைக்கான தீர்வு உள்நாட்டிலேயே உள்ளது இப்படிக் கூறுகிறார் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம்

வவுனியா,மே18

இந்த நாட்டில் உள்ள பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வு உள்ளது. அந்தத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கின்ற மேசையில் நாம் இருந்தால் தீர்வு தானாகவே வரும். ஏனெனில் நாம் நடுநிலை தவறாதவர்கள். யாருக்கும் எங்களை அடகு வைத்து எதனையும் அடைய விரும்பாதவர்கள்.

இவ்வாறு தெரிவித்தார் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம்

நேற்றுமுன்தினம் மாலை வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற கட்சியின் 23 ஆவது பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடரந்தும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு-

நாடளாவியரீதியில் கட்சி புனரமைப்பு அவசியம், கடந்த 11 வருடகாலம் கட்சியை வழிநடத்தி வந்துள்ளேன். தொடர்ந்தும் வழி நடத்த அனைவரின் ஒத்துழைப் பிணையும்கேட்டுக்கொள்கின்றேன்.

பிராந்திய வல்லரசுகளின் போட்டிக் களமாக எங்களுடைய நாடு இலக்காகியுள்ளது. இது இன்று நேற்றல்ல எப்போதோ ஆரம்பமாகிய விடயம். அது இன்னமும் தொடரத்தான் போகின்றது.


அந்த நிலையில் ஒரு சமூகத்திற்கு மட்டும் என்று எந்த தலையீடு இருக்கமுடியாது. அது எந்த வல்லரசாக இருந்தாலும் சரி அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வைத்தான் அவர்களால் முன்மொழிய முடியும். அது மட்டும் தான் வாழ்க்கைக்குத் தீர்வாக அமையும். ஒரு தலைப்பட்சமாக தீர்வை முன்வைத்து விட்டு ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னால் சுனாமி கட்டமைப்புக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும். வேறு எந்த அங்கீகாரமும் கிடைக்க போவதில்லை - என்றார்.(ச)

## ஆந்தை வைத்திருந்தவருக்கு அபராதம்

கண்டி,மே18

அபூர்வ ரக ஆந்தைகள் இரண்டை கூண்டுகளில் அடைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபரொருவருக்கு கண்டி மாவட்ட நீதிவான் யூ.பீ. கரலியத்த 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து கடந்த வியாழக் கிழமை தீர்ப்பளித்தார். பிலிமத்தலாவை பிரதேசத்தில் உள்ள வியாபாரி ஒருவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட இரண்டு ஆந்தைகளையும் வன ஜீவராசி திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச-5)



புத்தபெருமானின் ஜெயந்தி தினத்தை ஒட்டி ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கங்காராம விகாரையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மத வழிபாடுகளில் ஈடுபட்டார்.

## வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களை அனுப்புவதைக் குறைக்கத் தீர்மானம்

கொழும்பு, மே18

அரபு நாடுகளுக்கும் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் பணிப் பெண்களை வேலைக்கு அனுப்பி வைப்பதைப் படிப்படியாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நலன்புரி சேவைகள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள் ளார்.

துபாய் நகரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், பயிற்சியளிக்கப்பட்டவர்களை மாத்திரமே பணிப் பெண்களாக அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இ.தேவேளை, பயிற்சிப் பணிப் பெண்ணாக வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெறுவோர் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(சி)

## பொன்சேகாவுக்கு ஓய்வு அவசியம்

### மருத்துவர்கள் ஆலோசனை

கொழும்பு,மே18

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் ஓய்வு அவசியமென விசேட வைத்திய அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான சரத்பொன்சேகாவின் சுவாசப்பைக்கு சேதம் ஏற்பட்டுள்ளமையால் தூசுகளை சுவாசிப்பது உகந்ததல்ல என்று வைத்திய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சிறைச்சாலையில் தூசு இல்லாத இடத்தில் சரத் பொன்சேகாவை தங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சில நாள்களாக சுகயீனமுற்றிருந்த சரத் பொன்சேகா நேற்றுமுன்தினம் விசேட வைத்தியர் வஜிர தென்னகோனால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். சுகயீனம் காரணமாக தனி யார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட சரத் பொன்சேகா விசேட வைத்திய சோதனை உட்படுத்தப்பட்ட பின்னர் அறிக்கை நேற்று வெளியானது. குறித்த வைத்திய அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்து பொன்சேகாவிற்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்த்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் கூறினார். (சி)

## இலங்கையில் அறுபது சதவீதக் கட்டடங்கள் தர நியமத்தின்படி நிர்மாணிக்கப்படவில்லை

கொழும்பு,மே18


இலங்கையில் 60 சதவீதமான கட்டடங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவமைப்பு, தரநியமங்கள் மற்றும் விதிமுறைகளின்படி நிர்மாணிக்கப்படவில்லை எனவும் அவற்றில் வசிப்பவர்கள் சுகாதார ஆபத்தை எதிர்கொள்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மொரட்டுவை பல்கலைக் கழகத்தின் கட்டட வடிவ மைப்புத் திணைக்களத்தின் பதில் தலைவரான பேராசிரியர் ஹார்சா முனசிங்க இது தொடர்பாக கூறியவை வருமாறு:-

நாட்டில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான கட்டடங்கள் தொழிற்சார் நிபுணர்களால் வடிவமைக்கப்பட்டவையல்ல. அதனால் அவை முறையான தரநியமத்தின்படி நிர்மாணிக்கப்படவில்லை. முறையற்ற விதமாக வடிவமைக்கப்பட்ட கட்டடங்களில் நவீன சந்தைகள், வங்கிகள் மற்றும் நாளாந்த தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் பல பொதுக்கட்டடங்களும் அடங்குகின்றன - என்றார்.

## நிபுணர் குழு அறிக்கையை எதிர்க்கப் பொன்சேகா

### அரசுக்கு ரணில் ஆலோசனை



கொழும்பு, மே 18

''ஐக்கிய நாடுகளின் சர்ச்சைக்குரிய நிபுணர் குழு அறிக்கைக்கு பதிலளிக்கும் நடவடிக்கைகளில், ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலை வரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவை அரசு பயன்படுத் திக்கொள்ள வேண்டும்.'' - என்று அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதேவேளை, சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறும் அவர் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் நேற்று முன்தினம் சரத் பொன்சேகாவை நேரில் சென்று பார்வையிட்டனர்.(சி)

## வெள்ளவத்தையில் புதிய தமிழ்த் தேசிய பாடசாலை

### ஜனாதிபதியிடம் திருமதி விஜயகலா எம்.பி.கோரிக்கை

கொழும்பு, மே18

கொழும்பு, வெள்ளவத்தையில் புதிய தமிழ்த் தேசியப் பாடசாலையை அமைப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கைக் கடிதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அவர் கையளிக்கவுள்ளார்.

கொழும்பு - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் வைர விழா நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடமே இதற்கான கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

''கொழும்பில் பெருமளவு தமிழ் மக்கள் வாழ்ந்துவரும் நிலையில் தேசிய பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும். எனது கணவர் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தபோது 2007 ஆம் ஆண்டில் இதற்கான நடவடிக்கையினை எடுத்திருந்தார்.

இதற்கென வெள்ளவத்தையில் இடமும் தெரிவு செய்யப்பட்டு கல்லூரியை அமைப்பதற்கான அங்கீகாரமும் தங்களால் வழங்கப்பட்டிருந்தது.

இந்தக் கல்லூரிக்கான கட்டடத்துக்கு தங்களால் அடிக்கல் நடுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இராமகிருஷ்ண மிஷனுக்கு அருகில் கடற்கரையில் இந்தப் பாடசாலை அமைக்கப் படவிருந்தது. ஆனால் சில காரணங்களால் இந்த முயற்சி பிற்போடப்பட்டது.'' - என்று விஜயகலா தெரிவித்துள்ளார்.

இந்தப் பாசாலைக்கு வேண்டுமானால் மஹிந்த தேசிய பாடசாலை எனப் பெயரிடவும் முடியும் [illegible] வர் குறிப்பிட்டுள்[illegible] (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
18 மே 2011 புதன்கிழமை

# இந்தியக் கல்விக் கண்காட்சி பொது நூலகத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 18

இந்தியத் தூதரகத்தின் ஆதரவுடன் இரண்டு நாள்கள் இடம்பெறும் மாபெரும் இந்தியக் கல்விக் கண்காட்சி யாழ்.பொது நூலக மண்டபத்தில் நேற்றுக் காலை ஆரம்பமாகியது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்ணம் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நாடாவை வெட்டிக் கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார்.

இந்தியன் ஈ.டி.சி.ஐ.எஸ். அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கண்காட்சிக்கான ஏற்பாடுகளை லங்கா எக்ஸிபிசன் அன்ட் கொன்பரன்ஸ் சேர் விசஸ் நிறுவனம் மேற்கொண் டுள்ளது. இந்தக் கண்காட்சியில் விருந்தினர்களாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரி வெங்கடாச்சலம் மகாலிங்கம், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஜோய் மகிழ் மகாதேவா, இந்தியாவின் ஈ.டி. சி.ஐ.எஸ். நிறுவன முகாமைத்துவப்பணிப்பாளர் அஞ்சு வேனார்ஜி, யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் 12 முன்னணிக் கல்லூரிகள் இந்தக் கண் காட்சியில் பங்கேற்றுள்ளன. இந்தக் கல்லூரிகளுடன் தொடர்புடைய சுமார் 50 கல்வி நிலையங்கள் கண்காட்சியில் பங்கேற்றுள்ளன.

மருத்துவம், மருந்தியல், முகாமைத்துவம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம், விவசாயம், தாதியர்கற்கை, தோட்டநிர்வாகம், ஆங்கில மொழி போன்ற துறைகளில் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரி, கலாநிதிப் பட்டப் படிப்பு ஆகியவற்றை மேற்கொள்ள விரும்புபவர்களுக்குத் தேவையான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் இந்தக் கண்காட்சியில் வழங்கப்படுகின்றன.

இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகளைப் பற்றி நேரடியாக அறிந்து கொள்ளக் கூடியதாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுப் பாடசாலை மாணவர்கள், மேற்படிபுக்காகக் காத்திருக்கும் மாணவர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டனர். (த-14)



இந்தியத் தூதரகத்தின் ஆதரவுடன் யாழ். பொது நூலக மண்டபத்தில் நேற்று ஆரம்பமான இந்தியக் கல்விக் கண்காட்சியை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்ணம் நாடாவை வெட்டித் திறந்து வைக்கின்றார். அருகில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரி வெ.மகாலிங்கம், அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ஆகியோர் உள்ளனர். (த-14)

# மின்சார வயரில் சிக்கியதால் தேரின் முடி கீழே வீழ்ந்தது!

## பக்தர்கள் காயமின்றித் தப்பினர்

யாழ்ப்பாணம், மே 18

ஆலயத் தேர்முடி மின்சார வயரில் சிக்கி முறிந்து வீழ்ந்தது. எனினும், பக்தர்கள் தெய்வாதீனமாகக் காயங்கள் எதுவும் இன்றித் தப்பிக்கொண்டனர்.


இந்தச் சம்பவம் கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

விநாயகப்பெருமான் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வந்து கொண்டிருந்த வேளை, தேர் முடி மின்சார வயரில் தவறுதலாகச் சிக்கி முறிந்து கீழே வீழ்ந்தது. எனினும், பக்தர்கள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த முடி உடனடியாகச் சமய முறைப்படி தேரில் ஏற்றப்பட்டதன் பின்னர் மீண்டும் தேர் வலம் வந்தது. (த-26)

# மாட்டிக் கொண்டனர் மாட்டுத் திருடர்கள்

## கட்டி வைத்து 'நல்ல கவனிப்பு'



கைதடி, மே 18

வீடு ஒன்றில் கட்டப்பட்டிருந்த உழவு மாட்டைத் திருடி இறைச்சிக்காக வெட்டிய 6 பேரைக் கொண்ட கும்பல் ஒன்று கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை கைதடி வடக்கில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி கும்பலைச் சேர்ந்த இருவர் அந்தப் பகுதியிலுள்ள விவசாயி ஒருவரின் உழவு மாட்டைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு களவாகப் பிடித்துச்சென்று கைதடி தரவை வெளியில் வைத்து அதனை வெட்டி இறைச்சியைப் பங்குபோட்டுக் கொண்டிருந்தனர்.

அந்தவேளை, அந்தப் பகுதியில் ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் இதனைக் கண்டு அவர்கள் இருவரையும் பிடித்ததுடன் ஓட்டோ ஒன்றில் அங்கு வந்த மேலும் இருவரையும் பிடித்து நால்வரையும் கைதடி உதயசூரியன் சனசமூக நிலைய முன்றிலுக்குக் கொண்டு வந்தனர். அங்கு வைத்து நையப்புடைக்கப்பட்ட இவர்கள் அங்குள்ள மின்சாரக் கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டனர்.

இந்த வேளையில் கட்டி வைக்கப்பட்டிருந்த கும்பலில் உள்ள ஒருவரின் கைத்தொலைபேசிக்கு அழைப்பு ஒன்று வந்தது. அதில் பேசியவர் 'என்ன மச்சான் வேலை முடிந்ததா', 'வாகனத்தைக் கொண்டு வரவா' எனக் கேட்டார். இராணுவத்துக்குப் பயந்து திருடர்களும் ஆம் எனக் கூறிவிட்டனர்.

சிறிது நேரத்தில் 'ஹைஏஸ்' வாகனம் ஒன்று மாடு வெட்டிய இடத்துக்கு வந்து நின்றது. இதில் வந்த ஒருவரை இராணுவத்தினர் விசாரிக்க வாகனத்தை ஓட்டிவந்த சாரதி தப்பி ஓடிவிட்டார். எனினும் தப்பி ஓடியவரை இராணுவத்தினரும் பொது மக்களும் இணைந்து பிடித்தனர்.

இவர்களால் கொல்லப்பட்ட மாட்டின் பெறுமதி ஒரு லட்சம் ரூபா எனவும், அது தமது விவசாயத் தேவைக்கு பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும், 'பிள்ளை போல் வளர்த்த காளையை இப்படிச் செய்து விட்டார்களே' என மாட்டின் உரிமையாளரும் அவரது மனைவியும் கண்ணீர் விட்டு அழுதது அங்கு நின்ற எல்லோரையும் கவலை கொள்ள வைத்தது.

இந்தச் சம்பவம் பற்றி சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டவுடன் அங்கு வந்த பொலிஸார் திருடர்களைக் கைது செய்ததுடன் கொல்லப்பட்ட மாட்டின் உடலையும் கொண்டுசென்றனர்.

இந்தக் கும்பலினால் பயன்படுத்தப்பட்ட ஓட்டோ, ஹைஏஸ் ஆகியவற்றையும் பொலிஸார் கொண்டுசென்றனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களான ரி.அருட்செல்வம் (விசுவமடு), கே.சுவேந்திரன் (இணுவில்), கே. புஸ்பராசா (உசன்), கே.ஸ்ரீஸ்கந்தராசா (கோயிலாக்கண்டி) எஸ்.ராஜ்குமார் (கிளிநொச்சி), எம்.சாந்தன் (கிளிநொச்சி) ஆகியோர் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(த-288-121-207)

# கூட்டுறவுப் பணியாளர் 33 பேருக்குக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களில் 25 வருடங்களுக்கு மேல் சேவையாற்றி அண்மைக் காலங்களில் இளைப்பாறிச் சென்ற 33 பணியாளர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சங்கத்தின் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கத்தின் நலன்புரிச் சங்கத் தலைவர் ஆர். வதனவாசன் தலைமையில் இந்தப் பாராட்டு விழா நடைபெறும்.

இந்த விழாவில் பாராட்டு உரைகள், பணியாளர் கௌரவிப்பு, பரிசில் வழங்கல் என்பன இடம் பெறும்.

சங்கத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பல்வேறு வழிகளில் சேவையாற்றியமைக்காகவே இவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-26-135)

# கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் 10, 088 குழந்தைகள் பிரசவம்

யாழ்ப்பாணம்,மே 18

2010 ஆம் வருடத்தில் யாழ். மாவட்டத்தில் 10 ஆயிரத்து 88 குழந்தைகள் பிறந்துள்ளன. இதில் 118 குழந்தைகள் பிறக்கும் போது இறந்துள்ளன. 9 ஆயிரத்து 970 குழந்தைகள் உயிருடன் பிறந்துள்ளன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட புள்ளி விவரங்களில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் 2411 குழந்தைகளும் , யாழ்.போதனா வைத்தியசாலையில் 6972 குழந்தைகளும், யாழ் மாவட்டத்தில் இயங்கும் தனியார் வைத்தியசாலைகளில் 681 குழந்தைகளும் வீடுகளில் 24 குழந்தைகளும் பிறந்துள்ளன.

இதில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் 17 குழந்தைகளும், யாழ்.போதனா வைத்தியசாலையில் 99 குழந்தைகளும், வீடுகளில் 2 குழந்தைகளும் பிறக்கும்போதே மரணமடைந்துள்ளன என்று இந்தப் புள்ளிவிவரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது. (த-300)

# விக்கிரகங்கள் திருட்டு; பக்தர்கள் அதிர்ச்சி

யாழ்ப்பாணம்,மே 18

கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் மற்றும் பொருள்கள் களவாடப்படும் சம்பவங்கள் கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ளன.

இதனால் பக்தர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். கடந்த சனிக்கிழமை இரவு துண்டி ஐயனார் ஆலயத்தில் இருந்த பெறுமதி வாய்ந்த விக்கிரகம் ஒன்று களவாடப்பட்டுள்ளது. இந்த ஆலயம் அண்மையிலேயே பாலஸ்தாபனம் செய்யப்பட்டு நித்திய பூசைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் கடந்த சனி இரவு பெறுமதி வாய்ந்த விக்கிரகம் திருட்டுப் போயுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள இந்து ஆலயங்களில் அண்மைக் காலமாக அடுத்தடுத்து விக்கிரகங்கள் மற்றும் ஆலயப் பொருள்கள் திருடப்பட்டு வருவதால் பக்தர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். சில ஆலயங்களில் பரிபாலன சபையினர் தற்போது காவல் கடமையில் ஈடுபடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர், மருதங்கேணி பிரிவுகளில் மத்தியஸ்தர் சபைகள் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மே 18

காரைநகர், மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுகளில் மத்தியஸ்தர் சபைகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் படவுள்ளன.

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் எதிர்வரும் 25 ஆம் திகதியும், மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் எதிர்வரும் 27 ஆம் திகதியும் இதற்கான நேர்முகத்தேர்வு இடம்பெறவுள்ளதாக மத்தியஸ்தர் சபையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் ப.சனாதனசர்மா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாகவுள்ள மத்தியஸ்தர் சபைகளைப் புதுப்பிக்கும் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதன்போது இதுவரை காலமும் மத்தியஸ்தர் சபை உருவாக்கப்படாத காரைநகர், மருதங்கேணி ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் அதனை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் அண்மையில் மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை, சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மத்தியஸ்தர் சபைகளில் புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன எனவும் இணைப்பாளர் ப.சனாதனசர்மா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிராம மட்டங்களில் ஏற்படும் சிறு பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் முகமாக நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சால் உருவாக்கப்பட்டுள்ள இந்த மத்தியஸ்தர் சபைகளைப் புதிய சுற்று நிருபங்களுக்கு ஏற்ற வகையில் 3 வருடத்துக்கு ஒரு தடவை புதுப்பிக்கவேண்டும். இதன் பிரகாரம் தற்போது மத்தியஸ்தர் சபைகளைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நேர்முகத் தேர்வுகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றார். (த- 9)

# உலக வங்கிக் குழுவினர் இன்று யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், மே 18

மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய இன்று யாழ். வரும் உலக வங்கிக் குழுவினருக்குச் சமர்ப்பிப்பதற்கு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டுள்ளன என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.


இன்று புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வரும் வங்கிக் குழுவினர் முற்பகல் 9 மணியளவில் வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று அங்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு அபிவிருத்திப் பணிகள் குறித்து ஆராயவுள்ளனர்.

அதன் பின்னர் வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லும் இந்தக் குழுவினர், அங்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் தேவைகள் குறித்தும் ஆராயவுள்ளனர்.

இந்த இரண்டு பகுதிகளிலும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்களின் மதிப்பீடுகளை உரிய முறையில் பிரதேச செயலர்கள் தயாரித்துள்ளனர்.

அந்த மதிப்பீட்டு விவரங்கள் யாவும் உலக வங்கிக் குழுவினரிடம் இன்று கையளிக்கப் படவுள்ளன என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. வீதி, பாடசாலை, வைத்தியசாலை உட்படப் பல அபிவிருத்தித் திட்டங்களை உலக வங்கி இந்தப் பகுதிகளில் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

## அருட்கடாட்சம்...



அனைவருக்கும் கிடைக்கட்டும்: கொழும்புத்துறை வதிரிபீட விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. விநாயகப் பெருமான் தேருக்கு எழுந் தருளி வீதியுலா வந்து அருட்கடாட்சம் பொழியும் காட்சி இது. (த-26)

# இரவுத் திருவிழாக்களில் பக்தர்கள் தங்க நகைகள் அணிய வேண்டாம்

## ஆலயப் பரிபாலன சபையினர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 18

ஆலயங்களில் தற்போது நடைபெறும் இரவுத் திருவிழாக்களில் கலந்துகொள்ள வரும் பக்தர்கள் தங்க ஆபரணங்களை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலயங்களின் பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது குடாநாட்டில் உள்ள பல ஆலயங்களில் வருடாந்தத் திருவிழாக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

பெரும்பாலான ஆலயங்களில் தற்போது இரவுத் திருவிழாக்கள் நிறைவு பெற இரவு 10 மணிக்கு மேல் செல்கின்றன.

சில ஆலயங்களில் இரவில் விசேட இசைக்கச்சேரி நிகழ்வுகளும் இடம்பெற்று அவை நள்ளிரவிலேயே முடிவடைகின்றன.

இந்த இரவுத் திருவிழாக்களைத் தமக்குச் சாதகமாக்கித் திருடர்களும் பக்தர்களின் நகைகள் மீது தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். அண்மைக் காலங்களில் இவ்வாறு அதிக அளவிலான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதையடுத்து இரவுத் திருவிழாக்களில் கலந்துகொள்ள வரும் பக்தர்கள் தங்க ஆபரணங்களை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலயங்களின் பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பான அறிவித்தல் ஆலயங்களின் ஒலிபெருக்கிகளிலும் அடிக்கடி ஒலிக்க விடப்படுகின்றது. (த-26)

# மீளக்குடியமர்ந்த மாவிட்டபுரத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைப்பு

தெல்லிப்பழை, மே 18

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மாவிட்டபுரம் மக்களின் அடிப்படைத் தேவைகள் குறித்து உரிய உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைக்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் ஜே/231 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட இந்தச் சங்கத்தில் அந்தக் கிராம மக்களை இணையுமாறு கேட்கப் பட்டுள்ளது.

போயா விடுமுறை நாளில் கந்தரோடை தமிழ்க் கலவன் பாடசாலையிலும் ஏனைய நாள்களில் மல்லாகத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திலும் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்று சங்கச் செயலாளர் சி.நாகேஸ்வரன் கேட்டுள்ளார்.

சங்கத்தின் புனரமைப்புக் கூட்டத்தில் கீழ்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் - எ.சின்னத்தம்பி, செயலாளர் - சி.நாகேஸ்வரன், பொருளாளர் க.றமணன், உப தலைவர் - திருமதி கு.சறோஜா தேவி, உபசெயலாளர் - க.சபேசன், பேசகர்கள் - சு.சுப்பிரமணியம், ஜே/231 கிராம சேவையாளர்.

எட்டுப்பேர் அடங்கிய நிர்வாகக்குழுவும் தெரிவுசெய்யப் பட்டது. (ஐ)

## ஆவணங்கள் எவையும் இன்றி

# மது போதையில் மோ.சைக்கிள் செலுத்திய கொடிகாமம் வாசிக்கு ரூ. 5 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, மே 18

வாகனம் செலுத்துவதற்கான ஆவணங்கள் எதுவுமின்றி மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய கொடிகாமம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வாகன வரி, காப்புறுதி, சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவை இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தினார் என்று கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை, சாரதி அனுமதிப் பத்திரமின்றி மது போதையில் வாகனம் செலுத்திய சாவகச்சேரி வாசிக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-207)

# சிறுப்பிட்டியில் மருத்துவ முகாம்

அச்சுவேலி, மே 18

சிறுப்பிட்டி ஜனசக்தி அபிவிருத்திக் கிராமத்தில் ஆஸ்மா நோய் மருத்துவ முகாம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அச்சுவேலி இலங்கை வங்கி கிளையின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள மருத்துவ முகாமில் வைத்திய அதிகாரி யமுனானந்தா தலைமையில் மருத்துவக்குழுவினர் சிகிச்சை அளிக்கவுள்ளனர்.

ஆஸ்துமா நோயாளர் மற்றும் பொது மக்கள் மருத்துவ முகாமில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு ஜனசக்தி கிராமத்தின் அபிவிருத்திக் குழுவினர் அறிவித்துள்ளனர். (த-11)

# கலை இலக்கியப் பெருவிழா போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்புத்துறை, மே 18

யாழ்.பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் நடத்தப்படும் 2011 ஆம் ஆண்டுக்கான கலை இலக்கியப் பெருவிழாப் போட்டிகளுக்கான ஆக்கங்கள் பிரதேச மக்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

கலாசார அலுவலகள் திணைக்களத்தால் நடத்தப்படும் கலை இலக்கியப் போட்டிகளுக்கு அனுப்பப்படும் ஆக்கங்களில் வெற்றிபெறும் ஆக்கம் மாவட்ட, தேசிய மட்டப் போட்டிகளுக்கு அனுப்பப்படும்.

இந்தப் போட்டிகள் பாடசாலை மற்றும் திறந்த மட்டங்களில் நடைபெறும். பாடசாலை மாணவர்களுக்கு கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளில் கட்டுரை, கவிதை, பாடல், சிறுகதை, கையெழுத்து, பாட்டு, இரசனைப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

சிறந்த மட்டத்தில் பாடலாக்கம், நாட்டார் கலைகற்றல், இலக்கிய விமர்சனம், சிறுகதைப் போட்டிகள் நடைபெறும்.

போட்டியில் பங்குபற்ற ஆர்வமுள்ளோர் யாழ்.பிரதேச செயலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவான இறையருள்...



தேர்களின் அணிவகுப்பு: சரித்திரப் பிரசித்தி பெற்றதும் நாயன்மாரால் போற்றிப் பாடப்பட்டதுமான திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றபோது திருத்தேர்கள் அணிவகுத்த அருட்காட்சி இது. (601)

# தெளிகருவிகள் இல்லாததால் அல்லல்படும் விவசாயிகள்

முல்லைத்தீவு, மே 18

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் தமது பயிர்களுக்கு கிருமிநாசினிகளைத் தெளிப்பதற்கான தெளிகருவிகள் இல்லாமையால் உரிய நேரத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் பயிர் நட்டத்தை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் ஏழை விவசாயிகளே அதிகமாக உள்ளதால் இவர்கள் தெளிகருவிகளை வாடகைக்குப் பெற்றே தமது தேவையை நிறைவு செய்கின்றனர். ஆனால் சில வேளைகளில் உரிய நேரத்தில் இவை கிடைக்காது போய்விடுவதால் மருந்துகளை விசிற முடியாத நிலையில் பயிர்கள் பாதிப்புள்ளாகின்றன. இதனால் விவசாயிகள் விளைச்சல் பாதிக்கப்பட்டு நட்டத்தை எதிர்கொள்கின்றனர்.

தற்போது இந்த விவசாயிகள் நெல், வெங்காயம், நிலக்கடலை, கோவா போன்ற பயிர்களைப் பயிரிட்டுள்ளனர். நோய்களின் தாக்கங்களிலிருந்து இவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின் கிருமி நாசினிகளை விசிறுவது அவசியமானதாகும்.

ஆகவே இனியும் காலதாமதம் செய்யாது பிற மாவட்டங்களில் தொண்டு நிறுவனங்கள் தெளிகருவிகளை வழங்கியமை போன்று தமக்கும் வழங்க வேண்டுமென விவசாயிகள் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-500)

# வவுனியாவில் சேவைக்கால பயிற்சி

வவுனியா, மே 18

வவுனியாவில் சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய சாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களே இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான இந்த நிகழ்வை வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து அலுவலக நடைமுறைகள் மற்றும் அலுவலக முறைமைகள் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையின் நிர்வாக உத்தியோகத்தர் என். கமலநாதன் விரிவுரை நிகழ்த்தினார். பொதுசனத் தொடர்பு என்னும் விடயம் தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளரும், பிரதி சுகாதார சேவைகள் நிர்வாகப் பணிப்பாளருமாகிய செல்வி ரி. உமாவும், சுகாதார முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளும் ஒழுக்க முறைமைகளும் தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர். பத்மநாதனும் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

மேலும், கடமைப்பட்டியல், கடிதம் எழுதுதல், கடித விதிகள், ஆணைச் சீட்டுக்கள் தொடர்பான விரிவுரையை வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் கே.சத்தியசீலனும், நிதிமுறைகள், நிதி நடவடிக்கை தொடர்பாக வவுனியா பொது வைத்தியசாலையின் கணக்காளர் சி.மனோகரனும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இதில் பல சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களும் கலந்து கொண்டனர். (க-501)

# விழிப்புணர்வுக் கூட்டங்கள்

முல்லைத்தீவு, மே 18

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானில் மக்களிடம் அபிவிருத்தி சார்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குப் பொறுப்பான இராணுவ உயர் அதிகாரி அகமெட் இந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற பொது மக்கள் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமையைக் கருத்தில் கொண்டு இவ்வாறான கூட்டங்களை நடத்தி வருகின்றார்.

பேராறு கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடனும் ஒத்துழைப்புடனும் கூட்டங்கள் நடைபெற்ற போது அபிவிருத்தி சார்பான கருத்துக் களை இராணுவ உயர் அதிகாரி மக்களுக்கு தெரிவித்ததுடன் அவர்களது எதிர்பார்ப்புக்களையும் கேட்டறிந்து கொண்டார். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களும் தமது கருத்துக்களை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (க-500)

# ஒட்டுசுட்டானில் கடிதங்களை விநியோகிப்பதில் சிரமம்

முல்லைத்தீவு, மே 18

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த மக்களில் பலர் தமது முழுமையான விலாசத்தை வழங்காததன் காரணமாக அவர்களுக்குரிய கடிதங்களைச் சேர்ப்பிப்பதில் சிரமங்கள் தோன்றியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இங்கு வாழும் மக்கள் தமது காணி இலக்கம், முழுப் பெயர், சரியான விலாசம் ஆகியவற்றை வழங்கத் தவறிவிட்டனர். இதனால் இவர்களுக்குரிய முக்கியமான கடிதங்களைக் கூடச் சேர்க்க முடியாத நிலையில் தபால் ஊழியர்கள் உள்ளனர்.

ஏற்கனவே இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களில் தகவல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் மக்கள் இதைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. இதனால் பாதிக்கப்படுவது இந்த மக்கள்தான். ஆகவே இனியாவது மக்கள் தமது சரியான பெயர், விலாசங்களை வழங்கி தபால் ஊழியர்களுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (க-500)

**பராமரிப்பாளர் தேவை**

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். சுயவிவரக் கோவையுடன் 19.05.2011 அன்று நேரில் வரவும். 187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திரச் சந்திக்கருகில்) 0214925154

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**வருடாந்தப் பொதுக் கூட்டம்**

திகதி : 18.06.2011
நாள் : சனிக்கிழமை
இடம் : வாகீசர் மண்டபம்
நேரம் : பி.ப. 3.30 மணி.

பழைய மாணவர் சங்க யாப்பின் பிரகாரம், தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கு வேட்பு மனுக்களும் பிரேரணைகளும் 02.06.2011 புதன்கிழமை பி.ப.1.00 மணிக்கு முன்பாகச் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு: அங்கத்தவர்கள் அல்லாத பழைய மாணவர்கள் செயலாளரிடம் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுச் சங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

சோதிவேம்படி ஒழுங்கை,
மானிப்பாய்.
18.05.2011

ந.விவேகானந்தராஜா.
செயலாளர்.
(4307)(41)

**திருமண வாழ்த்து**

wedding



உவப்புடன் ஒரு செய்தி! மகிழ்வுடன் ஒரு திருமணத்திருமுகம்
பொன்னிலங்கும் கரவருஷம் வைகாசி 4ஆம் நாள்
(18.05.2011) மன்னுகின்ற புதன்கிழமை மகிழ்வுமிகு
அனுஷ நட்சத்திரம் துவிதியை திதியில் சித்தம் குளிர்விக்கும்
சிங்கலக்கின சுபவேளையில் உத்தம நாண்பூட்ட
உயர்வான நாளதனில்

எங்கள் மணிமகவு
**கேதீஸ்வரன்**
அவர்களுக்கும்

எங்கள் கனி மகவு
**கல்பனா**
அவர்களுக்கும்

உயர்வாசற்குன்று முருகன் கோயில் மண்டபம்
200A, Archway Road, London N6 5BA இல மூத்தோர்
வாழ்த்துடன் மங்களநாணேற்று விழா இனிதே நிகழ்கின்றது.
இம் மக்களநாணேற்று விழா இனிதே நிகழ எல்லாம் வல்ல
ஆயாக்கடவை ஐங்கரப்பெருமானை
வேண்டி நிற்கின்றோம்.

இவர்கள் திருமண வாழ்வில் பதினாறும் பெற்றுப்
பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
[illegible]
நிருஷா, யதுர்ஷன்.

(49,19,21)

**8 ஆவது பிறந்தநாள் வாழ்த்து**




உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியைப்
பிறப்பிடமாகவும், லண்டனை
வசிப்பிடமாகவும் கொண்ட
ஜீவராஜா-பிரியா தம்பதியரின்
ஏக புத்திரன்
**நட்ரேஷ்**
8ஆவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை லண்டனில் வசிக்கும் தந்தை
ஜீவராஜா, தாய் பிரியா, பூஅப்பம்மா, ஜெயா
மாமா உடுப்பிட்டியில் வசிக்கும் தவம் தாத்தா,
பேபி அப்பப்பா, கமலம் அம்மம்மா, நவம்
அப்பம்மா, கிரி அத்தை,கிருஷ்ணா அத்தை,
சுகி சித்தி, சிந்து சித்தி, அபி சித்தி,
ரகு மாமா, சிறீமாமா, ஸ்ரலின் மாமா
(லண்டன்), சோபி அத்தை (ஆஸ்ரேலியா),
கனடாவில் வசிக்கும் கோபி
சித்தப்பா, மாலாசித்தி மற்றும் வர்சிக் குட்டி
ஆகியோர் வீரபத்திரர் அருளால்
பல கலையும் பெற்றுப் பல்லாண்டு
வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:
தவம் தாத்தா, பேபி அப்பப்பா.

(19,21,49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி வழங்குவதில் பாகுபாடு

## நெடுங்கேணி பிரதேசத்தில் குற்றச்சாட்டு

வவுனியா, மே 18

வவுனியாவில் அரச சார்பற்ற நிறுவனங்கள் உரிய அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளாமல் மீள்குடியமர்ந்த மக்களுக்கு உதவிகளை வழங்க முனைவதால் பாகுபாடுகள் தோன்றியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக வவுனியா வடக்கின் நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் இந்த மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்ட இடங்களில் இந்த நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''அரசசார்பற்ற நிறுவனங்கள் மீள்குடியமர்ந்த மக்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கிவருகின்றன. ஆனால் அவை தொடர்பான ஆலோசனைகளைப் பிரதேச செயலரிடமோ அல்லது கிராம சேவை உத்தியோகத்தரிடமோ பெற்றுக் கொள்ளாமல் இந்த நிறுவனங்கள் செயற்படுகின்றன'' என்று நெடுங்கேணிப் பிரதேச செயலர் க.பரந்தாமன் தெரிவித்தார்.

கடந்த வாரம் நெடுங்கேணிப் பிரதேச செயலகத்தில் கிராம மட்டத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்றிலேயே பிரதேச செயலர் இந்தக் கருத்தை வெளியிட்டார். ''பல நிறுவனங்கள் உதவிகளை வழங்கும்போது ஒரே குடும்பங்கள் பல்வேறு உதவிகளைப் பெறுகின்றன. இதேவேளை பல குடும்பங்கள் எவ்விதமான உதவிகளையும் பெறுவதில்லை.

இதனால் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. பிரதேச செயலரிடமோ அல்லது கிராம சேவை உத்தியோகத்தரிடமோ ஆலோசனை பெற்றுக் குறித்த நிறுவனங்கள் உதவிகளை வழங்கும்போது இத்தகைய நிலை ஏற்படாது'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவை தொடர்பாகக் கிராம மட்டங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் விழிப்பாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட அவர், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள் என்பன வலுவுள்ளனவாக மாற்றப்பட வேண்டும் என்றார். மேலும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குச் சைக்கிள் விநியோகம் வழங்கப்பட்டதிலும் பாரபட்சம் நிலவியதாகவும் பிரதேச செயலர் சுட்டிக் காட்டினார். (க-501)

# இடைத் தங்கல் முகாமிலுள்ள பாடசாலைகள் ஒழுங்கில்லை

வவுனியா, மே 18

வவுனியா மெனிக்பாம் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள ஆனந்த குமாரசாமி இடைத்தங்கல் முகாமிலுள்ள பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் முழுமையாக இடம்பெறுவதில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் அரச சார்பற்ற பிரதிநிதிகள் கலந்து கொண்ட விசேட கலந்துரையாடலின் போதே இந்த விடயம் முகாமிலுள்ளவர்களால் தெரிவிக்கப்பட்டது.

வெளியிடங்களிலிருந்து வரும் ஆசிரியர்கள் காலம் தாழ்த்தியே பாடசாலைகளுக்கு வருகை தருகின்றனர் எனவும் அநேகமான நாள்கள் இவர்கள் விடுமுறையில் நிற்பதால் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த தவணைகளுக்கான பரீட்சைகளும் சீரான முறையில் நடைபெறவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இந்தக் கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது.

மேலும் முகாம்களிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லாத மாணவர்கள் தொடர்பாக அரச மற்றும் அரச சார்பற்ற பிரதிநிதிகள் ஊடாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது. (க-501)

# யார் உண்மைப் பொலிஸார்? விழி பிதுங்கும் முல்லை. மக்கள்

முல்லைத்தீவு, மே 18

முல்லைத்தீவில் பொலிஸார் விசாரணைக்கென வரும்போது அந்தப் பகுதி கிராம சேவை அலுவலரையும் அழைத்து வந்தால் தம்மிடையே காணப்படும் அச்ச உணர்வு நீங்கி விடுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பொலிஸாரின் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் பொலிஸார் எனக் கூறிக் கொண்டு வரும் சமூக விரோதிகளையும் உண்மையான பொலிஸாரையும் இனம் காண்பதில் மக்கள் சில வேளைகளில் சிரமங்களுக்கு ஆளாகின்றனர். இதனால் தேவையற்ற சம்பவங்கள் நிகழ்வதாகக் கூறப்படுகின்றது.

எனவே குற்றவாளிகளைக் கைது செய்வதற்கோ அல்லது விசாரணைக்கென வரும்போதோ பொலிஸார் தம்முடன் அந்தப் பகுதிக் கிராம சேவை அலுவலரையும் அழைத்து வந்தால் மக்களிடம் உள்ள சந்தேகம், பயம் என்பன நீங்குவதோடு தம்மைப் பொலிஸார் எனக் கூறிக் கொண்டு சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் சமூக விரோதிகளின் செயற்பாடுகளையும் தடுக்க முடியும்.

தற்போது திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் இந்த மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் மக்கள் பயத்துடன் தமது பொழுதைக் கழிக்கின்றனர்.

அநேகமான இடங்களில் சோதனை நடவடிக்கையெனக் கூறிக் கொண்டு மக்களை அச்சத்தில் ஆழ்த்தி விட்டுக் கொள்ளையர்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றிச் செல்கின்றனர்.

ஆகவே பொலிஸாரோ அல்லது படைத்தரப்பினரோ மக்கள் குடியிருப்புக்களுக்கு விசாரணைக்கென வரும் போது அந்தப் பகுதிக்குரிய கிராம சேவையாளரையும் அழைத்து வருமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-500)

சிறகு முளைத்த தியாக...




பொருத்தமான கவிதை: வவுனியாவில் நடைபெற்ற கவிஞர் மட்டுவில் ஞானக்குமாரனின் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் தமிழ்மணி அகளங்கன் உரையாற்றுகின்றார்.

# பாடசாலைக்கு இருமாடிக் கட்டடம்

முல்லைத்தீவு, மே 18

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கென இருமாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இந்தப் பாடசாலையில் கட்டட வளப் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இந்த இருமாடிக் கட்டடம் அமைவதன்மூலம் இந்தக் குறைபாடு நீங்கி விடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வன்னிப் பிரதேசத்திலே யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதுடன் புதிய பாடசாலைக் கட்டடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதனால் கற்றலுக்குரிய பௌதீக வளங்கள் அபிவிருத்தியடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-121)

# ஆடைத் தொழிற்சாலை அடுத்த வாரம் முதல் வவுனியாவில் இயங்கும்

வவுனியா, மே 18

ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள ஆடைத்தொழிற்சாலை அடுத்த மாதம் திறந்து வைக்கப்படுமென வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி எச்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இத்தாலி நாட்டின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்ற இந்த ஆடைத்தொழிற்சாலை மூலம் ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

''பிரதேச செயலக ரீதியாக நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு தொழிற்சாலைக்கு இளைஞர், யுவதிகள் வேலைக் கமர்த்தப்படவுள்ளனர். இதன் மூலம் வவுனியா மாவட்டத்தில் உயர்தரம் படித்த இளைஞர், யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினை ஓரளவு தீரும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (க-9)

# கிராமங்களுக்கு இடையில் பிரிவினையை ஏற்படுத்தி சிறார்களின் கல்வியைச் சீரழிக்காதீர்கள்

## ஒட்டுசுட்டான் பொது அமைப்புக்கள் வேண்டுகோள்

முல்லைத்தீவு, மே 18

கிராமங்களுக்கு இடையில் பிரிவினையை ஏற்படுத்தி முன்பள்ளிச் சிறார்களின் கல்வியைச் சீரழிக்காதீர்கள். இவ்வாறு ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கிராமப் பொது அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலே முன்பள்ளிகள் தொடர்பாகக் கிராம மக்களிடையே நிலவிவரும் கருத்து வேற்றுமையை அவதானித்த கிராமப் பொது அமைப்புக்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலே கற்சிலைமடுக் கிராமத்தில் பண்டார வன்னியன் பெயரில் முன்பள்ளியொன்று இயங்கி வந்தது. இதைப் போன்று வேறு இரு முன்பள்ளிகள் வேறு இரண்டு கிராமங்களைச் சேர்ந்த சிறார்களுக்கென இயங்கி வந்தன. யுத்தத்தின்போது இவை மூன்றும் அழிந்த நிலையில் கற்சிலைமடுப் பாடசாலையில் யுத்தத்தின் பின்னர் இவை ஒன்றாக இயங்க ஆரம்பித்தன.

தற்போது இந்த முன்பள்ளிகளின் புனரமைப்பு வேலைகளுக்கான நிதி ஒதுக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. இதனால் பண்டாரவன்னியன்கிராம மக்கள் கற்சிலைமடுவில் இயங்கி வந்த முன்பள்ளியைத் தமது கிராமத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர். இதனால் கற்சிலைமடு, 3 ஆம் கண்டம் கிராமங்களைச் சேர்ந்த சிறார்கள் அங்கு செல்வதில் சிரமங்கள் தோன்றியுள்ளன.

அத்துடன் யுத்தத்தின் பின்னர் இயங்கி வந்த முன்பள்ளி தமக்கேயுரியதெனக் கிராம மக்கள் பிரிவினைகாட்டி வாதிட்டு வருகின்றனர். கற்சிலைமடுவும், பண்டார வன்னியமும் அருகருகே அமைந்துள்ளதால் பொது இடமொன்றில் முன்பள்ளி இயங்கினால் சிறார்கள் சிரமமின்றித் தமது கல்வியைத் தொடர முடியுமென ஒருசாரார் கூறுகின்றனர். ஆனால் இதில் ஒருமித்த கருத்து நிலவுவதாகத் தெரியவில்லை. அப்படியென்றால் கிராம ரீதியாக முன்பள்ளிகளை அமைக்கலாமெனக் கருதுவோரும் உள்ளனர்.

கிராம மக்கள் வேறுபட்டு நிற்பதால் பாதிக்கப்படுவது இளஞ்சிறார்களின் கல்வியே என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டுமென ஊர்ப் பெரியவர்கள் கூறுகின்றனர்.

ஆகவே சிறார்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு விரைவில் முன்பள்ளிகள் தொடர்பாக ஒரு நல்ல முடிவு எடுக்கப்படவேண்டுமெனக் கிராமப் பொது அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணானந்தராஜா கைதுக்கு கிழக்கு முதல்வர் கண்டனம்

மட்டக்களப்பு, மே 18

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் கிருஷ்ணானந்த ராஜா பொலிஸாரால் கைது செய்யப்பட்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

எந்தவித முன்னறிவித்தலுமின்றி கிருஷ்ணானந்தராஜாவைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதற்கு எதிராகத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு சமூக சேவைகளுக்காக வந்த இவர் எந்தவிதமான தீய செயல்களிலும் ஈடுபடவில்லை. அவர் கைது செய்யப்பட்டமை தொடர்பாகத் தற்போது எமது கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் ஆகியோருடன் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொலைச் சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எட்வின் கிருஷ்ணானந்த ராஜா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கொழும்பிலிருந்து சென்ற விசேட பொலிஸ் குழுவொன்றால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஹற்றன் தொழில் அலுவலகத்தில் தமிழ்மொழி புறக்கணிப்பு

கண்டி,மே18

ஹற்றன் தொழில் அலுவலகத்தில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. இதனால் தாம் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது என்றும் தோட்டத் தொழிலாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஹற்றன் தொழில் அலுவலகத்தில் ஊழியர் சேமலாப நிதி மீளப்பெறும் படிவத்துக்கான ரசீது தனிச் சிங்களத்தில் மட்டுமே கொடுக்கப்படுகின்றது. இது தொடர்பில் தமக்குப் போதிய தெளிவு இல்லை என்றும் தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் 6 வாரங்களுக்குள் பதில் கிடைக்காவிட்டால், விசாரிப்பதற்கென வழங்கப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டால் நேரில் வந்து பேசிக்கொள்ளும்படி சிங்களத்தில் பதில் வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து நான்கு, ஐந்து மாதங்களுக்கு மேல் காத்திருக்கும் பலருக்கு பணமும் வங்கியில் வரவு வைக்கப்படவில்லை. இது தொடர்பில் எவ்வித பதிலும் இல்லை என்றும் கூறப்படுகின்றது.

எனவே, ஊழியர் சேமலாபநிதியைப் பெறுவதற்காக அலைந்து திரியும் தோட்டத் தொழிலாளர்களின் குறைபாடுகளை சம்பந்தப்பட்டவர்கள் தீர்த்து வைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடப்படுகிறது. (ச)

# வீதிகளுக்கான பெயர் பலகை வைப்பதற்கு அதிகார சபையிடம் போதிய நிதி இல்லை

திருகோணமலை,மே18

கிண்ணியா நகர சபைக்குட்பட்ட பிரதான வீதிகளுக்குப் பெயர் பலகை வைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தடையாக உள்ளனர் என்று கிண்ணியா நகர சபையின் தலைவர் டாக்டர் ஹில்மி மொகமட் தெரிவித்தார்.

இதன் காரணமாக வீதிகளின் பெயர்கள் தெரியாமல் வெளியிடங்களில் இருந்து வருவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் நிதி இல்லாமை காரணமாக அவர்களால் இதனைப் பொருத்தமுடியாத நிலைமை காணப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# நீதிமன்றத்திலிருந்து கைதி தப்பியோட்டம்

கண்டி,மே18

கண்டி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைப்பதற்கு உத்தரவிடப்பட்ட சந்தேகநபர் ஒருவர் நீதிமன்ற வளாகத்திலிருந்து தப்பியோடியுள்ளார்.

ஹெரொயின் போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை மாலை கண்டி பிரதான நீதிமன்றத்தில் முன் நிறுத்தப்பட்ட செய்யப்பட்ட இவரை விளக் கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த நிலையில் சந்தேகநபர் பாதுகாப்பு அதிகாரிகளின் பிடியிலிருந்து தப்பி ஓடியுள்ளார் என்றும் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கண்டி பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச)

# வீட்டுத் தோட்டத்தில் கஞ்சா

பதுளை,மே18

பதுளை, கஹட்டருப்ப பகுதியில் வீட்டுத் தோட்டம் ஒன்றில் வளர்க்கப்பட்டிருந்த கஞ்சா செடிகளை பதுளை குற்றத்தடுப்புப் விசேட பொலிஸ் பிரிவொன்று கண்டுபிடித்துள்ளது. இதன்போது சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

பதுளை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து கஹட்டருப்ப பிரதேசத்தைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய போதே வீட்டுத்தோட்டமொன்றில் பூச்செடிகள் வளர்ப்பது போல கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)


# நீங்கா நினைவலைகளில்...

முதலாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு





துளிராய்: 17.01.1989 | துளிராய்: 14.02.1986

விதையாய்: 27.05.2010 | விதையாய்: 14.05.2008

செல்வன்
**சண்முகநாதன் சுஜீவன்**
(பொறியியல் பீட இரண்டாம் வருட மாணவன்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

செல்வன்
**சண்முகநாதன் சஞ்சீவன்**
(மாணவன், கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி,
திருவையாறு மகாவித்தியாலயம்)

ஒரு கொடிதனில் மலர்ந்த இரு மலர்கள்
ஒரு நொடியினில் உதிர்ந்த போனதுவோ
காலத்தின் சதியினால் வாழ்வுதனை முடித்து
தூரத்தில் நீங்கள் சென்றதேனோ?
எதிர்பார்ப்புகள் எல்லாம் கலைந்து
எம் கண்மணிகள் எங்கு சென்றீரோ?
அண்ணனோடு தம்பியும் எமை
தவிக்க விட்டு சென்றதேனோ?
ஆற முடியவில்லை ஆனாலும்
உங்கள் ஆத்மா சாந்திக்காய் ஆண்டவனைத்
தொழுது நிற்கின்றோம்.

குடும்பத்தினர்.

தற்காலிக முகவரி:
முருகன் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

(49)

நிரந்தர முகவரி:
66/2, திருவையாறு, கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாலி - எல பாடசாலையில் உள்ள குடும்பங்களுக்கு காணிகளை வழங்க மாவட்டச் செயலாளர் இணக்கம்

## ஊவா மாகாண சபை உறுப்பினரின் முயற்சியால்

நுவரெலியா,மே18

மண்சரிவு அபாயம் காரணமாக ஹாலி - எல, எல்வட்டன் தோட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து 4 மாதங்களுக்கு மேலாக ஹாலி - எல மத்திய மகா வித்தி யாலயம் மற்றும் டென்சில் கொப்பேகடுவ மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் வாழ்ந்துவரும் 14 குடும்பங்களுக்குப் பாதுகாப்பான இடங்களில் காணிகளை வழங்க மாவட்டச் செயலாளர் ரோஹண கீர்த்தி திஸாநாயக்க உத்தரவிட்டுள் ளார் என ஊவா மாகாணசபை உறுப்பினர் அ. அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

எக்காரணம் கொண்டும் இவர்கள் கூடாரங்களில் அமர்த்தப் படமாட்டார்கள் என்று மாவட்டச் செயலாளர் உறுதியளித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பாடசாலைகளில் உள்ள குடும்பங்களை உடனடியாக வெளியேறுமாறு பிரதேச செயலாளர் அறிவித்ததையடுத்து இவர்கள் மத்தியில் பெரும் பீதியும், பதற்றமும் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து இப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக கடந்த 11ஆம் திகதி ஊவா மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் சீ.நந்தா மெத்திவ் மற்றும் மாவட்டச் செயலாளர் ரோஹண கீர்த்தி திசாநாயக்க ஆகியோருடன் மேற்கொண்ட பேச்சுகளையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுமார் 4 மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட மழை மற்றும் மண் சரிவுகளினால் பதுளை ஹாலி - எல பிரதேசத்தில் பாதிப்புக்குள்ளாகிய 75 குடும்பங்கள் ஹாலி - எல மத்திய மகா வித்தியாலயம், டென்சில் கொப்பேகடுவ மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தஞ்சமடைந்தனர்.

காலநிலை சீரடைந்த பின்பு சிலர் வீடுகளுக்குத் திரும்பினர். பாதிப்புக்குள்ளாகிய வீடுகளில் வசித்த 14 தமிழ்க் குடும்பங்கள் எவ்வித உதவியுமின்றி முற்று முழுவதுமாக அரசை நம்பி பாடசாலைகளிலேயே இருந்து வருகின்றன.

இவர்களைப் பாதுகாப்பான இடங்களில் சகல வசதிகளோடும் மீள்குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய தருணத்தில், மைதானத்தில் கூடாரங்களை அமைத்து தங்கியிருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, ஆளுநரையும், அரச அதிபரையும் சந்தித்து நிலைமைகளை விளக்கி, இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்பட்டது. அவ்வாறு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் ஹாலி - எல பிரதேசமும் இன்னுமொரு வண்ணி முகாமாகவே காட்சியளிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாவட்டச் செயலாளர் ஹாலிஎல, கட்டவளைப் பகுதியில் இவர்களுக்கான காணிகள் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும், அதில் வீடுகளை அமைத்துக்கொள்ள உதவிகள் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளித்துள்ளார் - என்றார். (ச)

## ஹற்றன் - நுவரெலிய நெடுஞ்சாலையை செப்பனிட்டுத் தருமாறு வேண்டுகோள்

நுவரெலியா,மே18

ஹற்றன் நகரிலிருந்து நுவரெலியா நகர்வரை செல்லும் பிரதான நெடுஞ்சாலை குன்றும் குழியுமாக உள்ளது எனப் பயணிகள் விசனிக்கின்றனர்.

வீதி சேதமடைந்துள்ளதால் சுமார் ஒரு மணிநேரத்தில் கடக்கும் தூரத்திற்கு இரண்டு மணி நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் உரிய நேரத்துக்குச் செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது. எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் மாவட்ட அரசியல் வாதிகளும் இணைந்து இந்த வீதியை விஸ்தரித்து - செப்பனிட்டுத் தரவேண்டும் எனப் பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)

அஞ்சலி......



சமாதி அடைந்த அமெரிக்க நாட்டு இந்து சமயத் துறவி ஸ்ரீமத் தந்திர தேவா மகராஜ் சுவாமிகளின் 61ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா மகராஜ் சுவாமிகளின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச)

# மட்டக்களப்பில் இருவர் கொலை செய்யப்பட்டதற்கு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி கண்டனம்

மட்டக்களப்பு,மே18

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடராக இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் மூலம் இருவர் பலியாக்கப்பட்டுள்ளனர். இக்குரூர சம்பவத்தை தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி சார்பில் நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தேசிய அமைப்பாளர் எட்வின் கிருஷ்ணானந்தராஜா அறிக்கையொன்றின் மூலமாக கண்டனம் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கடந்த 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை வாழ் மக்கள் அனைவரும் இனி ஆயுதக் கலாசாரம் முற்றுப் பெற்றுவிட்டது என எண்ணி நிம்மதிப் பெருமூச்சுடன் உள்ளனர். இவ்வேளையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடராக இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் மூலம் இருவரின் உயிர் பலியாக்கப்பட்டுள்ளதை தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் சார்பில் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கடந்த புதன்கிழமை அன்று நண்பகல் மட்டக்களப்பு லேக் வீதியில் வசித்த ஆனைப்பந்தி ஆலய அறங்காவலர் இராசமாணிக்கம் மதியழகன் இனந் தெரியாதநபர்களால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நடக்க முடியாத நிலையில் சுகவீனமுற்றிருந்த மதியழகன் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தை மனிதாபிமானமுள்ள எந்த ஒரு மனிதனாலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த அதிர்ச்சியிலிருந்து மட்டக்களப்பு மக்கள் மீள்வதற்கு முன்னர் வர்த்தகரும் மதுபான சாலை உரிமையாளருமான முருகேசு இளங்குமரன் மீது கடந்த வெள்ளிக்கிழமை அன்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் படுகாயமடைந்த அவர் சிகிச்சை பயனின்றி அன்றிரவே உயிரிழந்துள்ளார். எனவே இவ்வாறான செயல்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்தக் கொலைகள் சம்பந்தமாகப் பல்வேறு சந்தேகங்களும் அச்சங்களும் நிலவுகின்றன. ஆகவே, பொலிஸார் உண்மையான குற்றவாளிகளை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன் - இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மகப்பேற்று வைத்திய நிபுணரிடம் இரண்டாவது குழுவினர் விசாரணை

மட்டக்களப்பு, மே18

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த கர்ப்பிணித் தாய்மார்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்தவென மட்டக்களப்புக்குச் சென்ற சுகாதார அமைச்சின் இரண்டாவது குழு மகப்பேற்று வைத்திய நிபுணர் திருக்குமரனிடம் கடந்த சனிக்கிழமை விசாரணைகளை மேற்கொண்டது.

சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் யோகநாதன் தலைமையில் விசேட குழு கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குச் சென்றுள்ளது.

இவர்கள் வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்பட்ட 5 கர்ப்பிணித் தயாய்மாரிடமும், வைத்தியசாலையின் தாதிகள், வைத்தியர்கள், குடும்ப நலத் தாதிகள் ஆகியோரிடமும் தனித்தனியாக வாக்கு மூலங்களைப் பதிவு செய்திருந்தனர்.

இதேவேளை, சுகாதார அமைச்சின் குடும்பநல சுகாதாரப் பணியகப் பணிப்பாளர் டி.பி.பெரேரா, பிரதிப் பணிப்பாளர் சித்திர மாலி டி சில்வா, வைத்திய நிபுணர் கபில ஜெயரத்ன ஆகியோர் தலைமையில் மூன்றாவது விசாரணைக்குழு 3ஆம் கட்ட விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது.

கடந்த புதன்கிழமை பிரதிப் பணிப்பாளர் நாயகம் ரஹ்மான் தலைமையில் முதலாவது குழு மட்டக்களப்புக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ச-21)

# யுத்த காலத்தில் பல பிரச்சினைகளை எதிர்கொண்ட மீனவர்கள் இன்று அமைதிச் சூழலில் தொழிலில் ஈடுபட முடிகிறது

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்

அம்பாறை,மே 18

யுத்த காலத்தில் கடற்றொழிலாளர்கள் தமது அன்றாடத் தொழிலை மேற்கொள்வதில் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்கினர். இன்று அந்த நிலை மாறி அமைதிச் சூழலில் மீனவர்கள் தமது தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

- இவ்வாறு தெரிவித்தார் அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ்.

தேசிய கடற்றொழில் மகா சம்மேளனத்தின் அம்பாறை மாவட்டக்கிளை அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

கடற்றொழில் நீரியல் வளத் துறையைக் கட்டி யெழுப்புவதிலும், நவீன உலகிற்கேற்ப அத் துறையை அபிவிருத்தி செய்வதிலும் கடற்றொழில் அமைச்சர் செயற்பட்டு வருகின்றார்.

அத்துடன் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சென்று கடற்றொழிலாளர் பிரச்சினைகளை நேரில் கண்டறிந்து தீர்வுகளையும் வழங்கிவருகின்றார்.

இதைவிடவும் பெருந் தேசியவாத அரசியலிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு அரசியல் தலைவராக அமைச்சர் ராஜித சேனாரத்தன திகழ்கின்றார். ஒடுக்கப்பட்ட, கஷ்டப்பட்ட மக்களுக்காகக் குரல்கொடுத்து வரும் அவர் சோஷலிஷ கொள்கை வழியைக் கொண்டவர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் அவர்களது நியாயமான கோரிக்கைகளையும் நன்கு உணர்ந்துள்ள அவர், வடக்கு-கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களுக்காக ஜனாதிபதி முன் உரத்துக் குரல் கொடுத்தும் வருகின்றார்.

யுத்தம் முடிந்தாலும் தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட வேண்டுமென்ற அவா கொண்டவர்.

உண்மையான, நேர்மையான எண்ணங்கள் கொண்டும், பேதங்கள் மறந்தும் செயற்படும் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன போன்றோரின் கரங்களை நாம் பலப்படுத்த வேண்டும் - என்றார்.

(ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே 18
வசாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த விசாகப் பொங்கல் மடை நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
(ற-313)

***

யாழ்ப்பாணம்,மே 18
சங்கானை நிற்சாமம் ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவத் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழா அபிஷேகமும் 9.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் முற்பகல் 10.30 மணிக்கு தேரில் ஆரோகணமும் இடம்பெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்த உற்சவமும் மாலை 6 மணிக்கு திருவூஞ்சலும் இடம்பெறும். இறுதி நிகழ்வாக ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் பூங்காவணப் பெருவிழாவும் இடம்பெறும். (ற)

***

யாழ்ப்பாணம்,மே 18
தெல்லிப்பழை தென்மேற்கு விழிசிட்டி பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயத்தின் விசாகப் பொங்கல் விழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது என பரிபாலன சபை அறிவித்துள்ளது.

## குளவிகள் தாக்கி குடும்பஸ்தர் காயம்

மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபரைத் தாக்கியதில் அவர் நிலைகுலைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த 15 ஆம் திகதி மந்துவில் மேற்கில் இடம்பெற்றது. இதேயிடத்தைச் சேர்ந்த நாகமுத்து கந்தசாமி (வயது-53) என்பவர் குளவிகளால் தாக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-207)


## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**வேலுப்பிள்ளை சிவசம்பு**



மலர்வு
1923.05.02

உதிர்வு
2008.05.21

திதி: பிரதமை- (2011.05.18)

மூவாண்டு ஆனதையா முயல்கின்றோம் துன்பம் மறக்க முடியவில்லை எம்மால்! ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் மீண்டும் வருவதில்லை யாமறிவோம், எனினும் நம்மனம் அறிய மறுக்கின்றது ஈரவிழிகளும் இமைமூட மறுக்கின்றன இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்.
உம் இனிய ஆன்மா ஈடேற்றம் காண்பதற்கு...

மனோன்மணியம்மா சிவசம்பு, சடாச்சரமூர்த்தி சசி,
பத்மநாதன்- கலைச்செல்வி,
குணசிங்கம்- வாணி.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.
(19,21,49)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட முதற்தர சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் மற்றும் ஊர்க் குஞ்சுகள் மலிவு விலையில் விற்பனைக் குண்டு.

தொடர்பு:
0217200616, 0777490914
(4300)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணக் கச்சேரி பொஸ்கோ பாடசாலையை அண்மித்த பகுதியில் இல. 2/1, றக்கா லேனில் வீட்டுடன் 2 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779955754, 0750405806.

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## துரை டியிற்றல் கலர் லாப் (கரிசன்)

சகல விதமான புகைப் படங்களையும் 20 நிமிடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இல.41, பிரதேசசபை முன்பாக,
திருநகர் வீதி (கச்சேரி அருகில்),
கிளிநொச்சி.

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA No-1 புறொயிலர் குஞ்சுகள் 19.05.2011 விநியோகிக்கப்படும்.

விலை 90/= கூடுதல்கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். இறைச்சிக் கோழிகள் மீண்டும் கொள்வனவு செய்யப்படும்.

- * றாஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை
- * துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்
- * ஜென்சிபாம், முதலாம் கட்டை, பருத்தித்துறை

T.P.: 021 222 2867, 0776090926
(4212)(18-20)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்த போடப்பட்ட சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள்,சேவல் குஞ்சுகள், புறோயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (21.05.2011) காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| ★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை | - 0778996085 |
| ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு | - 0776904590 |
| ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | - 0774656377 |
| ★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை | - 0771392593 |

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.
நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.

## பால் குளிர்தாங்கிகள் திருத்துவதற்கான கூறுவிலை

எம்மிடம் உள்ள இரண்டு 2000 லீற்றர் கொள்ளளவு உடைய பால் குளிர்தாங்கிகள் புனரமைப்புச் செய்வதற்குக் கூறுவிலை கோரப்படுகின்றது. இதனைப் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள எமது சங்க வளாகத்தில் பார்வையிட்டுத் திருத்த மதிப்பீட்டை 31.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும். திருத்த வேலைகள் ஒப்படைக்கப்படும் பட்சத்தில் ஒருவருட உத்தரவாதம் கோரப்படும்.

பொதுமுகாமையாளர்
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(8/0442)(18-20)

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

திதி:
18.05.2011

திதி:
01.05.2011



பிறப்பு:
01.07.1939

இறப்பு:
20.05.2008

அமரர்
**இராசையா முருகேசு**



பிறப்பு:
19.09.1941

இறப்பு:
04.05.2008

திருமதி
**முருகேசு கமலாதேவி**

பூவுலகில் இணை பிரியாமல்
வாழ்ந்த தெய்வங்களே
விண்ணுலகுக்கு
இணைபிரியாமல் சென்று
ஆண்டு மூன்று ஆனதுவோ
மூன்று ஆண்டு என்ன
எமது உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுடனே வாழ்வோம்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அத்தியடி ஒழுங்கை,
கச்சாய் வீதி, கொடிகாமம்.

(48,27) (4279)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் ஊர்காவற்றுறை மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் சு.தனபாலசிங்கம் உரையாற்றுகின்றார். அருகில் மத்தியஸ்தர் சபை இணைப்பாளர் சனாதனசர்மா, ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜோய் மகிழ் மகாதேவா, ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் க.ஸ்ரீ மோகனன், ஊர்காவற்றுறை உதவிப்பொலிஸ் அதிகாரி பியதிஸ்ஸ ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். [21]

# தமிழ் மக்களிடம் அழிக்க முடியாத சொத்தாக உள்ளது கல்வியே

## பேராயர் கலாநிதி டானியல் தியாகராசா உரை

யாழ்ப்பாணம், மே 18

தமிழ் மக்களிடம் இருந்து என்றும் அழிக்கமுடியாத சொத்தாக 'கல்வி' மட்டுமே உள்ளது. கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களின் விளைவுகளில் இருந்து ஓரளவு மீண்டு புதியதொரு முயற்சிக்கு எமது வாழ்வாதாரத்தைக் கொண்டு சென்று கொண்டிருக்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்தார் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபைத் தலைவர் பேராயர் கலாநிதி டானியல் தியாகராசா.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள உயர்பட்டப் படிப்புக்கள் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற வங்கியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் தெரிவித்தாவது:

யாழ். உயர்பட்டப் படிப்புகள் கல்லூரியில் வங்கியியல் சார்ந்த சிறந்த பாடத்திட்டங்கள் கற்பிக்கப்படுவதால் இதில் சிறந்த தேர்ச்சி பெறும் வங்கியாளர்கள் கௌரவிக்கப்படவேண்டிய தேவை உள்ளது.

இவ்வாறான சேவையை வழங்க அனைவரும் முன்வருவார்கள் என்று கருதமுடியாது.

இதனால் கற்றலுடன் சம்பந்தப்பட்ட சமூகம் இதனைச் சரிவரப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதற்கான சூழலாக சிறந்த கற்கை நெறிகளையும் இடங்களையும் தெரிவு செய்ய வேண்டும்.

புதிய பாடத் திட்டங்களுக்கு அமைவாகக் கற்கை நெறிகள் இந்தக் கல்லூரியில் கற்பிக்கப்படுவதால் வங்கித்துறை சார்ந்தவர்களுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்களுக்கும் பயனுடையதாக அமையும்.

இதனால் மேலதிக அறிவைப் பெறுவதுடன், தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

தற்போது இந்தக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுச் சிறந்த வங்கியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட இந்த மாணவர்கள் போன்று ஏனைய மாணவர்களும் தம்மை உயர்த்திக்கொள்ள வேண்டும் - என்றார் அவர்.

(வ-313-4)

# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்களின் வரலாறுகள் நூல் வடிவமாக்கப்படவேண்டும்

## முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் கருத்து

யாழ்ப்பாணம், மே 18

யாழ். மாவட்டம் வரலாற்று ரீதியாக அரசர்களால் கட்டப்பட்ட பல்வேறு திருக்கோயில்களைத் தன்னகத்தே கொண்டமைந்த பிரதேசமாகும்.

இத்தகைய சிறப்புமிக்க ஆலயங்களைப் பாதுகாப்பதுடன் அவற்றின் வரலாற்று ரீதியான உண்மைச் சம்பவங்களையும் வரலாறுகளையும் நூல் வடிவில் வெளியிட வேண்டியதும் அவசியமான ஒன்றாகும்.

-இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம்.

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் யாழ். இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ''இளவாலை ஆனைவிழுந்தான் மாட்சிமை'' எனும் நூல் வெளியீட்டு விழாவில் நூல் வெளியீட்டுரையை வழங்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டம் வரலாற்று ரீதியாக விநாயகர் வழிபாட்டில் சிறந்து விளங்குகின்ற ஒரு பிரதேசமாகும். புகழ்மிக்க ஆலயங்களைத் தன்னகத்தே கொண்ட பிரதேசம் யாழ்ப்பணமாகும்.

இதேவேளை, வரலாற்று ரீதியான பல்வேறு கோயில்கள் சிதைவடைந்தும் உள்ளன.

இவ்வாறு வளர்க்கப்பட்ட மறைக்கப்பட்ட ஆலயங்களின் வரலாறுகளை நூல் வடிவில் வெளியிடுவதால் வரலாற்று ரீதியான உண்மைகள் பாதுகாத்து வைக்கப்படும்.

நூல் வடிவில் வெளியிடும் தகவல்கள், வாய்மொழியாக முன்னோர்கள், சமூகப் பெரியார்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் தகவல்களின் அடிப்படையிலானவையாக இருக்கும் அவற்றின் உண்மைத் தன்மையை உய்த்து அறிய வேண்டும்.

இவ்வாறான தகவல்கள் எதிர்காலச் சந்ததியினருக்குப் பயன்படக் கூடியது. அத்துடன் இது ஒரு வகையில் சமூகப் பணியாகவும் அமையும் என்று அவர் கூறினார். (வ-313)

# எதிர்கால சந்ததியை உரிமையுடனும் பொறுப்புடனும் வழி நடத்துவது மாணவர்களுடைய கடமையாகும்

## மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் உரை

யாழ்பபாணம், மே 18

சமுதாயத்தில் வழிகாட்டிகளாக இருக்கவேண்டியவர்களாகவும் எதிர்காலச் சந்ததியினரை வழிநடத்தும் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உடையவர்களாகவும் மாணவர்களே உள்ளனர்.

மாணவர்கள் பாடசாலைப் புத்தகங்களைப் படிப்பதும் சித்தி பெறுவதும் மட்டுமல்லாது பல துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன்.

'ஒழுங்கான சமுதாயத்தின் வழிகாட்டிகள் மாணவர்கள்' எனும் தலைப்பில் மாணவர்களுக்கான கருத்தரங்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

இன்றைய நவீன யுகத்தில் உலகம் தொழில்நுட்ப ரீதியாக அபிவிருத்தி அடைந்துவிட்டது. அதற்கேற்ப மாணவர்[illegible] வேண்டிய கட்டாயம் உள்ளது. கணினி, இணையத்தளம் போன்றவையும் இன்றைய மாணவர்களிடையே நன்றாக வளர்ச்சியடைந்துவிட்டன. அவற்றிலுள்ள பயன்தரு விடயங்களையும் தமக்குரிய கல்வி விடயங்களையும் எடுத்துவிட்டு ஏனையவற்றைத் தவிர்த்து விடவேண்டும்.

மாணவர்களை யாரும் எளிதில் குற்றம் சாட்டலாம். மாணவர்களின் குற்றச் செயல்களில் பெற்றோர்களின் பங்கும் உண்டு. சரி[illegible] சரியான [illegible] ஒழுக்கத் திறனையும் ஏற்படுத்த பெற்றோர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். மாணவர்கள் தங்களைத் தாங்களே வழி நடத்த வேண் டும்.

அதற்கு நல்ல விதமான சிந்தனைகள் அவசியமாகின்றன. அதற்குப் பயன்தரு நூல்களையும் பத்திரிகைகளையும் படித்துப் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

மேலும் போர்க்காலச் சூழல்களின் நினைவுகளிலிருந்தும் விடுபடாது உளத்தாக்கத்துக்கு உள்ளான சிறுவர்கள் இன்றும் உள்ளனர். அவர்களுடன் சக மாணவர்கள் அன்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

துடுக்குத்தனமான மாணவர்கள் சகல விடயங்களிலும் விழிப்புடனும் அவதானத்துடனும் பாகுபாடற்றும் செயற்பட வேண்டும்.

ஏனையவர்களிடமிருந்து நல்லவற்றைப் புரிந்துகொள்ளவும் விபரீதமான செயற்பாடுகளிலிருந்து விலகி சமூகத்தின் பழிக்கு உள்ளாகாமல் இருப்பதற்கும் நல்ல வழிகாட்டியாக இருப்பதற்கும் மாணவர்கள் பழகிக் கொள்ள வேண்டும்.

(வ-311)

## வினாத்தாள்களை பெற்றுக்கொள்ளலாம்

தென்மராட்சி, மே 18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணித பாட வழிகாட்டல் செயற்பாட்டுப் பரீட்சை எதிரி வரும் 20 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களை நாளை வியாழக்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (வ-207)

## வணிகர் கழகத்தால் வாழ்வாதார உதவிகள்

தென்மராட்சி, மே 18

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தால் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 10 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். வணிகர் கழகத் தலைவர் சி.ஜெயசேகரம், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, டாக்டர் திருமதி ஆனந்தஜோதி விஜயகுமார் உட்பட வணிகர் கழகப் பிரதிநிதிகளும் க்லந்து கொண்டனர்.

தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவியாக 30 கோழிக் குஞ்சுகள், ஒரு மாதத்துக்குரிய தீவணம், கோழிக் கூடு ஆகியவை கையளிக்கப்பட்டன. (வ-207)

## மந்துவில் கந்தசுவாமி ஆலயத்தின் பொதுக்கூட்டம்

தென்மராட்சி,மே 18

மந்துவில் புளியந்திடல் ஸ்ரீகந்தசாமி ஆலயப் பொதுக்கூட்டம் எதிர் வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

முன்னாள் கிராம அலுவலர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் இந்து சமய அபிவிருத்தி அலுவலர் செல்வி சந்திரா கணபதிப்பிள்ளை கலந்து கொள்வார்.

(த 207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
காலையில் சந்தோஷமான அனுபவங்களையும், மாலையில் மனக்குழப்பங்களையும் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த காரியங்களில் பிரச்சினைகள், இழப்புகள் என்பவற்றைச் சந்திக்கலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டும். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். எதிர்பார்ப்பு ஒன்று ஏமாற்றம் தரும்.



**இடபம்:**
ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக செயற்பட்டு சாதனை படைப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். சிறியளவில் வருவாயை எதிர்பார்த்த வேலை ஒன்றில் பெரியளவில் வருமானம் கிடைக்கும். நண்பர்கள் சிலர் உங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். சுப விரயங்கள் உண்டாகும்.



**மிதுனம்:**
கைவிட்டுப் போனதாக நினைத்த பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கும். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். சக ஊழியர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். முன்யோசனையுடன் செயற்படுவதன் மூலம், சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அனுகூலமான நாள்.



**கடகம்:**
உங்களிடம் உதவி பெற்ற ஒருவரிடம் நீங்கள் பதில் உதவி கேட்கலாம். பழைய பொருள் ஒன்றை மாற்றிவிட்டு புதிய பொருள் வாங்கலாம். வீட்டுத் தேவைகளை நிறைவேற்ற கணிசமான பணத்தை செலவிடலாம். உத்தியோகத்தர்கள் உயரதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். மாலை நேரத்தில் புதியவர் ஒருவரின் சந்திப்பு நிகழும்.



**சிங்கம்:**
தேவையற்ற பேச்சுக்களை, வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டிய நாள். காலை முதல் மாலை வரை கடும் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். தாய் வழி உறவுகள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பெண்கள் பிறந்த வீட்டு உதவிகளைப் பெறலாம். வாகன பயணங்கள் தடையில்லாமல் உற்சாகம் தருவதாக அமையும்.



**கன்னி:**
காலம் நேரம் பார்த்து சில வேலைகளைச் செய்வீர்கள். கடன் மிகுதிகள் வசூலாகும். உங்களின் கடந்த கால சாதனை ஒன்றை பற்றி மற்றவர்களிடம் பெருமையாகச் சொல்வீர்கள். பல மணி நேரமாகும் என நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடிந்து விடும். பெரிய மனிதர்கள் வழியில் உதவி கிடைக்கும். நண்பர்கள் வட்டம் விரிவடையும் நாள்.



**துலாம்:**
கொள்கை பிடிப்பு, மன உறுதியுடன் செயற்படுவீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். நீண்ட நாள்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரை, அவரின் வீட்டிற்கே சென்று பார்க்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரை தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அது முடியாமல் போகலாம். வீண் ஜம்பம் தவிர்க்கவும்.



**விருச்சிகம்:**
விளையாட்டாகச் செய்த காரியங்கள் வெற்றிகரமாக அமைந்து விடும். மற்றவர்கள் முடியாது என நினைத்த வேலை ஒன்றை நீங்கள் தைரியமாகச் செய்வீர்கள். பொறியியல் பணியாளர்கள் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். கோபம், வேகத்தைத் தவிர்த்து நிதானமாகச் செயற்பட வேண்டும். நீங்கள் கேட்ட உதவி ஒன்றை உறவினர்கள் செய்யலாம்.



**தனுசு:**
புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். மனதில் குழப்பங்கள் அதிகரிப்பதால் தூக்கமின்மை, சோர்வால் அவதிப்படலாம். கலைஞர்கள் நினைத்தது நடப்பது தள்ளி போகலாம். உறவினர்கள் வழியில் செலவுகள் உண்டு. மருந்து பொருள்கள் வாங்கலாம். சிலருடன் மனஸ்தாபம் ஏற்படும்.



**மகரம்:**
மாற்றங்களால் ஏற்றங்கள் பெறும் நாள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள். அடமானமாக வைத்த பொருள்களை மீட்கலாம்.



**கும்பம்:**
கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்கும் நாள். நண்பர்கள் சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். அயலாரின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். எந்த வேலையையும் நாளை என தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். சோர்வின்றி பரபரப்பாகச் செயற்படுவீர்கள். உதிரி வருமானம் கிட்டும்.



**மீனம்:**
நண்பர்கள் சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். இரண்டு நாள்களாக தடைப்பட்ட பணவரவுகள் இன்று எளிதில் வந்து சேரலாம். சில விடயங்கள் நினைத்ததற்கு மாறாக நடக்கலாம். கையிலிருக்கும் பணத்தைத் தாராளமாகச் செலவு செய்து விட்டு பிறரிடம் கடன் வாங்கலாம். குடும்ப உறுப்பினருக்கு தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம்.

# தமிழ்ப் பெ
# வன்முறை
# உரிய வி

குற்றமற்ற கோவலனுக்கு மரண தண்டனையை வழங்கிய பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் மீது எழுந்த கோபத்தால் கண்ணகி மதுரையை எரித்தாள் என்பது சரித்திரம். கோவலன் -கண்ணகி கதையை அறியாதவர்கள் இருக்கமுடியாது. சோழ நாட்டில் பிறந்து பாண்டியநாடு தொட்டு சேரநாட்டில் முடிந்த கண்ணகியின் வாழ்வில் முக்கிய காலத்தை மதுரை மண்தான் முழுமையாக வைத்திருக்கிறது. காவிரிப் பூம்பட்டினத்தில் மாநாய்கன் என்னும் வணிகனின் மகளாகப் பிறந்த கண்ணகி, அதே நகரில் மாசாத்துவான் என்ற வணிகனின் மகன் கோவலனை மணக்கிறாள். மாதவி என்ற நடனப் பெண் இவர்கள் வாழ்க்கையில் குறுக்கிட, அவளிடமிருந்து மீண்டுவரும்போது கோவலன் ஏதுமற்றவனாகி விடுகிறான். பிழைப்புக்காக மனைவியோடு மதுரை வருகிறான் கோவலன். நத்தம் வழியாக அழகர் கோயில் தொட்டு வைகைத் தென்கரையில் இன்றைய மதுரை வண்டியூர் மாரியம்மன் கோயில் பகுதியில் கோவலனும் கண்ணகியும் தங்கியதை அறியமுடிகிறது. மனைவியின் சிலம்போடு கடை வீதிக்குச் சென்ற கோவலனை அரசி கோப் பெருந்தேவியின் சிலம்பைத் திருடியதாகக் குற்றம் சுமத்தினர். அரசியின் சிலம்பைத் திருடிய பொற்கொல்லனின் பொய்ச் சாட்சியத்தால் மன்னன் நெடுஞ்செழியன் கோவலனைக் கொல்லுமாறு ஆணையிட்டான். பொய்க் குற்றச்சாட்டில் சிக்கிக் கொலை செய்யப்பட்ட தனது கணவனின் குற்றமற்ற தன்மையை தன்னிடம் இருந்த மற்றொரு சிலம்பை உடைத்து மன்னனிடம் நிரூபித்தாள் கண்ணகி. தன் பிழை கண்டு வருந்திய மன்னனும் அரசியும் உயிர் துறந்தனர். ஆக்ரோஷ வெற்றியில் கண்ணகி தன் கற்புக் கனலில் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள், கால்நடைகள் தவிர்த்து எஞ்சிய மதுரையை எரித்துப் பொசுக்கினாள். இது கண்ணகி வரலாறு.

நமது ஈழத்துப் பெண்களின் வரலாறு போராட்ட வாழ்வில் முடிந்த கதைதான்.

புறநானூற்று வரலாற்றிப் புதுமைப் பெண்கள் என்று பாரதி பாடியது இன்று தான் பார்க்கக் கூடியதாக இருந்தது. அதாவது துப்பாக்கி தூக்கிப் போராடிய பெண் போராளிகளை ஈழத்துப் பெண்கள் வரலாற்றில் என்றைக்குமே மறக்கமுடியாது. வன்னியில் இறுதிக் கட்டப்போரில் ஏராளமான பெண்கள் செத்து மடிந்துள்ளனர். இதில் என்ன கொடுமையென்றால் இலங்கைப் படைகள் தமிழ்ப் பெண்களைக் கொலை செய்தது மட்டுமல்ல மானபங்கப்படுத்தியுள்ளன.

### கேவலமான வன்முறைகள்

உலகிலேயே போற்றப்பட்ட தமிழ் கலாசார பண்பாடுகளைக் கொண்ட தமிழ்பெண்களை, சிங்களப் படைகள் கொடுமைப்படுத்திக் கொலை செய்துவிட்டு ஆடைகள் ஏதுமற்ற நிலையில் புகைப்படம் எடுத்துள்ள ஒரு கேவலமான செயற்பாடு வன்னியில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்ப் பெண்கள் வரலாற்றில் இந்தச் சம்பவங்கள் என்றைக்குமே மறக்க முடியாதவையாகும். விடுதலைப் புலிகளுடனான இறுதிக் கட்டப் போரில் இந்திய இராணுவமும் இலங்கைப் படைகளுடன் சேர்ந்து போரிட்டதற்கான பட ஆதாரங்களும் வெளிவந்திருக்கின்றன.

இந்திய இராணுவம் காஷ்மீரில் உள்ள பெண்களுக்கு இழைக்கும் துரோகம் வார்த்தைகளால் சொல்லமுடியாதவை. வன்னியில் இறுதிக் கட்டப் போரில் ஈடுபட்ட இந்திய இராணுவமும் ஈழப் பெண்கள் மீதான துன்புறுத்தலில் ஈடுபட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுகின்றது. ஏனெனில், இந்திய இராணுவத்தால் காஷ்மீரில் பெண்களுக்கு ஏற்படும் துன்பியல் சம்பவங்களைப் பேராசியர் இஸ்ஹாக் மாலிக் தனது கட்டுரையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

### அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள் தான்

இன்றைய உலகில் இனமோதல்களிலும் யுத்தங்களிலும் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களும் சிறுவர்களும் வயதானோர்களுமே. இருதரப்பினரதும் மோதல்களுக்கு இடையில் பெண்களே அதிகம் சிக்குகின்றனர். 1990 களில் போல்கனில் நிலவிய பெண்களுக்கெதிரான வன்முறைகளை விட மோசமான வடிவங்கள் ஈழத்தில் நடந்திருக்கின்றன. இதற்குத் தீர்வு என்பது சாத்தியமற்றதாகவே தோன்றுகின்றது. காரணம், மோதலுடன் சம்பந்தப்பட்டுள்ள தரப்புகள் பெண்களின் போர்க்காலப் பாதிப்புக் குறித்து மிகக் குறைந்தளவு அக்கறையை யாவது வெளிப்படுத்துவதாகத் தெரியவில்லை.

பெண்களுக்கு எதிராக நடைபெறும் விகாரமான வடிவங்களிலான பாலியல் அத்துமீறல் [illegible] நடைபெற்ற [illegible] பெண்கள் மீதான பாலியல் குற்றங்களை முதன்மைப்படுத்தி நிற்கின்றன. இதனால் ஈழப்



பெண்கள் மத்தியில் தீராத உளவவும் உள அழுத்தமும் ஏற்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளுடனான இறுதிக் கட்டப்போரை மனிதாபிமான நடவடிக்கை என்று சொல்லும் இலங்கை அரசு, தனது படைகள் தமிழ்ப் பெண்கள் மீது புரிந்துள்ள கொலை வெறியாட்டத்தை என்னென்று சொல்லப் போகிறது.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்குழுவின் அறிக்கையை இலங்கை அரசு நிராகரிப்பது என்பது பல ஆயிரம் பெண்களினதும், குழந்தைகளினதும் கண்ணீரை நிராகரிப்பதற்கு நிகரானது என்று கொழும்பைத் தளமாகக் கொண்ட ஜப்பான் நாட்டின் அனுசரணையுடன் இயங்கும் ஐ.எம்.ஏ.டி.ஆர் என்ற அரசசார் பற்ற நிறுவனத்தின் தலைவர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

### ஜெனிவா சட்ட விதிகள் பின்பற்றப்படவில்லை

சிங்கள ஊடகமான 'ராவய' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் போது அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

இலங்கை அரசுக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களைப் புலம்பெயர் தமிழ் மக்கள் மட்டும் தெரிவிக்கவில்லை. பல மனித நேய அமைப்புக்களும் முன்வைத்துள்ளன. வன்னியில் போர் நடைபெற்ற காலப்பகுதியில் மனிதநேயப் பணிகள் தடுக்கப்பட்டுள்ளன. வைத்தியசாலைகள் மீது குண்டுகள் வீசப்பட்டுள்ளன. பொதுமக்களின் வாழ்விடங்கள் மீது எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் மீதான மரபு வழியிலான போரின்போது ஜெனீவா சட்டவிதிகள் பின்பற்றப்பட வேண்டும். ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்கள் மீதான
# றகள் குறித்தும்
# சாரணை அவசியம்



இலங்கையில் அது பின்பற்றப்பட்டதா என்பது தொடர்பிலான விசாரணைகள் அவசியமானவை. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் இன அழிப்பு உலகில் எந்த மூலையிலும் இடம்பெறக்கூடாது என்பதற்காகச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், இந்தச் சட்டம் அமெரிக்காவின் நலன் சார்ந்ததாகவே இருக்கின்றது. தமிழ் பெற்றோர் தமது பிள்ளைகள் காணாமற்போனமை தொடர்பில் வேறு ஒரு நாட்டிடம் முறையிட்டு ஆதாரங்களை சமர்ப்பிக்க முடியும்.

**காவலரண்களில் பிள்ளைகளை பறிகொடுத்த பெற்றோர்**

வன்னி யுத்தத்தில் மீண்ட மக்களில் பலர் கணவர்களையும், பிள்ளைகளையும் இராணுவத்தின் காவலரண்களிலேயே பறிகொடுத்துள்ளனர். தற்போது அவர்கள் எங்கே என்று கேள்வி எழுப்பி வருகின்றனர். வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலும் அரசிடம் பதில் இல்லை. சரணடைந்தவர்கள் எவ்வாறு மரணமடைந்தனர் என்பது தொடர்பிலும் அரசிடம் பதில் இல்லை. விடுதலைப் புலிகளும் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டிருக்கலாம்.

ஆனால், அவர்களில் பலர் தற்போது அரசுடன் இணைந்து இயங்கி வருகின்றனர். சிலர் அரசில் முக்கிய பதவிகளிலும் உள்ளனர். எனவே, குற்றம் செய்தவர்கள் அரசின் பக்கம் தாவினால் சாதாரண மக்கள் ஆகிவிடமுடியுமா? மஹிந்த சிந்தனை என்பது இதுதானா? நல்லிணக்க ஆணைக்குழு என்பது இலங்கையில் முன்னர் அமைக்கப்பட்ட பல விசாரணைக் குழுக்களைப் போன்றதே. முன்னர் அமைக்கப்பட்ட குழுக்களின் அறிக்கைகள் கூட வெளியிடப்படவில்லை. பாதிக்கப்பட்ட எவருக்கும் நீதி வழங்கப்படவில்லை. இலங்கை அரசால் திட்டமிட்டுத் தெரிவுசெய்யப்பட்ட நபர்களே நல்லிணக்க ஆணைக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் அந்தக் குழு விசாரணைகளை மேற்கொள்ளவில்லை. மாறாகப் போர் நிறுத்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களின் தொடர்பில்தான் அது ஆய்வுகளை மேற்கொள்கின்றது. புலம் பெயர் தமிழ் சமூகம் ஐ.நா நிபுணர் குழுவைத் தவறாக வழி நடத்தியுள்ளதாக அரசு தெரிவிக்கின்றது. ஆனால், ஐ.நா. போன்ற அமைப்புக்களை நாம் தவறாக வழி நடத்த முடியாது என்பதை அரசு அறிந்து கொள்ளுமா?

ஐ.நா. அறிக்கையின் மூலம் இலங்கை அரசு அனைத்துலக நீதிமன்றத்துக்கு இழுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துவரும் அரசு, மக்களைத் தவறாக வழி நடத்தி வருகின்றது. அரசு ஐ.நாவுக்கு எதிராகச் செயற்படுகின்றதோ இல்லையோ, ஐ.நாவின் செயற்பாடுகளை நிறுத்த அவர்களால் முடியாது. அறிக்கையை நிராகரிப்பதற்கு இலங்கை அரசு எவ்வளவு பொய்களை அனைத்துலக சமூகத்தின் முன் கூறப்போகின்றது. எனவே, இலங்கை போர்க்குற்றம் தொடர்பான ஐ.நாவின் அறிக்கையை இறைமை மற்றும் இனத்துவேசத்துடன் பார்க்கக் கூடாது - என்றார்.

**தமிழ் பெண்களுக்கான பாதுகாப்பு கேள்விக்குறி**

பெண்கள் மீது பாலியல் குற்றமிழைத்த படைகளைக் கைது செய்து நீதிமன்றில் ஒப்படைக்க விரும்பாத அரசு எப்படி இந்த நாட்டின் முன்னேற்றத்தில் பங்குகொள்ளப்போகின்றது என்று தெரியவில்லை. அப்படிப் பங்கெடுத்தாலும் தமிழர்களின் நிலை கேள்விக் குறியாகவே இருக்கப் போவது உண்மை. சட்டதிட்ட வரைமுறைகளை மீறிய இலங்கைப் படைகள் - போர்த் தர்மங்கள் என்ன என்று தெரியாத இலங்கை அரசு - பௌத்த சிங்கள மேலாதிக்க மாயையில் மூழ்கி இருக்கிறது.

ஐ.நாவின் அறிக்கையில் ஒரு சிறிய ஓட்டை கூட விழாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது தமிழர்களினது பாரிய பொறுப்பாகும். பெண்களை மான பங்கப்படுத்தி ஒளி நாடாவில் வெளிப்படுத்தி ரசித்த சிங்களப் படைகளால் உயிர் தப்பி இருக்கும் தமிழ் பெண்களுக்கு நாளாந்தம் என்ன நடக்குமோ என்று தெரியாதுள்ளது.

## துன்னாலைச் செல்வம்

தமிழ் பெண்களுக்கான பாதுகாப்பு இனிவரும் காலங்களில் கேள்விக் குறியாகவே இருக்கப் போகிறது. வன்னியில் மீளக்குடியமர்ந்துள்ள பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பலவாறு உள்ளன என்று செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆண் துணைப் பாதுகாப்பு இல்லாமல் அங்கே வாழ்கின்ற பெண்கள் நாளாந்தம் ஏதாவது நடந்து விடுமோ என்ற அச்சத்தில் உறைந்துள்ளனர்.

போரில் ஈடுபட்ட அரச படைகள் மேற்கொண்ட பெண்கள் மீதான போர்க்குற்றங்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படவேண்டும். அப்பொழுதுதான் தமிழ் பெண்கள் சிங்கள அரசின் மீது ஒரு நம்பிக்கையைக் கொள்வார்கள்.

## எதிர்காலக் கவலைகள்!



ஒருத்தர் மிகவும் கவலையுடன் உட்கார்ந்திருந்தார். ''எதைப் பற்றி இவ்வளவு கவலைப்படுகிறீர்கள்? என்றார் இன்னொருத்தர்.

''என்ன செய்வது என்று தெரியவில்லை, எதிர்காலம் ஒரே இருட்டாக இருக்கிறது பாதையே புரியவில்லை'' என்றார்.

இன்றைக்கு இளைஞர் பல பேருக்கு இப்படித்தான் எதிர் காலம் இருட்டா கத் தெரிகிறது. அவர்களெல்லாம் இருந்தக் கதையைக் கொஞ்சம் கேட்க வேண்டும்.

ஒரு மலையடிவாரத்தில் ஒரு சின்னக் கிராமம் இருந்தது. அந்த மலை மிகவும் உயரமானது. அடர்த்தியான செடி, கொடிகள் மரங்கள் அங்கு மண்டிக் கிடந்தன. பகலிலும் இருட்டாகத் தான் இருக்கும்.

அந்த மலை உச்சியில் ஒரு கோயில் இருந்தது. முதல் நாள் இரவு புறப்பட்டால் தான் காலையில் அந்தக் கோயிலுக்குப் போய்ச் சேர முடியும்.

கிராமத்து இளைஞன் ஒருத்தன் அந்த மலை உச்சிக்குக் கையில் ஒரு விளக்கை எடுத்துக் கொண்டு முதல் நாள் இரவு புறப்பட்டான். அவ்வாறு புறப்பட்டுப் போனவன் கிராமத்து எல்லையிலே நின்று விட்டான். ஏன் தெரியுமா?

அவன் கையில் இருந்த விளக்கின் ஒளி பத்தடி தூரத்துக்குத்தான் தெரிந்தது. அதுவரைக்கும்தான் பாதை தெளிவாக இருந்தது. அதற்கு அப்பால் எல்லாம் ஒரே இருட்டாக இருந்தது. பாதை புரியவில்லை. இவன் யோசித்துப் பார்த்தான்; மனதுக்குள் ஒரு சந்தேகம். பத்தடி தூரம் தானே வெளிச்சம் தெரிகிறது. அப்படியென்றால் நாம் பத்தடி தூரம் தானே போக முடியும். அதற்கப்பால் எப்படி நடந்து போவது? மிகவும் தூரம் ஆகுமே! இதுதான் அவன் மனதில் ஏற்பட்ட தயக்கம். யோசித்துக் கொண்டு அவன் புறப்பட்ட இடத்திலேயே நின்று கொண்டிருந்தான்.

அந்தச் சமயத்தில் வயதான பெரியவர் ஒருவர்அந்தப் பக்கமாக வந்தார். அவர் கையில் இதைவிடச் சின்னதாக ஒரு விளக்கை வைத்திருந்தார். அது ஐந்தடி தூரத்துக்குத்தான் வெளிச்சம் காட்டும். அவ்வளவு சின்ன விளக்குடன் இவரும் மலை உச்சிக்குப் போவதற்காகத்தான் வந்தார். அவரைப் பார்த்து இவன் கேட்டான் ''என்ன பெரியவரே இவ்வளவு சின்ன விளக்கை வைத்துக் கொண்டு அவ்வளவு தூரத்துக்கு எப்படி மலையேறப் போகிறீர்கள்?'' என்று .

இவனைப் பார்த்த அவர் '' நீ ஏன் இப்படி தயங்கிக் கொண்டு நிற்கிறாய்?'' என்றார். இதற்கு இவன், என்னிடம் இருக்கிற விளக்கு பத்தடி தூரத்துக்குத்தான் பாதையைக் காட்டுகிறது; மிகுதித் தூரத்தை எவ்வாறு கடப்பது என்று தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்றான்.

அதற்குப் பெரியவர் தம்பி உன் கையில் இருக்கிற விளக்கு கொடுக்கிற வெளிச்சத்தை வைத்து நீ முதலில் பத்தடி தூரம் முன்னேறு; பத்தாவது அடியில் போய் நின்று கொண்டு பார் மறுபடியும் ஒரு பத்தடி தூரத்துக்குப் பாதை தெரியும் இப்படி உன் கையில் இருக்கிற விளக்கு தொடர்ந்து வெளிச்சம் காட்டிக் கொண்டேயிருக்கும். நீ முன்னேற முன்னேற வெளிச்சமும் முன்னேறும். அதனால் எத்தனை கிலோ மீற்றர் தூரம் வேண்டுமானாலும் இந்தப் பத்தடி தூர வெளிச்சத்தை வைத்துக் கொண்டே போய் விடலாம் புறப்படு'' என்றார்.

இப்போது தான் அந்தப் பெரியவர் சொன்னது இளைஞனுக்குப் புரிந்தது. உடனே உற்சாகமாகப் புறப்பட்டு உச்சிக்குப் போய்ச் சேர்ந்தான்.

இந்தக் கதையிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா?

நீண்ட காலத்திட்டம் ஒன்று போடும் போது எமக்கு முன்னால் இருப்பதை மறந்துவிட்டு மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

உங்கள் கையில் என்ன இருக்கிறதோ அதிலேயே உங்கள் எதிர்காலம் மறைந்திருக்கிறது. கண் முன்னால் தெரிவதை வைத்துக் கொண்டு நடைபோட ஆரம்பியுங்கள். போகப்போக வழி தானாகப் புலப்படும் என்றார் ஒரு பெரியவர்.

நீண்ட தூரத்திற்கு ரயிலில் பயணித்துக் கொண்டிருந்தான் ஒருவன். இடையில் கொஞ்ச தூரம் போனதும் கையில் வைத்திருந்த ரிக்கெற் காற்றில் பறந்து விட்டது. ஐயய்யோ என் ரிக்கெற் காற்றில் போய்விட்டதே என்று கத்த ஆரம்பித்தான். பக்கத்தில் இருந்த பெரியவர் அவனைப் பார்த்துப் பரிதாபப்பட்டுக் ''கவலைப்படாதே தம்பி; போனால் போகிறது; வேறு ரிக்கெற் வாங்கிக் கொள்ளலாம்'' என்று ஆறுதல் சொன்னார். அதற்கு அவன் அந்த ரிக்கெற்றுக்காக நான் அழவில்லை; அந்த ரிக்கெற் கிடைத்தால்தான் நான் எந்த ஊருக்குப் போக வேண்டும் என்பது எனக்குத் தெரியும்'' என்றான்.

**கோ. சுவாமிநாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு மக்களே!... நிலத்தை மாசடையச் செய்வதற்கு உங்களுக்கு என்ன உரிமை?

(சென்றவாரத் தொடர்ச்சி)
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பதினெட்டாவது அமர்வு கடந்த மாதம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. 06.04.2011 ஆம் திகதிய அமர்வின்போது 'பொதுச் சுகாதாரமும் நிலையான அபிவிருத்தியும்' என்ற தொனிப்பொருளில் வைத்திய கலாநிதி ந.சிவராஜா நிகழ்த்திய உரையின் (தமிழாக்கத்தின்) சுருக்கம் இங்கே தரப்படுகின்றது.

உதாரணமாகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 264 படுக்கைகள் உள்ளன. ஆனால் 20 சதவீதமான கட்டில்களில்தான் நோயாளர்கள் இருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் அங்கு போதிய வைத்தியர்கள் இல்லாதமைதான். இந்த நிலையை மாற்றி வைத்தியர்களைக் கிராம வைத்தியசாலைகளுக்கு நியமிப்பதற்கு அபிவிருத்திக்குப் பொறுப்பாக உள்ள அரசியல்வாதிகளும் ஆக்கபூர்மான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

3. யாழ்ப்பாணத்திலுள்ள இன்னொரு முக்கியமான சுகாதாரப் பிரச்சினை நிலத்தடி நீர் மாசடைதலாகும். நிலத்தடி நீர் பல வழிகளில் மாசடையலாம். மலத்துடன் வெளியேறும் நோய்க் கிருமிகள், இரசாயனப் பொருள்கள், எண்ணெய்க் கழிவுகள் போன்றவை நிலத்தடி நீரை மாசுபடுத்தக் கூடியவை. நமது நிலம் முருகைக் கல்லினால் ஆனதால் மாசுக்கள் தூர பகுதிகளுக்கு இந்த மாசுபடுத்தப்பட்ட நீரைக் கொண்டு செல்லக் கூடியதாக இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள கிணறுகளில் ¼ வாசிக் கிணறுகள் மலக்கழிவுகள் மூலம் அசுத்தப்படுத்தப்பட்டுள்ளன. யாழ். மாவட்டம் தனது குடிதண்ணீருக்கு நிலத்தடி நீரையே நம்பியிருக்கின்றது. அது அசுத்தப்படுத்தப்பட்டால் நாம் போத்தல்களில் அடைக்கப்பட்டு வெளி மாவட்டங்களில் இருந்து தருவிக்கப்படும் நீரைப் பாவிக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுவோம். மலத்தை வெளி இடங்களில் கழிப்பதால் திறந்த நீர் நிலையங்கள் மாசடைகின்றன. பேணப்படாத, அல்லது பராமரிப்பு இல்லாத மலக்குழிகளில் உள்ள மலம் நிலத்தடி நீரை மாசுபடுத்தலாம். நாம் பயிர்ச் செய்கைக்காகப் பாவிக்கும் அளவுக்கதிகமான கிருமி நாசினிகளும் செயற்கைப் பசளைகளும் குடிதண்ணீரில் கலந்து மக்களுக்கு குடலோடு சம்பந்தப்பட்ட புற்றுநோயை உண்டாக்கும். வாகன சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து வெளியேறும் கழிவு எண்ணெய்கள் சுத்திகரிக்கப்படாமல் வெள்ள நீரோடும் வாய்க்கால்களிலும் விடப்படுவதால் குடிதண்ணீர் மாசடைகிறது. இவை குடலோடு சம்பந்தப்பட்ட தொற்று நோய்களைப் பரப்புகின்றன. அத்துடன், இவை குடலோடு சம்பந்தப்பட்ட புற்றுநோயையும் அதிகரிக்கக் கூடியவை.

## நிலையான அபிவிருத்திக்குத் தடையாக இருக்காதீர்!

இந்த நிலையிலிருந்து விடுபடுவதற்கு நாம் மலக்கழிவுகளை சுத்திகரித்த பின் நிலத்தில் விடும் முறைகளைப் (Sewrage schemes) பின்பற்ற வேண்டும். யாழ். மாவட்டத்தில் உள்ள மாநகர சபையிலோ, ஒரு பிரதேச சபையிலோ மலம் சுத்திகரிக்கும் முறை கிடையாது. இதனால் யாழ். மாவட்டத்தில் 6 லட்சத்து 50 ஆயிரம் மக்களின் மலக்கழிவு குடிதண்ணீருடன், கலக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாகவுள்ளன.

இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தொற்றுநோய்கள் குறைந்து வர யாழ். மாவட்டத்தில் இவை குறையாமல் உள்ளன. இதற்கு முக்கிய காரணம் எமது கழிவுகளைச் சரியான முறையில் சுத்திகரிக்கப்படாமல் நிலத்தடி நீருடன் கலக்க விடுவதாக இருக்கலாம். உள்ளூராட்சி மன்றங்கள் இதனைக் கவனத்தில் எடுத்து கழிவு அகற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சேதனக் கழிவுகளைப் பசளையாக மாற்றும் திட்டங்கள் நல்லூர்ப் பிரதேசசபைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மற்றைய பிரதேச சபைகளும் இதை முன்னுதாரணமாக எடுத்துச் செயற்படவேண்டும்.

4. நிலத்தடி நீர் மாசடைதலுக்கு இன்னொரு காரணமாக அமைவது வாகன சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து வெளியேறும் கழிவுகள். தினமும் யாழ். மாவட்டத்தில் புதிதாக வாகன சுத்திகரிப்பு நிலையங்கள் (வாகன சர்வீஸ் ஸ்டேஸன்) அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றிலிருந்து வெளியேறும் எண்ணெய் கலந்த அசுத்த நீர் வடிக்கப்பட்டு தெளிந்த நீரையே வெளியேற்ற வேண்டும். வடிகட்டும் உரிய கட்டமைப்பு இல்லாத நிலையங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் அவற்றை நடத்தும் அனுமதியை மறுக்க வேண்டும். அப்படி மீறி நடத்தும் நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5. அளவுக்கு அதிகமாகப் பாவிக்கப்படும் செயற்கைப் பசளைக் கிருமிநாசினிகள் மூலமாகவும் நிலத்தடி நீர் மாசு படுத்தப்படுகின்றது. இவற்றின்பாவனை மட்டுப்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் யாழ்ப்பாணத்தில் வேகமாக அதிகரித்து வரும் புற்றுநோய்கள் இன்னும் அதிகரிக்கலாம். விவசாயத்துறையினர் இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

சுகாதாரப் பகுதியினரும் கிருமிநாசினிகள் தெளித்து இரு வாரங்களுக்குள் விற்பனைக்கு வரும் மரக்கறி மற்றும் உணவு வகைகளின் விற்பனையைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உணவில் உள்ள கிருமிகள், கிருமிநாசினி முதலியவற்றைப் பரிசோதிக்கும் நிலையம் ஒன்றும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவேண்டும்.

6. நாம் சுவாசிக்கும் காற்றையும் தினமும் மாசுபடுத்தி வருகின்றோம். வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை, நாம் தெளிக்கும் இரசாயனப் பொருள்கள், புகை பாவித்தல், பொது இடங்களில் துப்புதல், மலசலம் கழித்தல் போன்றவை நமது சூழலை மாசுபடுத்துகின்றது..முக்கியமாகப் புகைத்தல் புகைத்தவரின் உடலையும் சுற்றியுள்ளவர்களின் ஆரோக்கியத்தையும் பாதிக்கின்றது. ஆகவே மது, புகைத்தல் பழக்கங்களை சமூகத்தில் குறைப்பதற்கும் இளைஞர்களிடையே இந்தப் பழக்கங்களை அறிமுகப்படுத்தலையும் சுகாதாரச் சீர்கோட்டை தடுப்பதற்கு பெற்றோருடன் சேர்ந்து சகல சமூகத்தினரும் திணைக்களங்களும் செயற்பட வேண்டும்.

'இந்த நிலம் உனக்குக் கொடுக்கப்பட்ட முதுசமோ அல்லது சீதனமோ அல்ல. உனது பிள்ளைகள் இரவலாக உனக்குக் கொடுத்தது. அதைப் பாதுகாப்பாக அவர்களிடம் ஒப்படைப்பது உனது கடமை' என்பது அமெரிக்கப் பழங்குடி மக்களின் ஒரு பழமொழி. இதை நாம் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்திருந்து இந்த நிலத்தையும் சூழலையும் மாசுபடுத்தப்படாமல் காப்பாற்றி எமது அடுத்த சந்ததியினருக்கு ஒப்படைப்பது எமது தலையாய கடமையாகும்.

(முற்றும்)



வைத்திய கலாநிதி
ந.சிவராஜா

'இந்த நிலம் உனக்குக் கொடுக்கப்பட்ட முதுசமோ அல்லது சீதனமோ அல்ல. உனது பிள்ளைகள் இரவலாக உனக்குக் கொடுத்தது. அதைப் பாதுகாப்பாக அவர்களிடம் ஒப்படைப்பது உனது கடமை' என்பது அமெரிக்கப் பழங்குடி மக்களின் ஒரு பழமொழி. இதை நாம் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்திருந்து இந்த நிலத்தையும் சூழலையும் மாசுபடுத்தப்படாமல் காப்பாற்றி எமது அடுத்த சந்ததியினருக்கு ஒப்படைப்பது எமது தலையான கடமையாகும்.

# நோய் எதிர்ப்பை அதிகரிக்கும் ஒரு கரண்டி சீனி



சிறிய நுண்ணுயிரிகளால் ஏற்படும் நோய்த் தொற்றை எதிர்ப்பதற்கு ஒரு கரண்டி சீனி வெகுவாக உதவுகிறது என்று ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

நோய்த் தொற்றை எதிர்க்கும் திறனை மேம்படுத்துவதில் சர்க்கரை முக்கிய பங்கு வகிக்கிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு சில நுண்ணுயிரிகளின் தொற்றுக்கள் பாதிப்புக் காரணமாக நோய்கள் நீண்ட காலம் இருப்பதுடன், அடிக்கடி நோய்களை ஏற்படுத்துவதாகவும் உள்ளன. மருந்தில் உள்ள நோய் எதிர்ப்புத் தன்மையை நுண்ணுயிரிகள் வீரியம் இழக்கச் செய்து விடுவதால் நோய்த் தொற்றுப் பாதிப்பு அடிக்கடி ஏற்படுகிறது.

நுண்ணுயிரிகளால் ஏற்படும் நோய்ப் பாதிப்பைத் தவிர்க்க தாவர இனிப்பு வகைகளான குளுக்கோஸ், ப்ரக்டோஸ் உதவுகிறது. ஒரு கரண்டி சீனி மருந்தின் நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரித்து நுண்ணுயிரிக் கிருமிகள் அழிக்கப்படுகின்றன. இதனால் நோயாளிகளுக்கு ஏற்படும் நோய்த் தொற்று அபாயமும் தவிர்க்கப்படுகிறது.

பாஸ்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சர்க்கரையைப் பயன்படுத்தி நுண்ணுயிரி சோதனையைச் செய்த போது இந்த உண்மை தெரியவந்தது. சிறுநீரகப் பாதையில் இ.கோலி என்ற பக்டீரியா நோய்த் தொற்றை ஏற்படுத்தும்.

இந்தப் பாதிப்பை அடிக்கடி ஏற்படுத்தும் நுண்ணுயிரியை 99.9 சதவீதம் 2 மணி நேரத்தில் சீனி உதவி மூலம் விஞ்ஞானிகள் அகற்றினர்.

# சீனாவில் டைனோசரின் பாகங்கள் கண்டுபிடிப்பு



அழிந்து விட்டதாகக் கருதப்படும் பிரமாண்ட வகை உயிரினமான டைனோசரின் புதிய இனம் ஒன்றை சீன ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கிழக்கு சாங்டாங் பகுதியில் இருந்து தொல்பொருள் ஆய்வாளர்கள் இந்த எலும்புகளைக் கண்டெடுத்துள்ளனர்.

இதற்கும் டைரன்னோசரஸ் ரெக்ஸ் இனத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. இதன் மேல் தாடை எலும்புகள் மற்றும் மண்டை ஓட்டை ஜூசங் பகுதியில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

டைனோசரின் மண்டை ஓடு உட்பட 7 ஆயிரம் கிலோ எடையுள்ள எலும்புகள் கிடைத்துள்ளன. இவை சுமார் 11 மீற்றர் நீளமும், 4 மீற்றர் உயரமும் உடையவை.

உலகிலேயே சீனாவின் சுசியாங் பகுதியில்தான் அதிக அளவில் டைனோசரின் எலும்புகள் கிடைத்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# கடலில் 10 ஆயிரம் மைல்கள் நேர்கோட்டு வழியில் துல்லியமாகப் பயணிக்கும் திமிங்கிலங்கள்

ஹம்ப்பெக் எனப்படும் திமிங்கில வகைகள் கடலில் இடம்பெயர்வதற்காக சுமார் 10 ஆயிரம் மைல்கள் வரை வழி தவறாமல் நேர்கோட்டு வழியில் பயணிக்கின்றன. அதற்குக் காரணம் அவை சூரிய சந்திர மற்றும் நட்சத்திரங்களின் நிலைகளைப் பின்பற்றுவதே என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இது தொடர்பாக ஆராய்ச்சி நடத்திய விஞ்ஞானிகளுக்குப் பல தகவல்கள் கிடைத்துள்ளன. விஞ்ஞானிகளின் கருத்தின்படி இந்த வகைத் திமிங்கிலங்கள் சூரியனின் நிலை புவியின் ஈர்ப்புச் சக்தி மற்றும் நட்சத்திரங்களின் உதவியுடனேயே சுமார் 10 ஆயிரம் மைல்கள் வரை மிகத் துல்லியமாகப் பயணித்து இடம்பெயர்கின்றன என்று தெரிவிக்கின்றனர். மேலும் இவை தமது நேர்கோட்டுப் பாதையில் இருந்து 5 பாகைக்கும் குறைவாகவே வளைகின்றன என்றும் சீரற்ற காலநிலை மற்றும் கடலில் ஏற்படும் மாற்றங்களிலும் அதன் பாதையிலிருந்து விலகுவதில்லை என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாடின்றிய நிலையில் காத்திருக்கும் வேலணை புரட்டஸ்தாந்து தேவாலயம்

வேலணைப் பகுதியில் கிறிஸ்தவ தேவாலயங்கள் இருந்தபோதும் அதன் மத்திய பகுதியான வங்களாவடியில் அமைந்துள்ள ஒரேயொரு கிறிஸ்தவ தேவாலயமாக இது உள்ளது.

இந்த புரட்டஸ்தாந்து தேவாலயம் மிகவும் சிறிய கட்டடமாக 1850 இல் அமைக்கப்பட்டு 1990 ஆம் ஆண்டு வரை சிறந்த முறையில் இயங்கிய ஒரு வழிபாட்டுத் தலமாக இருந்துள்ளது.

19ஆம் நூற் றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் மிஷனரிகளின் வருகை இடம்பெற்றது. எனினும், இவர்களின் செயற்பாடுகள் தீவுப்பகுதியில் றோமன் கத்தோலிக்க மதத்தைப் போன்று பெரிய அளவில் மக்களைத் தம்பக்கம் ஈர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டை உட்பட அயல் கிராமங்களில் இவர்கள் பாடசாலைகளை அமைத்து சமயப் பணிகளிலும் கல்விப் பணியிலும் அக்கறை காட்டியபோதும் பெரும்பாலான இந்துக்கள் கல்வியை மட்டும் இவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்களேயன்றி புரட்டஸ்தாந்து மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருக்கவில்லை.

தென்னிந்தியத் திருச்சபையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த ஆலயம் தீவுப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் முழுமையாகச் சேதமுற்ற போதும் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. எனினும், புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவியவர்கள் இன்று இந்தப் பிரதேசத்தைவிட்டு இடம்பெயர்ந்த நிலையில் 1991 இற்குப் பின்னர் இந்த ஆலயம் கவனிப்பாரின்றிக் காணப்படுவது போல் உள்ளது.



இந்தத் தேவாலயத்துடன் கட்டப்பட்ட பாடசாலையும் வேலணைப் பிரதேசகல்விவளர்ச்சியில் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

1961 இல் அரசு இந்தப் பாடசாலையைக் கையேற்றுக் கொண்டது. எனினும், 1991 இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர் இன்னமும் அது இயங்கியதாக இல்லை. தற்சமயம் பற்றைகள் வளர்ந்து காட்டுப் பகுதியில் உள்ள ஒரு கட்டடமாகத் தோற்றமளிக்கும் இதனை மீள வழிபாட்டுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதே புரட்டஸ்தாந்து மதத்தவர்களின் விருப்பாகும்.

**லக்ஸ்மன்**


★

# அற்புதக் காட்சிகள் நிகழ்த்தி மக்களுக்கு அருள்பொழியும் மருதடி வீரகத்தி விநாயகர்

*(சென்ற வாரத்தொடர்ச்சி)*

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகருக்கு 1982 ஆம் ஆண்டில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பத்து நாள்கள் அலங்கார உற்சவம் நடைபெற்றது. தொடர்ந்து கொடித் தம்பம் அமைகக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டு தொடக்கம் மகோற்சவம் இடம்பெற்று வந்தது.

1991ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்ததினால் கோயிலின் நித்திய பூசைகள் தடைப்பட்டன. 1996 ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியவுடன் கோயிலைப் புதுப்பித்து சித்திபானுவருடம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி வைத்தீஸ்வரக் குருக்களின் அருளாசியுடன் நவாலி விஸ்வநாதரைக் குருவாக நியமித்து மஹாகும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. ஒரு மண்டல அபிஷேக பூர்த்தியில் நவாலி விஸ்வநாதக் குருக்கள்சர்வபோதகராகவும் இருந்து 1008 சங்காபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது.



1940 ஆம் ஆண்டு வரை பல வருடங்களாக கந்தபுராணபடனம் ஐப்பசி கந்த சஷ்டி ஆரம்பம் முதல் தைப்பூசம் வரை பாராயணம் செய்யப்பட்டது. மார்கழி திருவெம்பாவை காலத்தில் திருவாதவூரடிகள் புராண படனமும் நவராத்திரியை அடுத்து விஜயதசமியில் வித்தியாரம்பம் செய்யும் நிகழ்வும் இந்தக் கோயிலுக்குத் தனிச்சிறப்புக் கொடுத்து வருவதுடன், இங்கு மாதம் தோறும் சதுர்த்தி உற்சவம், பிள்ளையார் கதை படிப்பு 21 நாள், திருவெம்பாவை பத்து நாள்களும் சிறப்பாக நடை பெற்று வருகின்றன. வைகாசி மாதத்து சதய நட்சத்திரத்தை அந்தமாகக் கொண்டு முதல் பத்துத் தினங்களும் மகோற்சவமும் இடம்பெற்று வருகின்றது.

இந்தக் கோயிலின் இறைவன் மேல் பண்டிதர் ச. பஞ்சாட்சரக் குருக்கள் விநாயகர் இரட்டை மணி மாலையும் திருவூஞ்சல் பதிகமும் இயற்றி உள்ளார். இந்த ஆலயத்தில் கடந்த இரண்டு வருடங்களாக விநாயகர் விரத காலத்தில் 21 தினங்களும் கணபதி ஹோமம், யாகம், இலட்சார்ச்சனை என்பன ஊர் நன்மை வேண்டியும் நாட் டின் சாந்தி, சமாதானம் வேண்டியும் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் வெள்ளிக்கிழமைகளில் மாலை வேளைகளில் ஓய்வுபெற்ற அதிபர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் கூட்டுப்பிரார்த்தனை, பஜனை வழிபாடு என்பனவும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடக் தக்கது. இவ்வாறு அற்புதங்கள் நிறைந்த மருதடி வீரகத்தி விநாயகரை வழிபடும் அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ வேண்டுகின்றோம்.

★

**தொகுப்பு: டர்னிகன்**

# சோழர் காலச் சிற்பக் கலையில் முதன் முதலாக காரைநகரில் தோற்றம்பெற்ற வியாவில் ஐயனார்

யாழ்ப்பாணத்தை தமிழ் அரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் தமிழகத்தின் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து வந்த குளக்கோட்டரசன் காரைதீவில் தங்கியிருந்து வியாவிலில் 7 நிலை மாடக் கோபுரம் அமைந்து ஐயனார் கோயிலைப் பெரிதாகக் கட்டுவித்தான். இதுவே சோழர்காலச் சிற்ப முறைப்படி காரைநகரில் முதல்முதல் அமைக்கப் பட்ட கோயிலாகும்.

இந்தக் கோயில் மிகப் பிரமாண்டமானது. வானளாவிய கோபுரங்களுடன் கூடியது. நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் கோபுர உச்சியில் வைக்கும் தீப ஒளி வியாவில் ஐயனார் கோயிலுக்கும், வியாவில் ஐயனார் கோயிலில் வைக்கும் தீப ஒளி பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலுக்கும், வரதராஜப் பெருமாள் கோயிலில் வைக்கும் தீப ஒளி மாவைக் கந்தன் ஆலயத்துக்கும் தெரியும் என்று எம் முன்னோர் கூறுவர்.

குளக்கோட்டு மன்னன் வியாவில் ஐயனார் கோயிலைக் கட்டுவித்த காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து முத்துமாணிக்கச் செட்டியார் என்பவர் காரைத்தீவுக்கு வந்து குடியேறிப் பெரிய கப்பல்களை வைத்து வியாபாரத்தை மேற்கொண்டு வந்தார். மன்னனுடைய கட்டளைப்படி செட்டியார் தனது கப்பலில் கோயிலுக்கு வேண்டிய திருவுருவங்களையும் ஏனைய பொருள்களையும் ஏற்றிக் கொண்டு திருவுத்தரகோசமங்கையிலிருந்து மங்களேஸ்வரக்குருக்கள், சுந்தரேஸ்வரக் குருக்கள் ஆகிய இரு அந்தணப் பெருமக்களையும் கோயிற் பூசைக்காக அழைத்துக் கொண்டு வந்து ஊர்காவற்றுறையில் இறங்கினார். குளக்கோட்டு மகாராசா பரிவாரங்களோடு சென்று அவர்களை வரவேற்று உபசாரங்களைச் செய்து அழைத்து வந்து ஐயனார் கோயில் மட வளாகத்தில் வசிக்குமாறு குடியமர்த்தினார். இவர்கள் வந்திறங்கிய காலம் கி.பி. 1517 ஆம் ஆண்டு என்று அறியப்படுகிறது.

காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து கொண்டு வந்த ஐயனாரையும் ஏனைய விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்வித்துக் கும்பாபிஷேகத்தை நடத்தினர். கி.பி. 1518 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 25 ஆம் திகதி கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் மண்டலாபிஷேகம் வரை செய்யப்படும் விழாக்களையும் முறைப்படி செய்வித்து தொடர்ந்து நித்திய பூசைக்கான ஒழுங்குகளையும் செய்வித்தான் மன்னன்.

மங்களேஸ்வரக் குருக்களின் மகனாகிய சூரிய நாராயணக்குருக்கள் பூசகராகப் பணியாற்றிய காலத்தில் போர்த்துக்கீசர் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்குடன் வியாவில்ஐயனார் ஆலயத்தை இடித்து அழிக்க முற்பட்டனர். அதற்காக வந்தவர்கள் வாயில் இருந்து இரத்தமாக வாந்தியெடுத்து இறந்து போயினர். அதனால் அச்சமடைந்த போர்த்துக்கீசர் ஆலயத்தை இடிக்காது விட்டுப் போயினர்.

கி.பி. 1658 இல் சூரிய நாராயணக் குருக்களின் மகன் கனகசபாபதிக்குருக்கள் பூசை செய்த காலத்தில் போர்த்துக்கீசரைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றிய ஒல்லாந்தர், ஐயனார் ஆலயத்தை இடிக்க முற்பட்டபோது நால்வர் கண் தெரியாதவர்களாயும் இருவர் நடக்க முடியாதவர்களாயும் ஆகிவிடவே இடிக்கும் முயற்சியை ஒல்லாந்தர் கைவிட்டனர்.

16 ஆம் நுற்றாண்டின் மத்தியில் ஒல்லாந்தர்கள் சிலர் வந்து ஆலயப்பூசைகளை நடக்க விடாது தடுத்துத் துன்புறுத்தினர். இதனால் வேதனையடைந்த மங்களேஸ்வரக்குருக்களின் மகனாகிய கனகசபாபதிக்குருக்கள் விக்கிரகங்களைக் கோயிலிலிருந்து எடுத்துச் சென்று நில அறை ஒன்றில் வைத்துப் பூஜைகள் செய்து வந்தார். அந்த வேளையில் திரளாக வந்த ஒல்லாந்தப்படை வீரர்கள் விக்கிரகங்கள் இல்லாத கோயிலையும் கோபுரத்தையும் இடித்தழித்து அந்தக் கற்களை எடுத்துச் சென்று ஊர்காவற்றுறைக் கடலிடையே "கம்மன்கீற்" (கில்மன்) கோட்டையைக் கட்டுவித்தனர்.

அதன் பின்னர் நில அறையில் விக் கிரகங்களுக்குப் பூசை செய்வதை அறிந்து விக்கிரகங்களையும் கோயிற் பொருள்களையும் எடுத்துக் கிணற்றில் போட்டு வீரன் என்பவனை வெட்டிப் பலி கொடுத்து தேரையும் வாகனங்களையும் கடலிலே தள்ளிவிட்டு ஆபரணங்கள் எல்லாவற்றையும் சூறையாடிச் சென்று விட்டனர் ஒல்லாந்தர்கள். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் வெளியீடான
# கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு

நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஆசிரியர்
திரு.ப.எல்.எம்.சாஜித்




பரீட்சை இலக்கம்: 01

## தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:......................... **வினாத்தாள்-1** நேரம்: 45 நிமிடங்கள்

★ கீழே தரப்பட்ட நான்கு உருக்களில் ஒன்று மற்றொன்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையது. இவ்வாறு தொடர்புபடும் இரண்டு சோடிகளையும் தெரிவுசெய்க.

01.





01) AB CD  2) AC BD  3) AD BC

02.




01) AC BD  2) BA DC  3) DA CB

03.




01) CD BA  2) DB CA  3) AD BC

★ பிழையான கூற்றின் கீழ்க் கோடிடுக,

04. 1) படகமுவ வனம் இந்தியாவில் உள்ளது.
2) இலங்கைக்கு மகிந்ததேரர் புத்தமதத்தைக் கொண்டுவந்த நாளையும் அவரையும் நினைவுகூர பொசன் தினம் கொண்டாடப்படுகின்றது.
3) பக்றித் பண்டிகையை முஸ்லிம்கள் கொண்டாடுகின்றனர்.

05. 1) இலங்கையில் பன்னவல என்ற இடத்தில் யானைகள் சரணாலயம் உள்ளது.
2) எமது நாட்டின் தேசிய மிருகம் யானை ஆகும்.
3) காலாவதியான தகரத்தில் அடைத்த மீனை உண்பதால் வயிற்று வலி, வாந்தி ஏற்படும்.

★ தரப்படும் சொற்களைக் கொண்டு கருத்துள்ள 3 வசனங்கள் அமைக்குக. ஒரு வசனத்தில் பயன்படுத்தப்பட்ட சொல் இன்னொரு வசனத்தில் இடம் பெறக்கூடாது.

| |
|---|
| மைதானத்தைச், கானகத்தில், அமைக்கப்பட்டுள்ளது, மிருகங்கள், வேலி, கோலத்திலும், அலைந்தன, உண்டு, பல, நீரின்றி, வகைகள், சுற்றி. |

06. ..........................................................................................

07. ..........................................................................................

08. ..........................................................................................

09. நான் என்ன குறைந்தவனா? என்னிலும் கல்சியமுண்டு. கண்ணுக்குகந்த விற்றமின் C உண்டு. பழரசமாக அருந்தவும் மட்டுமன்றி இன்று எல்லோருக்கும் ஏற்றவனாகிவிட்டேன். மக்கள் மட்டுமன்றி யானை போன்ற மிருகங்களும் என்னை விடமாட்டார்கள். நான் யார்? ..........................................

10. நான் புத்தக அலுமாரியில் புத்தகங்களினிடையே வாழ்வேன். மிகச்சிறிய பருமன் உடைய நான், இளம் சாம்பல் நிறத்தில் காணப்படுவேன். புத்தகங்களை அரித்துண்டு சேதமாக்குவேன். நான் சுறபிள்ளை ஈனும் தன்மையுடையவன் நான் யார்? ..........................................................

★ கீழே தரப்படும் வினாக்களில் விவரணம் சரியாயின் சரி எனவும், தவறாயின் பிழை எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

11. ஒரு பெட்டியினுள் இரண்டு வெள்ளை, இரண்டு பச்சை நிற மாபிள்கள் போடப்பட்டிருந்தன. ராம் பெட்டியினுள் கையை விட்டு மாபிள் ஒன்றை எடுத்தான். அது வெள்ளை நிறம். இரண்டாம் முறை கையை விட்டு எடுத்தான். அவனுக்கு வெள்ளை நிறம் மட்டுமே கிடைக்கும் என்பது சரி, பிழை. (.........................)


12. மூடைகளுடன் ஓடத்தில் சென்ற கண்ணன் பொருள்களின் பாரம் தாங்காது கவிழ்ந்து விடும் எனப்பயந்து அதனைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டான். அதனால் ஓடம் கரையை அடைந்தது (.........................)

★ முதலில் உள்ள வாக்கியத்துக்குப் பொருத்தமான உருவையுடைய விடையின் கீழ்க்கோடிடுக.


13. நாய் வாலை ஆட்டிக்கொண்டு தந்தையை வரவேற்கின்றது.




14. கிணற்றிலிருந்து நீரை இறைத்து குடத்தை நிரப்பிய பெண், குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்கிறாள்.




15. தொப்பி ஒன்றைத் தலையில் அணிந்துகொண்ட மனிதன், கையில் புத்தகம் ஒன்றை ஏந்திய வண்ணம் பாதையில் செல்கிறான்.




★ தரப்படும் கவிதையை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க்கோடிடுக

மனதுக்கு இதம் தரும் மல்லிகைப் பூ வாசம்
கண்களுக்கு அழகு தரும் கனகாம்பரம்
கொத்துக்கொத்தாய்ப் பூத்துக் குலுங்கும்
ரோசாவும் செவ்வந்தியும்
பூவனத்தில் புகுந்த போது........

16. அந்தப் பூவனத்தில் மணம் வீசியது,
1) மல்லிகை.  2) கனகாம்பரம்.  3) றோசா.


17. பூ வனத்தில் இல்லாத பூ எது ?
1) செவ்வந்தி.  2) மல்லிகைப்பூ.  3) செவ்வரத்தம் பூ.

★ சரியான'விடையின் கீழ்க்கோடிடுக.

18. பின்வரும் உருக்களில் 8 முக்கோணிகளை பெறக்கூடிய உரு அல்லாதது,




19. இந்த உருவிலிருந்து பெறக்கூடிய ஆகக்கூடிய முக்கோணிகளின் தொகை யாது ?



1. 8  2. 9  3. 10  4. 11

★ # என்பது கூட்டலையும், ⌑ என்பது கழித்தலையும், ⦸ என்பது சமனையும் குறிக்கின்றன. இதற்கேற்ப சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

20. 1. 6#2⌑4⦸3  2. 8⌑2⦸3#3  3. 5⦸1⌑4#2

21. 8#2⦸............ புள்ளிக்கோட்டில் வரவேண்டிய விடை யாது?
1. 6  2. 16  3. 10  4. 4

★ தரப்படும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக


| | | | | |
|---|---|---|---|---|
| B | N | F | H | B |
| X | Y | Z | A | N |
| B | R | K | L | N |
| O | R | R | R | R |
| T | R | N | M | O |

குறிப்பு: இவ்வினாத்தாளிற்குரிய விடைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பகுதி 2 வினாத்தாளுடன் வெளிவரும்.

22. A என்ற எழுத்திற்குக் கீழ் உள்ள எழுத்திற்கும் Y என்ற எழுத்திற்குக்கீழ் உள்ள எழுத்திற்கும் சரி நடுவே உள்ள எழுத்தைச் சுற்றி வட்டமிடுக.

23. இங்கு அதிக தடவை வந்த எழுத்து யாது? (..................)

★ தரப்படும் வென்வரிப் படத்தை அவதானித்து சரியான விடையின் கீழ்க் கோடிடுக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மிஸ்ட்கோல்' ஆல் மிஸ்ஸான வாழ்வு



யாழ்ப்பாணத்து இளம்பெண்களின் தற்போதைய எதிர்காலம் வெளிநாட்டிலேயே இருக்க வேண்டும் என்று பெற்றோர் விரும்புகின்றனர். அதற்குப் பலகாரணங்கள் உள்ளன. தமது பிள்ளைகள் இங்கு இருப்பதை விடவும் வெளிநாட்டிலிருந்தால் பிள்ளைகளினதும் குடும்பத்தினதும் பொருளாதார பலம் அதிகரிக்கும் என்பது அந்தக் காரணிகளில் முக்கியமானது.

இப்படியான கனவுடன் கனடா மாப்பிள்ளை ஒருவரைக் கரம் பிடிக்கும் எண்ணத்தோடு யுவதி ஒருத்தி பெற்றோருடன் கொழும்புக்குப் பயணமானாள். மாப்பிள்ளையின் பெற்றோரும் கொழும்பிலேயே வீடு, வாசல் எல்லாம் வாங்கி அங்கேயே செட்டிலாகி விட்டனர். மாப்பிள்ளை லீவில் வருவதால் ஒரேயடியாகத் திருமணத்தை முடித்துக் கொண்டு, எம்பஸி அலுவல்களைப் பார்த்தால் விரைவாகக் கடல்கடந்து மகள் சீமைக்குப் போய்விடுவாள் என்று பெற்றோரும் மகளைக்கூட்டிக்கொண்டு கொழும்பு புறப்பட்டனர். இருதரப்பினரும் ஒரே வீட்டில் இருந்ததால், வெகு விரைவிலேயே அந்நியோன்யமாகப் பழகத்தொடங்கிவிட்டனர். மாப்பிள்ளை வந்திறங்கிய கையோடு அவரது கண்கள் பெண்ணைத்தான் தேடின. அவளது அழகில் அவர் தன்னை மறந்தார். திருமண நாளைக் குறிக்கும்படி கூறிவிட்டு, திருமணத்துக்கான உடுபுடைவைகள் வாங்கவென ஒருவாரகாலப் பயணமாக இந்தியாவுக்குச் சென்றார். அசுர கதியில் அலுவல்கள் நடந்தன. கல்யாணத்துக்கு நாள் குறித்து, 'கார்ட்' அடித்து, எல்லோருக்கும் கொடுத்தாயிற்று. திருமணத்துக்கான எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தி. இன்னும் மூன்று நாள்களில் திருமணம். ஆனால் அதற்குள் துரதிர்ஷ்டம் அந்தப்பெண்ணின் வாழ்வில் செல்போன் வடிவில் உள் நுழைந்தது.

திடீரென நேரகாலம் இல்லாமல் அவளது செல்போனுக்கு 'மிஸ்ட்கோல்' வரத்தொடங்கியது. போனில் பேச முற்படுகையில் மறுமுனைத்தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இதைப்பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாத மாப்பிள்ளை வீட்டார், எந்தநேரமும் செல்போன் அலறத் தொடங்கியதால் 'அலேர்ட்' ஆனார்கள். பெண்ணின் தொலைபேசிக்கு வந்த இலக்கத்தோடு வேறொரு போனில் இருந்து தொடர்பெடுத்தபோது, மறுமுனையில் கேட்டது ஓர் ஆணின் குரல். குறித்த பெண்ணின் இலக்கத்துக்கு இனிமேல் 'மிஸ்ட் கோல்'போடவேண்டாம் என்று சற்றுக்காரமாக அந்த ஆண்குரலிடம் கூறப்பட்டது. ஆனால் அதன் பின்னர் அந்த இனந் தெரியாத ஆணின் செல்போன் தொல்லை கட்டுமீறியது. ஆபாச எஸ்.எம்.எஸ்கள் செல்போனின் 'இன்பொக்ஸை' நிறைத்தன. செல்போனை 'ஓஃப்' பண்ணவும் முடியாது. மாப்பிள்ளையின் கோல் இவளது செல்போனுக்குத்தான் வரும். 'ஓஃப்' பண்ணினால் மாப்பிள்ளை ஏதாவது நினைத்துவிடக்கூடும். 24 மணிநேரத்தில் அந்த அநாமதேய இலக்கத்திலிருந்து ஏறக்குறைய 150இற்கும் அதிக 'மிஸ்கோல்'கள். மாப்பிள்ளை வீட்டாரின் சந்தேகம் வலுக்கத் தொடங்கியது.

''இவள் பெட்டை ஆரையோ 'லவ்' பண்ணியிருக்கிறாள். அவன் தான் இப்பிடி 'மிஸ் கோல்' விட்டு அரியண்டம் குடுக்கிறான்'' என்று தமக்குள் தீர்மானம் எடுத்துக் கொண்டு, அதை இந்தியாவில் திருமணத்துக்காக பட்டுச்சேலை, உடுபுடைவைகள் என்பவற்றை ஆசையோடு வாங்கிக் குவித்துக் கொண்டிருந்த மகனின் காதிலும் போட்டனர். அவ்வளவு தான்.

''வேற பெடியனோட உங்கட மகளுக்குத் தொடர்பு இருக்கெண்டு எங்கட பிள்ளை நினைக்கிறான். அதால இந்தக் கலியாணம் வேண்டாமாம்.''

அடித்துத் துரத்தாத குறையாக இந்த வார்த்தைகளை ஏந்திக் கொண்டு அந்தப்பெண்ணும் அவளது குடும்பத்தினரும் யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்டனர். ஆனால் உண்மையில் மாப்பிள்ளை வீட்டார் நினைத்தது போன்று அந்தப்பெண் வேறெவரையும் காதலிக்கவில்லை. அப்படியானால் அவளது செல்போனுக்கு எப்படி 'மிஸ்ட் கோல்' வரும் என்று நீங்கள் கேட்கலாம்.

இப்போது பெண்களின் செல்போன் இலக்கங்களை அறிந்து அவர்களுக்கு இப்படி 'மிஸ்ட் கோல்'போட்டு 'விழுத்துவது' என்பது இளைஞர்களின் தீவிரமான பொழுதுபோக்கு. சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு பெண்களை மடக்கியவர்களும் உண்டு. ஆயினும், இவையெல்லாம் அப்பாவிப் பெண்களுக்கு வேண்டத்தகாத விளைவுகளையே கொண்டுவரக்கூடியவை. இளம்பெண்கள் தமது செல்போன் நம்பர்களை நம்பிக்கைக்குரியவர்களிடம் மட்டுமே பகிரவேண்டும். அவ்வாறு குறித்த பெண்ணின் இலக்கங்களை வைத்திருப்பவர்களும் அந்த இலக்கங்கள் வேறு நபர்களிடம் சென்றுவிடாதிருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்,

இப்படியெல்லாம் கண்கொத்திப் பாம்பாக இருந்தாலும் கூட பல இளம்பெண்களின் செல்போன் நம்பர்கள் கூவி விற்காத குறையாக உலவத் தொடங்கி விடுகின்றன. அதற்கு முக்கிய காரணம் 'ரீ-லோட்' தான். செல்போனுக்கு 'ரீ-லோட்' செய்யும் போது குணம் தெரியாத கடைக்காரரிடம் இலக்கத்தை வழங்கி விடுகிறோம். அதன்போது அந்தக் கடைக்காரரோ அல்லது அந்தக் கடையில் அடுத்ததாக 'ரீ-லோட்' செய்ய வருபவர்களோ அந்தப் பெண்ணின் செல்போன் இலக்கத்தை ஞாபகத்தில் வைத்திருந்து தம் லீலைகளை ஆரம்பித்து விடுகின்றனர். இத்தகைய சிக்கலில் இருந்து தப்பிக்க எல்லாத்தொலைபேசி நிறுவனங்களும் பாதுகாப்பு இலக்க நடமுறைகளைக் கொண்டிருக்கின்றன. அதன்படி நீங்கள் சேவையைப் பெறுகின்ற தொலைபேசிச்சேவை நிறுவனத்துக்குச் சென்று, உங்கள் இலக்கத்துக்குரிய பாதுகாப்புக் குறியீட்டு இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.பின்னர் 'ரீ-லோட்'செய்யும் போது உங்கள் செல்போன் இலக்கத்துக்குப் பதிலாக அந்தப் பாதுகாப்பு இலக்கத்தைக் கொடுத்தால் வழமை போலவே உங்கள் கணக்கில் 'ரீ-லோட்'செய்யும் தொகை சேர்ந்துவிடும். தேவையற்ற சிக்கல்களைத் தவிர்க்க இந்த வழியை நாடலாமே!

**ஓருகாலி**

---

24. வலைப் பந்தாட்டத்தை எத்தனை பேர் விரும்புகின்றனர்?
 1. 4 2. 8 3. 18 • 4. 23

25. கரப்பந்தாட்டத்தை மாத்திரம் விரும்புவோர் எத்தனை பேர்?
 1. 14 2. 30 3. 22 4. 22


✱ பின்வரும் கோவையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


6➲2=6#6

26. இங்கு ➲ என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?
 1) கூட்டல். 2) கழித்தல். 3) பெருக்கல்.

27. # என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?
 1) கூட்டல். 2) கழித்தல். 3) பெருக்கல்.

✱ அடுத்து வரவேண்டிய உருவின் கீழ்க் கோடிடுக.

28.


29.


✱ தெளிவான கருத்தை வெளிப்படுத்தும் வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக

30. 1) துணையில்லாத வியாபாரி செல்வந்தப் பிச்சைக்காரனிடம் உண்பதற்கு ஏதாவது தரும்படி வேண்டினான்.
 2) துணையில்லாத பிச்சைக்காரன் செல்வந்த வியாபாரியிடம் உண்பதற்கு ஏதாவது தரும்படி வேண்டினான்.
 3) செல்வந்தப் பிச்சைக்காரன் துணையில்லாத வியாபாரியிடம் உண்பதற்காக ஏதாவது தரும்படி வேண்டினான்.

31. 1) பாயின் மேலே கட்டிலை விரித்து சறோஜ் மகிழ்ச்சியுடன் உறங்கினான்.
 2) சறோஜின் மேலே பாயை விரித்து கட்டில் மகிழ்ச்சியுடன் உறங்கினான்.
 3) கட்டிலின் மேலே பாயை விரித்து சறோஜ் மகிழ்ச்சியுடன் உறங்கினான்.

✱ யமுனா பெண்பிள்ளை ஆவாள். யமுனாவின் அண்ணாவிற்கு 3 பெண் சகோதரிகளும், 2 சகோதரர்களும் உள்ளனர்.

32. யமுனாவிற்கு எத்தனை சகோதரிகள் உண்டு?
 1) 1 2) 2 3) 3 4) 4

மாணவர் வெற்றியே எமது இலக்கு!

33. யமுனாவுக்கு எத்தனை சகோதரர்கள் உண்டு?
 1) 1 2) 2 3) 3 4) 4

✱ வெற்றிடத்தில் வரவேண்டிய மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.

34. ஒரு பாடசாலையில் எப்போதும் ..............................
 1) ஆசிரியர் இருப்பார். 2) புத்தகம் இருக்கும்.
 3) மணிக்கூடு இருக்கும். 4) மைதானம் இருக்கும்.


35. மகன் எப்போதும் தந்தையிலும் ........................ குறைந்தவனாக இருப்பான்.
 1) அறிவு. 2) ஆற்றல். 3) வயது. 4) நிறம்.


✱ கீழ்வரும் வினாக்களில் முதலிரு சொற்களுக்கு மிடையிலான தொடர்பை அவதானித்து மூன்றாவது சொல்லுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

36. எழுத்தாணி - ஏடு வெண்கட்டி................
 1) சுண்ணாம்பு. 2) எழுத்து.
 3) கரும்பலகை.

37. பணம் - வட்டி வீடு ...............
 1) விற்பனை 2) ஈடு
 3) வாடகை

✱ கீழுள்ள வினாக்களில் காட்டப்பட்டுள்ள உருக்களை அம்புக்குறித் திசையிலிருந்து கவனித்தால் தோன்றும் தோற்றத்தைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

38. அ.


ஆ


✱ முதலில் தரப்படும் கூற்றுக்கு மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

39. மழை நீராகும். எனவே,
 1) நீரெல்லாம் மழையாகும் என்பது உண்மை.
 2) மழையெல்லாம் நீராகும் என்பது பொய் அல்ல.
 3) மழை பெய்வதால் நீர் நிரம்பும் என்பது பொய்.

40. சில பிரயாணிகள் கடத்தல்காரர்களாவர். எனவே,
 1. கடத்தல்காரர்களில் சிலர் பிரயாணிகள் ஆவர்.
 2. கடத்தல்காரர்களில் சிலர் பிரயாணிகள் அல்லர்.
 3. பிரயாணிகள் எல்லோரும் கடத்தல்காரர்கள் அல்லர்.

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் அத்துமீறி நுழைந்து நேட்டோ படை திடீர்த் தாக்குதல்

## உளவுத்துறை அதிகாரிகள் அதிர்ச்சி

வர்ஜிஸ்தான், மே 18

பாகிஸ்தான் ராணுவ செக் போஸ்ட் மீது நேட்டோ படையினர் அத்துமீறி நுழைந்து அதிரடித் தாக்குதல் நடத்தினர். பாக்., வீரர்கள் இயந்திரத் துப்பாக்கிகள்மூலம் எதிர்த்தாக்குதல் நடத்தியதில் எவ்வித சேதமும் இல்லாமல் தப்பினர். இந்தத் தாக்குதலில் பாக்., வீரர்கள் 2 பேர் மட்டுமே காயமுற்றனர்.

இது குறித்து நேட்டோ படையினர் எவ்வித கருத்தும் தெரிவிக்க மறுத்து விட்டனர்.

பாகிஸ்தானில் பதுங்கி இருந்த ஒசாமாவை கடந்த 2 ஆம் திகதி அமெரிக்க உளவுத்துறையினர் அதிரடித் தாக்குதல் நடத்தி கொன்றனர். இதனையடுத்து அமெரிக்கா- பாக்., உறவில் சற்று விரிசல் ஏற்பட்டது. என்றாலும் இரு தரப்பினரும் வெளிப்படையாக காட்டிக்கொள்ளவில்லை. பாகி., ஐ.எஸ்.ஐ., ஒசாமா வுக்கு உதவி செய்திருக்கலாம் என்ற சந்தேகத்திற்கு அமெரிக்காவிடம் பாகிஸ்தான், தனது விளக்கத்தை கொடுத்துள்ளது.

இந்நிலையில் ஆப்கனில் முகாமிட்டுள்ளநேட்டோபடையை சேர்ந்த 2 ஹெலிகொப்டர்கள் பாக்., எல்லைக்குள் நுழைந்து வடக்கு வர்ஜிஸ்தான் மலைப் பகுதியில் உள்ள டாட்டா கேல் பகுதியில் உள்ள பாகிஸ்தான் செக் போஸ்ட் மீது இந்தத் தாக்குதல் நடத்தியுள்ளன. இதற்கு பதிலாக பாக்., வீரர்கள் சுட்டனர்.

ஹெலிகொப்டர் தப்பித்து பறந்து சென்று விட்டன. ஆனால் இந்தச் சம்பவம் குறித்து பாகிஸ்தான், உளவுத்துறை அதிகாரிகள், அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்.



சீனா வந்திருந்த ஐரோப்பிய யூனியன் கவுன்சிலின் தலைவர் ஹர்ன் வான் ரூம்பியை (இடது) அந்த நாட்டு அதிபர் ஜ ஹுந் தாவோ பில்ஜிஸ் ஜனாதிபதி மாளிகையில் வரவேற்கிறார்.

# மும்பை தாக்குதலில் ஈடுபட்டவர்கள் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகளே

## பாகிஸ்தானிடம் அமெரிக்கா தெரிவிப்பு

வாஷிங்டன், மே 18

மும்பையில் தாக்குதல் நடத்தியது லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள்தான். இதனை மறுத்துக் கூற முடியாதளவுக்கு ஆதாரங்கள் உள்ளன என்று பாகிஸ்தானிடம் அமெரிக்கா கூறியுள்ளது.

இதனைக் கடந்த டிசெம்பர் 2008ஆம் ஆண்டில் அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோர்ஜ் புஷ்ஷின் நிர்வாகத்திலிருந்த உயரதிகாரிகள் பாகிஸ்தானிடம் கூறியுள்ளனர்.

இந்தத் தகவலை அமெரிக்காவிலிருந்து வெளியாகும் 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ளது.

மும்பைத் தாக்குதல் தொடர்பாகப் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கடிதம் எழுதியுள்ளது. அதில் மும்பையில் நடைபெற்ற தாக்குதலுக்கு லஷ்கர் தீவிரவாதிகள்தான் காரணம் என்பது எங்களுக்குத் தெரியவந்துள்ளது.

லஷ்கர் அமைப்புக்குப் பாகிஸ்தானின் இராணுவ உளவு நிறுவனம் தொடர்ந்து ஆதரவும், உதவியும் அளித்து வருகிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிலிருந்து இயங்கி வரும் லஷ்கர் தீவிரவாதிகள் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26இல் மும்பையில் புகுந்து ரயில் நிலையம், நட்சத்திர ஹோட்டல்கள் என முக்கிய இடங்களில் கண்மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டும், வெடிகுண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர்.

இதில் 166 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு லஷ்கர்-இ-தொய்பா இயக்கம்தான் காரணம் என்பதற்கு இந்தியா பல ஆதாரங்களை அளித்தும், தங்கள் நாட்டிலுள்ள அந்தத் தீவிரவாத இயக்கத்தினர் மீது பாகிஸ்தான் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

மும்பைத் தாக்குதலுக்கு லஷ்கர்தான் காரணமென அப்போதே பாகிஸ்தானிடம் அமெரிக்கா கூறியுள்ளமை தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானில் பின்லேடன் கொல்லப்பட்ட பின்னர் அமெரிக்கா - பாகிஸ்தான் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

எனவே, பாகிஸ்தானுக்கெதிராக மற்ற நாடுகளை அணிதிரட்டும் முயற்சியிலும் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

மும்பைத் தாக்குதல் தொடர்பாக 3 ஆண்டுகளுக்கு முன் எழுதிய கடித விவரம் அமெரிக்காவில் இப்போது வெளியிடப்பட்டுள்ளது.

## லண்டனில் இந்திய மாணவர் மீது தாக்குதல்

லண்டன், மே 18

லண்டனில் டெர்பி பல்கலைகழகத்தில் கல்வி பயிலும் இந்தியாவைச் சேர்ந்த மாணவர் சவுரப் (வயது 24) லண்டனிலிருந்து டெர்பிக்கு ரயிலில் பயணம் செய்த போது அடையாளம் தெரியாத 6 பேர் அவரைத் தாக்கி உள்ளனர்.

இச்சம்பவத்தில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அங்குள்ள தகவல் தெரிவிக்கிறது. இது குறித்து சவுரப் கூறுகையில், ''என்னைத் தாக்கியவர்கள் 6 பேர். அனைவரும் முகத்தை மூடியும் நன்கு குடித்து இருந்தனர்'' என்றார்.

இது குறித்து போக்குவரத்து பொலிஸார் கூறுகையில், "கைதான மூவரில் 26, 32 மற்றும் 27 வயதுடைவர்கள் தான். இவர்கள் பெல்பெர் நகரை சேர்ந்தவர்கள்'' என தெரிவித்தார்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**அல்போன்ஸ் விகோரியா தியாகராஜா**
(செல்வமலர்)

தோற்றம்
30.06.1926

மறைவு
18.04.2011

நிஜமாய் எம்முடன் இருந்த நீங்கள்
நிழலாய் எம்மைப் பிரிந்து சென்று
நாள்கள் மூபத்து நகர்ந்திடினும்
நாழிகை தவறாமல் எம் கண்முன்
தோன்றுதே உங்கள் அன்பு முகம்
தேடுதே உங்கள் அரவணைப்பை

கடந்த (18.04.2011) அன்று இறைபதம் எய்திய எம் அன்புத் தாயின் பிரிவால் துவண்டிருந்த எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் நல்கி எமக்கு நேரிலும் தொலைபேசி வாயிலாகவும், அனுதாபங்களும், ஆறுதலும் பகர்ந்தவர்களுக்கும், மலர்வளையம் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிச் சடங்கில் பலி நிறைவேற்றிய அருட்தந்தைக்கும், ஏனைய அருட்தந்தையர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளை நவில்கின்றோம்.

36/1, சுருவில் வீதி,
ஊர்காவற்றுறை.
(22,50,49)
- குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு உண்டு

தெல்லிப்பழை வீதியில் உள்ள சிறுவிளானில் மெயின்றோட் அருகில் 34 பரப்புக் காணி வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: மத்தேசு அருளப்பு
பெரியவிளான், ஆத்தியோலை. T.P.No: 0779459186

## மணமகள் தேவை

1. 78 இல் பிறந்த RC வேதமுடைய, சங்கீத ஆசிரியருக்குப் படித்த அழகான மணமகள் தேவை.
2. 80 இல் பிறந்த RC வேதமுடைய B.B.A. முடித்து அரச நிறுவனத்தில் வேலை செய்யும் மணமகனுக்கு அரச வேலை செய்யும் மணமகள் தேவை.
3. 79 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 58½ பாவமுடைய B.Com, Acc. Spl., P.G Dip. in Ed. M.Ed. படிப்பவர் அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.

தொடர்பு: T.P. 0776070862
கமலக்கண்ணன் திருமண சேவை
இல.171/7, மனோன்மணி அம்மன் வீதி, நல்லூர்.

## கிருஷ்ணா பாம்

ஒரு நாள் பைரகா பாம் புறொயிலர் குஞ்சு வெள்ளிக்கிழமைகளிலும் ஒரு நாள் சிவப்பு (NEL FRAM) நெல்பாம் பேட்டுக் குஞ்சு சனிக்கிழமைகளிலும் சகல விதமான மாஸ், மருந்துகளும் கீழ்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

1. S.கிருஷ்ணகுமார், மானிப்பாய் - 0772338084
2. ஐங்கரன் களஞ்சியம், மத்திய சந்தை, மானிப்பாய் - 0212255544
3. நகுலன் மாஸ்கடை, தும்பளை - 0774727332
4. மனியம் ரேடஸ், No.16, சந்தை தெற்கு வீதி, சுன்னாகம் - 0779352658
5. R.குழந்தைவடிவேல், அரசடி, தொண்டமானாறு - 0771133216
6. ஸ்டான்லி பாம் - 0776144030
7. ரஞ்சிதன், மாலுசந்தி - 0776280153
8. திருமகள் கொமினிகேசன், (யாழ் இந்துக் கல்லூரி அருகில்) - 0754985692
9. [illegible] (கொமர்சல் வங்கி முன்பாக, நெல்லியடி) - 0771271164



## ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 750 திகதி 16-05-2011

வெற்றி எண்கள்
04 12 31 52 Q (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 11,434,870/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 11,434,870/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 09 | 50,000/= | 450,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 306 | 1,000/= | 306,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 577 | 1,000/= | 577,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14376 | 60/= | 862,560/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7566 | 40/= | 302,640/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 189425 | 20/= | 3,788,500/= |
| ஆங்கில எழுத்து | 27442 | 20/= | 548,840/= |
| | | மொத்தம் ரூ. 7,235,540/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அநுராதபுரம் | 600019035-6-46 |
| நுவரேலியா | 600001445-7-47 |
| இரத்தினபுரி | 600016653-3-03 |
| அம்பாறை | 600010719-4-04 |
| வவுனியா | 600005492-6-26 |
| கொழும்பு | 600009989-9-19 |
| கம்பஹா | 600000605-3-13 |
| பதுளை | 600006296-6-46 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,635,540/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 11,805,170/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 மே 19 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7

Enriching Your Life
DEVELOPMENT LOTTERY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தநிறுத்தத்துக்கு லிபிய அரசு அழைப்பு; ஜனநாயக பேச்சுக்கும் விருப்பம்

திரிப்போலி,மே 18

கடாபி மற்றும் அவரது மகன்களைக் கைதுசெய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தயாராகி விட்ட நிலையில், லிபிய அரசு திடீரென உடனடிப் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

லிபியாவில் அதன் தலைவர் கடாபிக்கு எதிரான மக்கள் போராட்டம், நான்காம் மாத மாகத் தொடர்கிறது. கடாபித் தரப்பு ராணுவத்தின் போர்க் குற்றங்கள் பற்றிய ஆதாரங்கள் ஏற்கனவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. இதைத்தொடர்ந்து, கடாபி மற்றும் அவரது மகன்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் ஐ.சி.சி., இறங்கியுள்ளது. இதுகுறித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை பேட்டியளித்த ஐ.சி.சி.,யின் சட்டத்தரணி,'' கடாபி மற்றும் அவரது மகன்களைக் கைது செய்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் கிட்டத்தட்ட முடிந்து விட்டன'' என்றார்.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை, ஐ.நா.,வின் சிறப்புத் தூதர் அப்துல் இலா அல் காதிப் லிபியாவுக்குச் சென்று, பிரதமர் பாக்தாதி மஹ்மூதியைச் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்புக்குப் பின் பேட்டியளித்த மஹ்மூதி, ''லிபிய அரசு உடனடிப்போர் நிறுத்தத்தை விரும்புகிறது. அதோடு, ''நேட்டோவும் தனது தாக்குதல்களை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஜனநாயகப் பேச்சுக்கள் மூலம், லிபிய மக்கள் தங்கள் உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான உரிமைகளை உடையவர்கள்' என்று தெரிவித்தார்.

## மரியாதை...



பிரான்ஸ் தலைநகர் பரிசில் உள்ள பொலிஸாரின் தலைமை அலுவலகத்தில் நடந்த வீர மரணம் அடைந்த பாதுகாப்புப் படையினருக்கு இரங்கல் தெரிவிக்கும் நிகழ்சியில் கலந்து கொள்ள வந்த அதிபர் நிக்கொலஸ் சர்கோஷி இராணுவ மரியாதையுடன் வரவேற்கப்படுகிறார்.

# நாடாளுமன்றில் கதவடைத்து விவாதம் சங்கடத்தில் சிக்கினார் தளபதி கயானி

இஸ்லாமாபாத்,மே 18

பாகிஸ்தானில் கடந்த வார இறுதியில் நடந்த நாடாளுமன்றக் கூட்டம் , எதிர்பார்த்ததைவிடப் பல மணிநேரங்கள் நீடித்ததால், எம்.பி.,க்கள் உணவுக்கு மிகவும் சிரமப்பட்டனர். ராணுவத் தளபதி பர்வேஸ் கயானியும் இதில் சிக்கி அவஸ்தைக்குள்ளானார்.

பாகிஸ்தானில், 13ஆம் திகதி, ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டது குறித்து, நாடாளுமன்றில் விவாதம் நடந்தது. இந்த விவாதம், அன்று நள்ளிரவு 2 மணிவரை நீடித்தது. எம்.பி.,க் கள் விவாதத்தில் இருந்து தப்பியோடிவிடாத அளவுக்கு நாடாளுமன்றின் கதவுகள் மூடப்பட்டிருந்தன. கூட்டத்தொடர் இவ் வளவு நேரம் ஆகும் என்று யாரும் எதிர்பார்க்காததால், நாடாளுமன்ற, அலுவலர்கள் மூலம் உணவுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

இந்தநிலையில், ராணுவத் தளபதி அஷ்பாக் பர்வேஸ் கயானி, அடிக்கடி வெளியில் எழுந்து சென்று தான் கொண்டு வந்திருந்த சிகரெட்டுகளை ஊதித் தள்ளி, பாக்கெட்டுகளை முடித்தார். , வளாகத்தில் இருந்த உணவகத்திலும் சிறிய அளவில் மட்டுமே உணவு இருந்ததால், அதுவும் முடிவடைந்து விட்டது.

இதனால் நாடாளுமன்ற ஊடகத்துறை தலைவர் அஞ்சும் முகல் என்பவரிடம் சொல்லி, எம்.பி.,க்கள் அனைவருக்கும் பஸ்கட்டுகளாவது வாங்கிக் கொடுக்கும்படி கயானி கேட்டுக்கொண்டார். அதன் பின் வந்த பிஸ்கட்டுகளை சாப்பிட்டு அவரும் சிறிது பசியாறினார்.

# புதிதாக உருவாகிய 'லண்டன் போய்ஸ்' பயங்கரவாதப் பிரிவு

பிரிட்டனில் ''லண்டன் போய்ஸ்'' என்ற பெயரில் ஒரு பயங்கரவாதப் பிரிவு செயற்படுகின்றது. கடந்த சனிக்கிழமைதான் இது குறித்த தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

பின்லேடன் கொல்லப்பட்டமைக்கு இந்தக் குழு பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று அஞ்சப்படுகின்றது. இந்த குழுவில் உள்ள நான்கு பேர்களும் சோமாலியாவின் மொகதிஸுவில் ஒரு முகாமில் சிரேஷ்ட அல்குவைதா வெடி குண்டு நிபுணர் ஒருவரால் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 2007இல் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஆனால் இவர்கள் அப்பாவிகள் எனக் கருதி பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சும் லண்டன் மெட்ரோபொலிடன் பொலிஸாரும் அங்கிருந்து விசாரித்த பின் குற்றங்கள் எதுவும் இல்லையென்று இவர்களை தலா 50 அயிரம் ரூபா செலவில் விடுவித்தனர்.

ஆனால் விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள தகவல்களின் பிறகே இவர்கள் பற்றிய புதிய விவரங்கள் வெளியாகியுள்ளன. இது பற்றி வெளியுறவு அமைச்சு தகவல்கள் எதையும் தெரிவிக்கவில்லை.

# பிணை மனு நிராகரிப்பு

நியூயோர்க்,மே 18

சர்வதேச நிதியமைப்பின் (ஐ.எம்.எப்) தலைவர் டொமி ஸ்ட்ராஸ்கான் (வயது - 62) மீதான பாலியல் குற்றச்சாட்டில் அவருக்கு நியூயோர்க் நீதிமன்றம் பிணை வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளதுடன். விசாரணை வரும் 20 ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்டது.

அமெரிக்காவின் மன்ஹாட்டான் நகரில் உள்ள நியூயோர்க் டைம் சதுக்கத்தில் உள்ள சோபடல் எனும் ஹோட்டலில் பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த ஐ.எம்.எப்.அமைப்பின் தலைவர் ஸ்ட்ராஸ்கான் தங்கியிருந்த போது அங்கு பணியாற்றிய 32 வயது இளம் பெண் ஒருவரை இவர் பாலியல் வல்லுறவு புரிந்ததாக புகார் எழுந் தது. இது தொடர்பாக நியூ யோர்க் பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டார். இவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் நேற்று விசாரணைக்காக கோர்டில் ஆஜரான டொமி ஸ்ட்ராஸ்கான் தனக்கு பிணை வழங்க கோரி மனு செய்திருந்தார். ஸ்ட்ராஸ் கான் சாபல் சட்டத்தரணி பெஞ்சமின் பரோபான் கூறுகையில், ஸ்ட்ராஸ்கானின் மகள் தந்தைகாக 1 பில்லியன் டாலர் சொந்த ஜாமின் அளிப்பதாக கூறியுள்ளதாக நீதிபதியிடம் தெரி வித்தார். இதற்கு பாதிக்கப்பட்ட பெண்ணின் சட்டத்தரணி எதிர்ப்பு தெரிவித்தார். எனினும் வழக்கை விசாரித்த நீதிபதி ஸ்ட்ரான் கான் மீதான ஜாமின் மனுவை தள்ளுபடி செய்து வழக்கினை வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# சவுதி தூதரக அதிகாரி பாகிஸ்தானில் சுட்டுக்கொலை

## தலிபான் பொறுப்பேற்பு

இஸ்லாமாபாத்,மே 18

பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்று, அடையாளம் தெரியாத நான்கு நபர்கள், சவுதி அரேபிய தூதரகத்தின் வெளிப்புறத்தில் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், அத்தூதரக அதிகாரி ஒருவர் பலியான சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்தச் சம்பவத்துக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டதற்கு பழிக்குப் பழி வாங்குவதற்காக, பாகிஸ்தான், அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப்படும் என்று, தலிபான்கள் அறிவித்திருந்தனர். அதன்படி, முதலில், பாக்., ராணுவ அகடமியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 80 பேர் பலியாகினர். தொடர்ந்து, கராச்சியில் உள்ள சவுதி அரேபிய தூதரக அலுவலகத்தின் மீது வெடிகுண்டுகள் வீசப்பட்டன. இதில் யாரும் பலியாகவில்லை.இந்நிலையில், நேற்றுமுன்தினம் சவுதி அரேபிய தூதரக அதிகாரி ஒருவர் தனது காரில் அலுவலகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிள்களில் வந்த அடையாளம் தெரியாத நான்கு பேர், அவரது காரை நோக்கிச் சுட்டனர். அதில் ஒரு குண்டு அதிகாரியின் தலையில் பாய்ந்து, அவரது உயிரைக் குடித்தது. இச்சம்பவத்திற்கு தலிபான்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இதுகுறித்து அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், இத்தாக்குதல் சரியாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்று கூறியுள்ளனர்.

இத்தாக்குதலுக்கு, பாகிஸ்தானுக்கான சவுதி தூதர் அப்துல் அஜிஸ் அல் காதிர் மற்றும் பாக்., உள்துறை அமைச்சர் இருவரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். பாகிஸ்தானும் சவுதியும் நீண்ட நாள் நண்பர்கள். சவுதி அமெரிக்காவின் நட்பு நாடு. ஒசாமா கொல்லப்பட்ட பின், சவுதியிடம் இருந்து அனைத்து விதமான ஆதரவுகளையும் பாக்., கோரியுள்ளது. சவுதியும் அதற்குச் சம்மதித்துள்ளது. பாக்., உடனான சவுதியின் கொள்கை இப்போது சவுதியை திருப்ப அடித் திருப்பதாக, நிபுணர்கள் கூறுகின்றனர்.

# சீன முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான் பயிற்சி வழங்கியது

## அம்பலப்படுத்தியது விக்கிலீக்ஸ்

பீஜிங்,மே 18

''எந்தச் சூழலிலும் நண்பர்களாக இருப்போம்''என்று வாக்குறுதி அளித்த சீனாவுக்கு எதிராக, அந்நாட்டு உய்குர் முஸ்லிம்களுக்கு, பாகிஸ்தான் தனது மண்ணில் பயங்கரவாதப் பயிற்சி அளித்த செய்தியை, விக்கிலீக்ஸ் ஆவணங்கள் வெளியிட்டுள்ளன.

சீனாவின் மிகப் பெரிய மேற்கு மாகாணமான, ஷிங்ஜியாங், கஜகஸ்தான், கிர்கிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகியவை, பாகிஸ்தான் நாடுகளின் எல்லையை தொட்டுக் கொண்டிருக்கும்.இம் மாகாணத்தில், முஸ்லிம்களின் பெரும்பான்மையைக் குறைக்கும் நோக்கத்தில், சீன அரசு ''ஹான்'' இனத்துச் சீனர்களை அதிகளவில் ஷிங்ஜியாங்கில் குடியேற்றியது. இதனால்,இரு இனங்களுக்கும்இடையில் அடிக்கடி கலவரம் நடக்கும்.

இந்தநிலையில், சமீபத்தில், விக்கிலீக்ஸ் இணையத்தளம், கியூபாவில் செயல்பட்டு வரும் அமெரிக்காவின் கொடும் சிறைச்சாலையான ''குவான்டனாமோ'' பற்றிய 700க்கும் மேற்பட்ட ரகசிய ஆவணங்களை வெளியிட்டது. அதில், சீனாவுக்கு எதிராக ஷிங்ஜியாங் பகுதி பயங்கரவாதிகள், பாகிஸ்தானில் பயிற்சி பெற்றது தெரிய வந்துள்ளது.

சீனாவை அன்னிய நாடாகவே பார்க்கின்றனர். அல்-குவைதாவுடன் இணைந்து செயல்பட்டால், தங்கள் போராட்டம் இன்னும் தீவிரம் அடையும் எனக் கருதுகின்றனர். இவர்களில் அகமது யாக்கூப் என்பவர், கிழக்கு துருக்கிஸ்தான் இயக்கத்தின் முக்கியமானவர். மேலும், ஆப்கனின் தோரா போரா மலைப் பகுதியில் ஒசாமா பன்லாடனுடன் இணைந்து செயல்பட்டவர். ஷிங்ஜியாங் பகுதியில், பயங்கரவாதிகள் ஊடுருவலைத் தடுக்க, சீனா பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. கடந்தாண்டில், பாகிஸ்தானுக்கு சீனப் பிரதமர்வென்ஜி யாபோ சென்ற போது, ''நாங்கள் இருவரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் நண்பர்களாக இருப்போம்'' என்று கூறினார். பயங்கரவாதிகள் ஊடுருவலைத் தடுக்க, பாகிஸ்தானையும், சீனா நம்ப வேண்டியிருக்கிறது. ஆனால் சீன அரசுக்கு எதிராக, சீனக் குடிமக்களில் ஒரு சாராரைத் தூண்டி விடுதலும், அவர்களுக்கான பயங்கரவாதப் பயிற்சிகள் கொடுக்கப்படுதலும் அதே பாகிஸ்தானில்தான், நடக்கிறது என்பதுதான் தற்போது, சீனாவுக்கு மிகப் பெரிய அதிர்ச்சியாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேபிள் ரி.வி. உரிமங்களை தமிழக அரசுடைமையாக்க வேண்டும்

## இந்திய கம்யூனிஸ்ட் கோரிக்கை

சென்னை, மே 18

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்கும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கேபிள் ரி.வியை உடனடியாக அரசுடைமையாக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவு குறித்து அக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் பாண்டியன் கூறியவை வருமாறு:

சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக மக்கள் தெளிவான, திட்டவட்டமான தீர்ப்பை அளித்துள்ளனர். கருணாநிதியின் குடும்ப உறுப்பினர்கள் தாங்கள் நடத்தி வந்த பல்வேறு தொழில்களுக்காக அரச அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினர். தொடர்ந்து நிலவிய மின் பற்றாக்குறை போன்ற மக்கள் பிரச்சினைகளுக்கு தி.மு.க. அரசினால் தீர்வு காணப்படவில்லை.

தி.மு.க. அரசு மீதான எதிர்ப்புணர்வு மற்றும் அ.தி.மு.க. அணி மீதான மக்களின் நம்பிக்கை ஆகிய இரண்டும் சேர்ந்ததால், அ.தி.மு.க. அணிக்கு இந்தப் பெரும் வெற்றி கிடைத்துள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் ஜனநாயகத்தை மீட்டெடுப்பதற்கான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது எனக் கருதுகிறோம்.

63 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி வெறும் 5 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளதன் மூலம், மத்தியில் அவர்கள் ஆட்சியின் மீது மக்களுக்கு உள்ள வெறுப்புணர்வைப் புரிந்து கொள்ளலாம்.

தமிழகத்தில் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்கும் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு மின்வெட்டு, சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு போன்ற பல மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இந்நேரத்தில், கேபிள் ரி.வியை அரசுடைமையாக்கும் நடவடிக்கையையும் அ.தி.மு.க. அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் - என்றார். (வ)

# அ.தி.மு.க. கூட்டணியின் வெற்றிக்காக விரலைக் காணிக்கையாக்கிய தொண்டர்

சேலம், மே 18

சேலம் மாவட்டத்தில் 11 தொகுதிகளிலும் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றதற்காக தொண்டர் ஒருவர் தனது விரலை வெட்டி காணிக்கையாக்கியுள்ளார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களை அதி.மு.க.கூட்டணிகைப்பற்றியது.

சேலம், நாமக்கல் ஈரோடு, தர்மபுரி நான்கு மாவட்டங்களில் அனைத்து தொகுதிகளிலும் அ.தி.மு.க. கூட்டணியே வெற்றி பெற்றது. தி.மு.கவுக்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை. சேலம், அஸ்தம்பட்டி அய்யந்திரு மாளிகை பகுதியைச் சேர்ந்த சுரேஷ்குமார் என்பவர் மாவட்டத்தில், அ.தி.மு.க. அனைத்து தொகுதியிலும் வெற்றி பெறும் என, நண்பர்களிடம் பந்தயம் கட்டினார்.

அனைத்து தொகுதிகளிலும், அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றால் தனது விரலை வெட்டிக்கொள்வேன் எனவும் அவர் கூறியிருந்தார்.

சேலம் மாவட்டத்தில் அ.தி.மு.க. வெற்றி பெற்றதையடுத்து அங்குள்ள மாரியம்மன் கோவிலுக்குச் சென்று தனது விரலை வெட்டினார். அதை கோவில் உண்டியலில் போட முயன்றார். இதைக் கண்ட அப்பகுதி மக்கள், அவரை உடனடியாக தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றனர். அங்கு அவருக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்கப்பட்டது. விரல் எந்த அளவு பாதித்திருக்கிறது என்ற தகவல் தெரியவில்லை. இச் சம்பவம், சேலம், மாவட்டம் அஸ்தம்பட்டி பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

# தி.மு.க. அமைச்சர்களை வீழ்த்திய ஆறு பேருக்கு அமைச்சர் பதவி

சென்னை, மே 18

அ.தி.மு.க. அமைச்சர் சபையில் 33 பேருக்கு அமைச்சர் பதவி கிடைத்துள்ளது. தி.மு.க. அமைச்சர்களை வீழ்த்திய 6 பேர் அமைச்சர்களாகி உள்ளனர்.

கன்னியாகுமரித் தொகுதியில் தி.மு.க. அமைச்சர் சுரேஷ்ராஜனை வென்ற கே.டி.பச்சைமால் வனத்துறை அமைச்சராகி உள்ளார்.

தூத்துக்குடியில் தி.மு.க. அமைச்சர் கீதாஜீவனைத் தோற்கடித்த சி.த.செல்லப்பாண்டியன் தொழிலாளர் நல அமைச்சராகி உள்ளார்.

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளத்தில் தி.மு.க. மந்திரி வெள்ளக்கோவில் சாமிநாதனை வீழ்த்திய சண்முகவேலு தொழில் துறை அமைச்சராகி உள்ளார்.

விழுப்புரத்தில் தி.மு.க. அமைச்சர் பொன்முடியை வென்ற சி.வி.சண்முகம் கல்வித்துறை அமைச்சராகி உள்ளார். திருச்சி மேற்குத் தொகுதியில் தி.மு.க. அமைச்சர் கே.என்.நேருவை வீழ்த்திய மரியம்பிச்சை சுற்றுச் சூழல் அமைச்சராகி உள்ளார்.

இது தவிர அம்பாசமுத்திரம் தொகுதியில் சபாநாயகர் ஆவுடையப்பனை வீழ்த்திய இசக்கி சுப்பையா சட்ட அமைச்சராகி உள்ளார். (வ)

# ரஜனியைப் பார்க்க அனுமதி கோரும் ரசிகர்கள்

சென்னை, மே.18

நடிகர் ரஜினிகாந்த் குறித்த வதந்திகளால் சோர்வடைந்துள்ள அவரது ரசிகர்கள் அவரைப் பார்க்க அனுமதி கோரி அவர் சிகிச்சை பெற்றுவரும் ராமச்சந்திரா மருத்துவமனையின் பிரதான கட்டடத்தை நேற்று முன்தினம் மாலை முற்றுகையிட்டனர்.

ரஜினிகாந்த் கடந்த ஏப்ரல் மாதம் முதல்முறையாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோதே துயரம் அடைந்த ரசிகர்கள், தற்போது 3ஆவது முறையாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

''நாம் மிகுந்த சோகத்தில் இருக்கிறோம். எனவே குறைந்தபட்சம் அவர் மருத்துவமனை அறையில் இருந்து வெளியே வந்து எங்களை நோக்கி கைகளை அசைத்தாலே போதும். அல்லது அவர் நன்றாக இருப்பது போன்ற வீடியோ காட்சிகளையாவது வெளியிட வேண்டும்'' என வில்லி வாக்கத்தைச் சேர்ந்த ரசிகர் ஒருவர் கூறினார்.

இதுதொடர்பாக ரசிகர்களிடம் பேசிய நடிகர் தனுஷ், ரஜினி நலமாக உள்ளார் என்றார்.

மேலும் அவருக்குக் கவலைப்படும்படியாக எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (வ)


# மாந்தை கிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம்
# 2011 ஆம் ஆண்டுக்கான குத்தகை கேள்வி அறிவித்தல்

கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.06.2011 தொடக்கம் 31.05.2012 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமையக் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம்: 16.05.2011 - 29.05.2011
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி: 30.05.2011 பி.ப. 2 மணி
கேள்வி திறக்கப்படும் திகதி: 30.05.2011 பி.ப. 3 மணி
கேள்வி திறக்கும் இடம்: மாந்தை கிழக்கு பிரதேச சபை

*கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், மாந்தை கிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் உரிய காலத்துக்கு முன் அனுப்புதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.*

## நிபந்தனைகள்

| இல. | குத்தகை வகை | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரிநீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணம் (வரி நீங்கலாக) | மாதாந்த வாடகை (வரிநீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | பொன்னகர் மீன் சந்தை | 50000.00 | 1000.00 | 500.00 | - |
| 02 | பொன்னகர் மரக்கறி சந்தை | 30000.00 | 1000.00 | 500.00 | - |
| 03 | பொன்னகர் இறைச்சிக்கடை | 40000.00 | 1000.00 | 500.00 | 50.00 |
| 04 | பொன்னகர் கடை ஒன்றிற்கு (கடைகளின் மொத்தஎண்ணிக்கை06) | 25000.00 | 1000.00 | 500.00 | 500.00 |

1. மாந்தை கிழக்கு பிரதேச எல்லைக்குட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
2. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
3. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
4. இறைச்சிக்காக ஆடு, மாடு கொல்லப்படும்முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்துகொள்ள வேண்டும்.

திரு. அ. தனிநாயகம்,
தவிசாளர்,
பிரதேசசபை மாந்தை கிழக்கு.

(சி/036)



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வன்னித்தம்பி சின்னத்துரை
(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

அன்னை மடியில்
02.01.1937

ஆண்டவன் அடியில்
08.06.2009

அன்புடன் அரவணைத்து எமது இனிய வாழ்வுக்காய் வழியமைத்து
இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் இரண்டு சென்றாலும் தங்கள் பாச நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் அணையாத தீபமாய் ஒளிரும்
தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

5, சேர் பொன்.இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (4309) குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்



## நடராஜா ஜெயசிறி

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் Drancy, France ஐ வதிவிடமாகவும் கொண்ட நடராஜா ஜெயசிறி 10.05.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா பத்தர்- மீனாம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான ரட்ணசபாபதி(சின்னத்தம்பி)- நாகரட்ணம் தம்பதியரின் அன்பு மருமகனும் சுசிலாவின் அன்புக் கணவரும், லாவண்யன், வசுதாராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சங்கீதா, டேவிட் ஆகியோரின் மாமனாரும், பிரதீஷின் பேரனும், காலஞ்சென்ற ராஜசூரி (இலங்கை) மற்றும் ராஜிவி( France), ரஞ்சிற் (France), கோபி (France) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி (France) மற்றும் தனலஷ்மி (இலங்கை), புனிதா(France), ரூபா (France), மகேஸ்வரன் (France), இலங்கேஸ்வரன்(இலங்கை), சியாமளா, (Canada), இலங்கேஸ்வரி(London) ஆகியோரின் மைத்துனரும் திவ்யரூபனின் மாமனும், விஷ்ணுகாந்தனின் சித்தப்பாவும் கம்ஷலா, தர்ஷிகா ஆகியோரின் மாமனும், றமணேஸ், ஜெயகணேஸ், மிதுரா, அனுஷன், மாதேஸ், ஜெனித்தா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2011) புதன்கிழமை France இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கருவேலடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
இலங்கேஸ்வரன் (மைத்துனர்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷவைக் கைது செய்யக் கோரி சட்டசபையில் தீர்மானம் இயற்ற வேண்டும்

## சீமான் கருத்து



சென்னை,மே.18

அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொன்னதை போல இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவைக் கைது செய்து சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்ற வேண்டும் என கோரிக்கை விடுக்கப்போவதாக நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

வேலூரில் செய்தியாளர்கள் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்,

கடந்த 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி ஈழத்தில் மிகபெரிய அழிவை ஏற்படுத்தினர் இலங்கை சிங்கள இராணுவத்தினர். இந்த அழிவில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். லட்சக்கணக்கான மக்கள் கை, கால்களை இழந்து முடமாக வாழ்கிறார்கள். ஈழப் போராட்டம் முடிவுக்கு வந்த நாளாகக் கருதி தமிழ் உணர்வாளர்கள் எழுச்சி நாளாகக் கொண்டாடி வருகின்றனர்.

பேரழிவின் 2 ஆண்டு நிறைவு நாளையொட்டி மே 18 ஆம் திகதியான இன்று வேலூரில் மாபெரும் பொதுக்கூட்டம், பேரணி நடத்த நாம் தமிழர் இயக்கம் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார். (வ)

# சட்டசபை இடமாற்றத்துக்கு வைகோ எதிர்ப்பு

சென்னை,மே.18

தமிழக சட்டசபையை மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு மாற்றுவதற்கு ம.தி.மு.க., பொதுச் செயலாளர் வைகோ எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க.வின் அரசியல் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் உள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

தமிழக அரசின் தலைமைச் செயலகமும், சட்டமன்றமும் இயங்குவதற்கு புதிதாகக் கட்டப்பட்ட கட்டடங்களும் வளாகங்களும், அள்ளித் தெளித்த அவசர கோலத்தில் செய்யப்பட்டமை, தொடக்கத்தில் கூறப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட மூன்று மடங்கு அதிகமாகச் செலவீட்டுத் தொகை காட்டப்பட்டமை போன்றன மிகத் தவறானவை.

எனினும், மக்கள் வரிப் பணத்தில் கட்டப்பட்ட, மக்களுக்குச் சொந்தமான கட்டடங்களை நிராகரித்து விட்டு, ஜார்ஜ் கோட்டை வளாகத்திலேயே சட்டமன்றமும், தலைமைச் செயலகமும் இயங்குவதற்கு புதிய அரசு முடிவு எடுக்குமானால், முன்னைய அரசால் கட்டப்பட்ட மாவட்டச் செயலக அலுவலகங்கள், காவல்துறை கண் காணிப்பாளர் அலுவலகங்கள், மேம்பாலங்கள், நீதிமன்றக் கட்டடங்கள் இவற்றையெல்லாம், புதிய அரசு பயன்படுத்தாது விட்டு விடுமா? என்ற கேள்வி எழுகிறது.

எனவே, சட்டமன்றத்தை மாற்றுவது ஏற்புடையது அல்ல; மக்கள் வரிப்பணத்தில் கட்டப்பட்ட புதிய கட்டடத்திலேயே சட்டமன்றம் தொடர்ந்து இயங்க வேண்டும் என்று இக் கூட்டம் வலியுறுத்துகிறது என்று மதி.மு.க. தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (வ)

## வெற்றிக்குப் பாராட்டு...



மேற்கு வங்க அமைச்சரவையில் காங்கிரஸ் இடம் பெறுவது தொடர்பாக, டில்லி சென்ற திரிணமுல் காங்., தலைவர் மம்தா, காங்., தலைவர் சோனியாவைச் சந்தித்துப் பேசினார். மம்தாவை வரவேற்ற சோனியா, மம்தாவின் தோளில் தட்டிக்கொடுத்து அவரது வெற்றியைப் பாராட்டினார்.

# உத்தரப் பிரதேச விவசாயிகளின் விவகாரம்; பிரதமர் மன்மோகனுடன் ராகுல் காந்தி சந்திப்பு

உத்தரப்பிரதேசத் தில் தேசிய நெடுஞ் சாலைக்காக அரசு கையகப்படுத்திய நிலத்துக்கு அதி கரித்த இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்ற விவசாயிகளின் பிரச்சினை தொடர்பாக ராகுல் காந்தி நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசியுள்ளார்.

ராகுலுடன் அவருடன் விவசாயிகளின் பிரதிநிதிகள் 8 பேர் கொண்ட குழுவினரும் சென்றிருந்தனர். சந்திப்பின் போது பிரதமருடன் அவர் பேசுகையில்:

போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது உத்தரப்பிரதேச மாநில பொலிஸார் அடக்குமுறையில் ஈடுபட்டதாக ராகுல் காந்தி முறைப்பாடு கூறியதோடு, விவசாயிகள் கொல்லப்பட்டமை பற்றியும் விளக்கிக் கூறினார்.

உத்தரப் பிரதேசத்தில் தேசிய நெடுஞ்சாலைக்காக அரசு கையகப்படுத்திய நிலத்துக்கு அதிகரித்த இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று கோரி சமீபத்தில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



டில்லியை அடுத்த நொய்டா அருகே நடந்த இந்தப் போராட்டத்தின் போது விவசாயிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதால் கலவரம் வெடித்தது. அப்போது பொலிஸார் ஒருவர் அடித்துக்கொல் லப்பட்டார். விவசாயிகள் சிலரும் பலியானார்கள்.

இதைத் தொடர்ந்து, காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி கலவரம் நடந்த கிராமத்துக்குச் சென்று தனது ஆதரவாளர்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டார். இதனால் கைது செய்யப்பட்ட அவர் பின்னர் விடுதலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே கலவரத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் ராகுல் சந்திப்பின்போது பிரதமரிடம் காண்பித்தார். இந்த சந்திப்பு 30 நிமிடம் நடந்தது. அதன் பிறகு வெளியே வந்த ராகுல் காந்தி செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கையில்:

பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமது கருத்துகளை பிரதமரிடம் நேரில் தெரிவிப்பதற்காகவே இந்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், அவர்கள் கூறிய விவரங்களை பிரதமர் உன்னிப்பாகக் கேட்டதாகவும் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேசத்தில் விவசாயிகளுக்கு அதிகமான கொடுமை நடந்திருப்பதாகவும், கிராமங்களில் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டுள்ளன என்றும், பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு இருப்பதாகவும், வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டுஉள்ளன என்றும் ராகுல் கூறினார்.

# வடிவேலுவின் பண்ணை வீட்டில் இனந்தெரியாத கும்பல் தாக்குதல்



சென்னை,மே.18

தாம்பரம் அருகேயுள்ள படப்பை புஷ்பகிரி பகுதியில் அமைந்துள்ள வடிவேலுவின் பண்ணை வீட்டில் இனந்தெரியாத கும்பல் நுழைந்து ஜன்னல்கள் உடைத்துத் தாக்குதல் நடத்தியுள்ளது.

மாமரத் தோப்புகள் மத்தியில் இந்தவீடு கட்டப்பட்டுள்ளது. இந்தப் பண்ணை வீட்டில் வேலு என்பவர் காவலாளியாக வேலை பார்க்கிறார். இவர் தனது குடும்பத்தினருடன் தோப்பில் தனி வீட்டில் வசிக்கிறார்.

நேற்று முன்தினம் மாலை இந்த பண்ணை வீட்டுக்கு 30 இற்கும் மேற்பட்ட இனந்தெரியாத நபர்கள் வந்தனர். வீட்டைச் சுறையாடினார்கள். அங்கிருந்த பொருள்களை கீழே தள்ளி உடைத்தனர். வீட்டில் 6 கண்ணாடி ஜன்னல்களையும் உடைத்து நொறுக்கினார்கள். காவலாளி வேலுவுக்கும் மிரட்டல் விடுத்தனர். அவரிடம் வடிவேலுவின் தொலைபேசி இலக்கத்தைக் கொடுக்குமாறு கேட்ட போது அதற்கு அவர் இலக்கம் தெரியாது என்று கூறியுள்ளார்.

உடனே இனந்தெரியாத கும்பல் வேலுவின் தொலைபேசியை வாங்கி அதில் வடிவேலுவின் தொலைபேசி இலக்கம் இருக்கிறதா என்று தேடிப் பார்த்தனர். அதில் வடிவேலுவின் எண் இல்லாததால் மீண்டும் அதை வேலுவிடம் கொடுத்தனர். எதிர்வரும் சனிக் கிழமைக்குள் இந்த இடத்திலிருந்து வெளியேறி விடவேண்டும். இல்லாவிட்டால் 'பைக்கோ' இயந்திரம் கொண்டு வந்து வீட்டை இடிப்போம் என எச்சரிக்கை விடுத்தனர்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டனர். இது குறித்துகாவலாளிவேலுபண்ணை மேலாளர் சங்கருக்கு தகவல் தெரிவித்தார். மேலாளர் சங்கர் மணி மங்கலம் பொலிஸில் முறைப்பாடு செய்தார். இதனையடுத்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை சட்டமன்றத் தேர்தலில் நடிகர் வடிவேலு தி.மு.க.வுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார். விஜயகாந்தை கடுமையாக தாக்கிப் பேசினார். தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணிவெற்றிபெற்றதும்சென்னை சாலி கிராமத்தில் உள்ள வடிவேலுவின் வீட்டில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# இந்தியாவை எதிரியாகக் கருதுவதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் - நவாஸ்



இஸ்லாமாபாத், மே.18

இந்தியாவை பாகிஸ்தான் மிகப்பெரும் எதிரியாகக் கருதி செயற்படுவதை பாகிஸ்தான் கண்டிப்பாக நிறுத்த வேண்டும் என அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கூறியுள்ளார்.

மேலும் இந்தியாவுடனான உறவு குறித்து மறுமதிப்பீடு செய்து முன்னேற்றத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

முன்பு கார்கில் சர்ச்சை எழுந்தபோது இந்தியாவுடன் பேச்சு நடத்தியவர் நவாஸ் ஷெரீப். இந்தியாவுடனான 1999ஆம் ஆண்டு சர்ச்சை குறித்து விசாரணை நடத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

முன்னாள் பிரதமரான நவாஸ், பிரதான எதிர்க்கட்சியான பாகிஸ்தான் முஸ்லீம் லீக்-என் கட்சியின் தலைவராக உள்ளார். அவர் தற்போது 3 நாள் பயணமாக தெற்கு சிந்தி மாகாணத்துக்குச் சென்றுள்ளார். அப்போது செய்தியாளர்களிடம் பேசுகையில்:

2006 இல் ராணுவ நடவடிக்கையில் பலுசிஸ்தான் தலைவர் நவாப் அக்பர் பக்டி கொல்லப்பட்டது குறித்தும் விசாரணை நடத்தவேண்டும்.

1999 ஆம் ஆண்டு முன்னாள் அதிபர் பர்வீஸ் முஷாரப் நடத்திய ராணுவப் புரட்சியில் நவாஸ் ஷெரீப் அரசு கவிழ்க்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டில் தான் பிரதமராக இருந்தபோது சக்திவாய்ந்த ராணுவத்தை கட்டுப்படுத்தாதது மிகப்பெரிய கவலையளிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் அபோட்டாபாத் சம்பவத்துக்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டுபிடித்து, தவறு செய்தவர்களை தண்டித்தால்தான் அதுபோன்று மற்றும் ஒரு தாக்குதலை பாகிஸ்தான் மக்கள் சகித்துக் கொள்ளமாட்டார்கள் என்று உலகத்துக்குத் தெரியவரும் எனவும் அவர் கூறினார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் இருக்கும் இடங்கள் மீது தாக்குதல் நடத்தலாகாது என்ற விதிமுறை மீறப்பட்டுள்ளது

**யுத்த சூனிய வலயங்களுக்கு குறுக்கே ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்றமைக்கு நம்பகமான தகவல்கள் உண்டு**

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 4 ஆம் உறுப்புரையின் கீழான சில ஏற்பாடுகளைத் தள்ளுபடி செய்வதாக இலங்கை 2000ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி செயலாளர் நாயகத்துக்கு அறிவித்தோடு, 2010 ஜூன் 4 ஆம் திகதி, கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல் அத்துடன் வழக்கைத்துரிதப் படுத்தல் ஆகிய உரிய செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட உறுப்புரை 9(3) இனைத் தவிர்ந்த உடன்படிக்கையின் ஏனைய ஏற்பாடுகளில் இருந்து நீங்கிக்கொள்வதாக செயலாளர் நாயகத்துக்கு இலங்கை அறிவித்தது.

187. தள்ளுபடி செய்வது சட்டப்படி செல்லுபடியாகுமா என்பது பற்றி நிலவும் நிச்சயமற்ற தன்மையைக் கருத்திற் கொண்டு குழு ஐ.சி.சி.பி.ஆர். இன் பொருத்தமான சகல ஏற்பாடுகளையும் பின்வருமாறு ஆராய்கிறது.

(66)

188. தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், நாடல்லாத பாத்திரங்கள் விதிமுறைக்கேற்ப மனித உரிமைகள் உடன்படிக்கையொன்றுக்கான தரப்பினராக முடியாதபோதிலும், நாடொன்றின் இடப்பரப்பினுள் நடைமுறையிலான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் நாடல்லாத குழுக்கள் அப்பிரதேசத்தில் மனிதர்களின் அடிப்படை மனித உரிமைகளை மதிக்கவேண்டும் என்பது இப்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வருவதொன்றாகும்.

பாதுகாப்புச் சபையை உள்ளிட்ட ஐக்கிய நாடுகளின் பல்வேறு அமைப்புக்கள் அத்தகைய பாத்திரங்கள் மனித உரிமைகள் சட்டத்தை மதிக்கவேண்டும் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளன. சர்வதேச பாத்திரங்களுக்கிடையே இந்த விடயம் பற்றிய கருத்து முரண்பாடுகள் உள்ளன என்பதைக் குழு இனங்கண்ட போதிலும், குறைந்தபட்சம், உயிர் வாழ்வதற்கான உரிமை மற்றும் பௌதிகப் பாதுகாப்பு, மக்களின் முழுமையான தன்மை அத்துடன் சித்திரவதை மற்றும் கொடூரத்தன்மை, மனிதத் தன்மையற்ற அல்லது இழிவாக நடத்துதல் மற்றும் அத்தகைய தண்டனை ஆகியவற்றிலிருந்து விடுதலை ஆகியவற்றை உள்ளிட்ட அநேகமான மனித உரிமைகளை அதன் அதிகாரத்துக்குள் இருக்கும் மக்களுக்கு உறுதிப்படுத்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் கடமைப்பட்டுள்ளது என்ற கருத்தைக் குழு கொண்டுள்ளது.

**ஆ.பொருத்தமற்ற பேர் நடவடிக்கை மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம்**

189. இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தரப்பினரும் பகிரங்கமாக வெளியிட்ட குறிக்கோள்களோ (அரசைப் பொறுத்தவரை பயங்கரவாதத்துக்கு எதிராகப் போர்தொடுத்தல் மற்றும் தமிழீழ விடுதலை புலிகளைப் பொறுத்தவரை தனி நாட்டுக்காகப் போர்புரிதல்) இருதரப்பினரும் கடைப்பிடித்த பொருத்தமற்ற தன்மையோ தரப்பினருக்கு சர்வதேச மனிதாபிமான சட்டம் ஏற்புடையதாக்குவதில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

தனது தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் பயங்கரவாதத்தில் ஈடுபடக்கூடிய கிளர்ச்சியாளர்களை உள்ளிட்ட ஆயுதம்தாங்கிய தாக்குதல்களில் இருந்து அதனைப் பாதுகாத்துக்கொள்ளவும் சர்வதேச சட்டத்தின் கீழ் நாடு ஒன்றுக்கு உரிமை உண்டு.

அந்த நோக்கங்களை அடைவதற்கு எந்த முறையையாவது பயன்படுத்துவதை அந்நோக்கங்கள் நியாயப்படுத்தாது அத்தகைய சட்டபூர்வமான தேவைகளுக்கான சகல நடவடிக்கைகளும் சர்வதேச சட்டத்தின் தேவைப்படுத்தல்களுக்கு இயைவாக இருத்தல் வேண்டும்.

190. இவ்வாறாக, சர்வதேச மனிதாபிமான சட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளைப் போன்றதோர் அச்சுறுத்தலை எதிர்நோக்கும் நாடுகளின் நியாயபூர்வமான கவலைகளை மதிக்கிறது. பல்வேறு காரணங்களுக்காக, சர்வதேச மனிதாபிமான சட்டத்துக்கு, அதுவும் சர்வதேச சட்டத்துக்கு கடந்த அந்த யுத்தம் அப்பாற்பட்டது என்று கடந்த பல வருடங்களாக இலங்கையில் சிவில் யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் விடுத்த அறிக்கைகள் பிழையானவையாகும். மேலும், ஒரு தரப்பினரின் மீறல்கள், பொதுவான நியதியின்படி மற்றத் தரப்பினர் சட்டத்தின் கீழான அதன் கடப்பாடுகளை இடை நிறுத்துவதற்கு அனுமதி அளிக்காதென்பது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் அடிப்படையான நன்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதும் வாத மூலக் கூற்றுமாகும்.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை பகுதி - 17**

(67)

**இ.சட்ட ரீதியிலான பொறுப்பு வகைகள்**

191. குற்றச்சாட்டுக்களின் சட்டபூர்வமான தன்மையை ஆராய்வதில், சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் மனித உரிமைகள் சட்டம் கடப்பாடுகளை விதிக்கும் பல்வேறு குழுக்களையும் அதன்படி குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களுக்குப் பொறுப்பு யார் என்பதையும் குழு கவனத்திற்கொள்ளவேண்டியுள்ளது.

மூன்று வகையான பொறுப்புக்களை குழு கவனத்திற்கொள்கிறது. அரசின் பொறுப்பைப் பொறுத்தவரை, குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்கள் உண்மையெனக் கண்டறியப்பட்டால், அவற்றுக்கு இலங்கை அரசு பொறுப்பா என்பதாகும். சர்வதேசச் சட்டத்தின் கீழ். இலங்கை அரசின் செயல்களுக்கு மாத்திரம் அரசின் பொறுப்பு பொருத்தமானதாகும்.

அரசின் அறிவுறுத்தல்களுக்கேற்ப அல்லது அதனால் பணிக்கப்பட்டு அல்லது கட்டுப்படுத்தப்பட்டு நாடு சாராத பாத்திரங்களின், அதாவது துணைப் படைக்குழுக்கள் அல்லது தனிப் பிரஜைகளின் நடவடிக்கைகளுக்கு அரசு பொறுப்பாகும். சர்வதேச மனிதாபிமான சட்டம் இந்த விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளை உள்ளிட்ட நாடல்லாத ஆயுதக் குழுக்கள் மீது கடப்பாடுகள் விதிக்கிறது என்பதை இனங்காணும் மனவுருவாக அமைப்பிலான பொறுப்பு உள்ளது.

**ஈ இலங்கை அரசின் குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்கள்**

192. இலங்கை அரசின் நடவடிக்கை தொடர்பாக ஐந்து வகையான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்களை அத்தியாயம் III இனங்காண்கிறது. சட்டப்படியான மீறல்கள் தொடர்பாகக் குற்றச்சாட்டின் ஒவ்வொரு வகுதி பற்றிய குழுவின் மதிப்பீட்டை இந்த அத்தியாயம் வழங்குகிறது.

**1. பரவலான ஷெல் தாக்குதல் மூலம் பொதுமக்களைக் கொலைசெய்தல்**

**(அ) ஜெனீவா உடன்படிக்கைகளின் பொதுவான உறுப்புரை**

193. பொது உறுப்புரை 3 இன் பந்தி (1) உட்பந்தி (அ) விதிப்படி, இலங்கை இராணுவம் மேற்கொண்ட கண்மூடித்தனமான ஷெல் வீச்சு காரணமாகப் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள்.

மூன்று யுத்த சூனிய வலயங்கள் மீதான தாக்குதல்களை இது உள்ளடக்குகிறது. கண்மூடித்தனமாக ஷெல் வீச்சு கொலைக்கு நிகரானதுமா என்பது தொடர்பாகப் 'பீரங்கித் தாக்குதல் போன்ற தாக்குதல் ஒன்றுக்குப் பொதுமக்கள் ஆளாக்கப்பட்டு, அதன் விளைவாகப் பொதுமக்கள் மரணித்தால் அத்தகைய தாக்குதல்களை நடத்துபவர்கள் அது மரணத்தை விளைவிக்கக்கூடும் என்பதை அறிந்திருந்தால் அத்தகைய மரணங்கள் கொலை என வகைப்படுத்தப்படலாம்' என்பதாகச் சர்வதேச சட்ட ஆய்வுத்துறை ஏற்றுக்கொள்கிறது.

**(ஆ) போராளிகள் மற்றும் பொது மக்கள் ஆகியவர்களுக்கிடையிலான வேறுபாட்டுக்கான தேவை**

194. சர்வதேச மனிதாபிமான சட்டத்தின்படி 'மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினர் சகல சந்தர்ப்பங்களிலும் பொதுமக்கள் மற்றும் போராளிகள் ஆகியவர்களை வெவ்வேறாகப் பிரித்தறிய வேண்டும். போராளிகளை நோக்கி மாத்திரமே தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என்பதோடு, பொதுமக்களை நோக்கி மேற்கொள்ளப்படலாகாது' (விதி1 ஐ.சி.ஆர்.சி. ஆய்வு)

(68)

195. பிரித்தறிவதின் அடிப்படைக் கோட்பாட்டை இலங்கை அரசு மதிக்கவில்லை என்பதை நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன. வன்னியில் மேற்கொள்ளப்பட்ட அதன் இராணுவ நடவடிக்கைகள் பூஜ்ய பொதுமக்கள் தாக்கத்தைக் கொண்டிருந்தன என அரசு கூறிய போதிலும், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் காயமடைந்தும் மரணித்தும் உள்ளார்கள் என்பதை நம்பகமான மதிப்பீடுகள் காட்டுகின்றன. யுத்த வலயத்தில் சிக்குண்டிருந்த பொதுமக்கள் எண்ணிக்கை பற்றிய மிகக் குறைவான மதிப்பீட்டையும் அது வழங்கியது.

இவற்றுடன் சேர்த்துப் பார்க்கும் போது, யுத்த வலயத்தில் இருந்த பலரை அல்லது அநேகமானவர்களை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சம்பந்தப்படுத்தி இந்த மூலக் கோட்பாட்டைக் கவனத்துக்கு எடுத்துக்கொள்ள அது தவறியுள்ளது என்பதை இவை குறிக்கின்றன.

**(இ) பொதுமக்கள் அல்லது பொதுமக்களின் இலக்குகளைத் தாக்குவது மீதான தடை**

196. பொதுமக்கள் அல்லது பொதுமக்கள் இலக்குகளைத் தாக்குவதை சர்வதேச மனிதாபிமான சட்டம் தடை செய்கிறது.

இராணுவ இலக்குகள் மற்றும் போராளிகளுக்கு எதிராக மாத்திரம் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் (விதி 7, ஐ.சி. ஆர்.சி. ஆய்வு). 'மரபு ரீதியிலான சர்வதேச சட்டத்தில், பொதுமக்களை இலக்குப் பார்ப்பது நிபந்தனையற்ற மற்றும் சந்தேகமற்ற விதத்தில்' தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் பகை நடவடிக்கைகள் காரணமாகக் காயமடைந்த நோயுற்ற மற்றும் பொதுமக்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட வலயம் ஒன்றின் மீது தரப்பினர் தாக்குதலை மேற்கொள்ளக் கூடாது (விதி 35. ஐ.சி.ஆர்.சி. ஆய்வு).

யுத்த சூனிய வலயத்தில் பொதுமக்களுக்கு அண்மித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தது தொடர்பாக ஐ.சி. ரி.வையினை உள்ளிட்ட சர்வதேச நீதிமன்றங்கள், பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்கள் மீதான தடை சனத்தொகையைப் பாதுகாக்கும் விதத்தில் அதிகபட்ச பொதுமக்களைக் கொண்டதாக விளக்கமளித்துள்ளன.

197. இலங்கையைப் பொறுத்தவரை தனியார் பொறுப்புச் சட்டத்தின் சூழ்நிலைப் பொருத்தத்தின் அடிப்படையில் இந்தத் தடையின் மனோதத்துவ அடிப்படைக் கூறைக் கவனத்துக்கெடுத்துக்கொள்வது அவசியமாகும்.

(69)

198. வேண்டுமென்றே அல்லது கண் மூடித்தனமாக, பொதுமக்களைத் தாக்குவதற்கான அத்தகைய நோக்கத்தை நிர்ணயிப்பது தொடர்பாக, 'பொதுமக்களை இலக்குப் பார்ப்பதற்கான நோக்கத்தை நிரூபிக்க முடியும் நேரடி அல்லது மறைமுகமான சாட்சியங்களைக் கொண்டு குறிப்பிட்டதொரு தாக்கமடைவோர்களைத் தாக்குவதற்கான நோக்கத்துக்கான தேவை இல்லை என்பதோடு, மாறாக பொதுமக்கள் சனத்தொகையை அத்துடன் குறிப்பிட்ட பொதுமக்களைத் தாக்குதலில் நோக்காகக் கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது' என்று ஐ.சி.ரி.வை குறிப்பிட்டுள்ளது. தாக்குதலுக்காக மேற்கொள்ளப்பட்ட முறைகள், பாதிக்கப்பட்டவர்களிலிருந்துள்ள தூரம் மற்றும் வெடியின் மூலம் அத்துடன் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் தோற்றம் ஆகியவற்றை உள்ளிட்ட பல்வேறு காரணிகளைக் கொண்ட விடயம் சார்ந்த அடிப்படையில் பொதுமக்களுக்கு எதிராகத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை ஊகித்தறியலாம்.

199. இலங்கை இராணுவம் பொதுமக்களைத் தாக்குதலுக்கான தன் இலக்காகப் பாவிக்கவில்லை என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்ற ஏதும் வாதம் தொடர்பாக, சட்டப்படியான இராணுவ இலக்கை நோக்கி அதே நேரத்தில் சட்டத்துக்குப் புறம்பாகப் பொதுமக்களையும் இலக்காகக்கொண்டிருந்தால், அதுவும்கூடதொரு தாக்குதல் சட்டவிரோதமானதாகும்.

சட்டப்படி இலக்கைத் தாக்குவதற்காக இலங்கை இராணுவத்திடம் குறிப்பாக ஆளில்லாத வேவு விமானம் போன்ற ஆயுதங்கள் இருந்ததோடு, இலங்கை இராணுவம் பொது இலக்குகளைத் தாக்கும்போது வன்னிக் கட்டளைத் தளபதி மற்றும் ஏனைய அரச அதிகாரிகள் அது பற்றிப் பலமுறை அறிவிக்கப்பட்டனர்.

மேலும், ஆஸ்பத்திரிகளைப் பொறுத்தவரை, சில ஆஸ்பத்திரிகளில் காயமடைந்த தமிழீழ விடுதலைப் புலியினர் இருந்திருக்கக் கூடு மென்றிருந்தாலும் அந்த ஆஸ்பத்திரிகள் சட்டபூர்வமான இராணுவ இலக்குகளாக மாறாது என்பது தொடர்பில் சட்டம் தெளிவாகவேயுள்ளது. அவை தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்ட சிவிலியன் இடங்களாகவே இருக்கும்

200. இவ்வாறாக, இலங்கை இராணுவம், வேண்டுமென்றே அல்லது கண்மூடித்தனமாக யுத்த சூனிய வலயத்தில் பொதுமக்களையும் உணவு விநியோக வரிசைகள் உள்ளிட்ட ஆஸ் பத்திரிகள் மற்றும் ஏனைய மனிதாபிமான இலக்குகளையும் கொண்ட பொதுமக்கள் இடங்களைத் தாக்குவது தொடர்பான தடையை மீறியுள்ளதற்கான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் இருப்பது குழுவுக்குத் தெளிவாகிறது. மேலும், அரசின் உந்துதல் மீது பொது மக்கள் சென்ற யுத்த சூனிய வலயங்களுக்கு குறுக்கே குறிப்பாக, ஷெல் வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டதற்கான நம்பகமான குற்றச்சாட்டுக்கள், அத்தகைய தாக்குதல்களைத் தடைசெய்யும் பொதுவான . விதியை மீறியதையும் குறிப்பாதோடு, அதன் பிரதான நோக்கம் பொதுமக்களிடையே பயத்தை ஏற்படுத்துவதாகும். (விதி 2,ஐ.சி.ஆர்.சி. ஆய்வு)

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனார்த்தனனின் அதிரடி கைகொடுக்க 105 ஓட்டங்களால் வென்றது ஜொலிஸ்ரார்

வலி.வடக்கு,மே 18

யாழ்.மாவட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையே ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப் படுத்திய கிரிக் கெட் சுற்றுப்போட்டி ஆட்டமொன்றில் ஜொலிஸ்ரார் விளை யாட்டுக்கழகம் 105 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்ற ஆட்டத் தில் யாழ்ப்பாணம் பற்றீஸீயன்ஸ் விளை யாட்டுக்கழகமும் ஜொலிஸ்ரார் விளை யாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றது.

ஜனார்த்தனன் 8 சிக்ஸர்கள், ஒரு பௌண்டரியுடன் 63, நிரஞ்சன் 37, சைலேஸ்வரன் 20, ராஜாதித்தன், மணிவண்ணன் தலா 18 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 14 ஓட்டங் களும் பெறப்பட்டன.

பற்றீஸியன்ஸ் விளையாட்டுக்கழ கத்தைச் சேர்ந்த அஜித் 6 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக் களையும் கிளின்டன் 6 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் சுஜீவன் 37 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

208 ஓட்டங்களை வெற்றி இலக்கா கக் கொண்டு களமிறங்கிய பற்றீஸி யன்ஸ் விளையாட்டுக்கழகம் 22.4 ஓவர் களில் அனைத்து விக்கெட்டுக்களை யும் இழந்து 102 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. சஜீந்திரன் 23, அஜித், எரிக் பிரதாப் தலா 20, முரளி 14, மொரின் 12 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிக ளாக 9 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத் தைச் சேர்ந்த பிரியதர்சன் 2 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை யும் சஞ்சீவன் 3.4 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், நாதன் 4 ஓவர் கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நிரஞ்சன், ஜனார்த்தனன், ராஜாதித்தன், சைலேஸ்வரன் முறையே 4,8,17,18 ஓட்டங் களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டை யும் கைப்பற்றினர். (ஐ-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,மே 18

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளை யாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கிரிக் கெட் கழகங்களுக்கு இடையே நடத் தும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

* அரியாலை ஸ்ரான்லி விளை யாட்டுக்கழகம் எதிர் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழகம்.
* கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்ப்பாணம் நியூஸ்ரார் விளையாட் டுக்கழகம்.

(ஐ-86)

# தென்மராட்சி வலய மட்ட பெரு விளையாட்டு முடிவுகள்

தென்மராட்சி,மே 18

தென்மராட்சிக் கல்வி வலயப் பாட சாலைகளுக்கிடையிலான பெருவிளை யாட்டுப் போட்டியின் ஒரு தொகுதி முடிவுகள் 16 ஆம் திகதி வெளியாகியி ருந்தன. எஞ்சிய முடிவுகள் வருமாறு:

சதுரங்கம்

**15 வயது-ஆண்கள்-** வீரசிங்கம் ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கச்சாய் அ.த.க. பாடசாலை.

**15வயது- பெண்கள்-** சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக் கரசு ம.வி, விடத்தற்பளை கமலாசினி வித்தி.

**19 வயது-ஆண்கள்-** சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை விக்னேஸ் வரா ம.வி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

வலைப்பந்தாட்டம்

**15 வயது- பெண்கள்-** சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடி காமம் திருநாவுக்கரசு ம.வி, வரணி ம.வி.

**19 வயது- ஆண்கள்-** கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**19 வயது- பெண்கள்-** கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, மீசாலை வீரசிங் கம் ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

கரபந்தாட்டம்

**15 வயது- பெண்கள்-** மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை, கைதடி முத்துக் குமாரசாமி ம.வி, குடமியன் அ.த.க. பாடசாலை.

**15 வயது- ஆண்கள்-** மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை, கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை, கொடி காமம் திருநாவுக் கரசு ம.வி.

**17 வயது- ஆண்கள்-** சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திரு நாவுக்கரசு ம.வி, கைதடி முத்துக்குமார சாமி ம.வி.

**17 வயது - பெண்கள்-** மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை, கொடி காமம் திருநாவுக்கரசு ம.வி.

**19 வயது - ஆண்கள்-** கைதடி முத்துக்குமாரசாமி ம.வி, மீசாலை வீர சிங்கம் ம.வி, மட்டு வில் சந்திரபுர ஸ் கந்தவரோதய ம.வி.

**19 வயது- பெண்கள்-** கைதடி நாவற் குழி அ.த.க. பாட சாலை, கொடி காமம் திருநாவுக் கரசு ம.வி, சாவகச் சேரி டிறிபேக் கல் லூரி.

எல்லே

**19 வயது - ஆண்கள் -** சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.

**19 வயது- பெண்கள்-** சாவக்சேரி இந்துக்கல்லூரி, கச்சாய் அ.த.க. பாடசாலை.

தடிடி

**19 வயது - ஆண்கள்-** சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

**19 வயது- பெண்கள் -** சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கச்சாய் அ.த.க.பாடசாலை.

(ஐ-207)

## மரண அறிவித்தல்

### சீவரத்தினம் பூபதி

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத் தினம் பூபதி நேற்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - அன்னப்பிள்ளை தம்பதிய ரின் மகளும் காலஞ்சென்ற சீவரத்தினத்தின் மனைவியும் காலஞ் சென்ற சிவாபரனின் தாயும் இராஜேஸ்வரியின் (வவி) மாமியும் காலஞ் சென்றவர்களான தம்பிப்பிள்ளை, குணரத்தினம் மற்றும் நடராஜா, தம் பித்துரை, தர்மலிங்கம், லீலாவதி, சரஸ்வதி, கனகமணி ஆகியோரின் சகோதரியும் யதுஷனா, டினோஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2011) புதன்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காடா கடம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏழாலை கிழக்கு. (4308)(41,20,22) குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 17 07 1950
உதிர்வு 18 05 2009



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடல், யாழ்ப்பாணம், துணுக்காயை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் சண்முகராசா நல்லநாதன்
(சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ்)

ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டு இரண்டு கடந்தாலும்
உங்கள் நினைவுகளை நிதம் நிதம் நெஞ்சில் நினைத்து
கண்ணீர் சொரிவதைத் தவிர எம்மால் எதுவும் செய்ய
முடியவில்லையே ஐயா! எங்களின் நிறைவே உங்களின்
வாழ்வு என்றபடி ஆனந்தமாய் அன்பு நிறைவுடன்
வாழ வைத்த உங்களை காலன் அவன் கவர்ந்து
சென்று எம்மைக் கண்ணீர் சொரிய வைத்துவிட்டான்
இன்றும் உங்களுடன் வாழ்ந்த காலங்கள்
எங்களை வழிநடத்தி வைக்கும் என்ற நம்பிக்கையில்
உங்களையே நினைத்தபடி......

கண்ணீருடன்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவுகள்.

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (4304)(38-19-21)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 01.11.1981
விண்ணில் 18.04.2011



அமரர் தர்மலிங்கம் பரமேஸ்வரன் (ஈசன்)

கடந்த 18.04.2011 இல் இறைபதமடைந்த எமது அன்புச் செல்வத்தின் மரணச் செய்தி கேட்டு ஓடோடிவந்து ஆறுதல்கூறிய உறவுகளுக்கும், தொலை பேசி ஊடாகத் துயரில் பங்கு கொண்ட அன்பர் களுக்கும் , துண்டுப்பிரசுரம் வெளியிட்ட நண் பர்கள் மற்றும் உறவுகளுக்கும் பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும் மற்றும் வாகன உதவிகள் புரிந்தவர்களுக்கும், வைத் தியசாலையில் பல வழிகளிலும் உதவியும், ஒத்து ழைப்பும் நல்கியோருக்கும் இன்னும் பல வழிகளில் உதவிகளும்ஆதரவும் வழங்கியோருக்கும், மரண ஊர்வலத்திலும், அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்துகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.05.2011) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

4ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்ஜெயா உணவகம்

புதுப் பொலிவுடன் புதிய நிர்வாகத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட உணவகத்தின் அனைத்து வேலைகளுக்கும் வேலையாள்கள் தேவை.

உடன் தொடர்பு கொள்ளவும்-

SUNJEYA FOODLAND

414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)

(4315)

## அளவெட்டியில் சனியன்று நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 18

அளவெட்டி மகாஜன சபையின் கலைஞர் வட்டத்தின் ஏற்பாட்டில் பண்டிதர் நாகலிங்கத்தின் தொகுப்பில் உருவான ''வேரூன்றி விழுது பரப்பும் ஆலமரம்'' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணியளவில் மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் கலந்துகொள்ளவுள்ளார்.

நூலின் ஆய்வுரையை கவிஞர் பா. மகாலிங்கசிவம், பண்டிதர் நாகலிங்கத்தின் நினைவுரையை செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இதற்கான நிதியுதவியை அளவையூர் நிதியத்தின் சுவிஸ் கிளைத் தலைவர் எஸ். சிவபாலன் வழங்கியுள்ளார்.

(த-9)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
25.07.1940

உதிர்வு
08.06.2009

திருமதி
**ஈஸ்வரி விஸ்வநாதன்**

உயிர் தந்து உறவுகள் கூட்டி அருளூட்டி வழிகாட்டி
பாசத்தோடு வளர்த்த எங்கள் அம்மாவே பண்பாலும்
பாசத்தாலும் அனைவரையும் அரவணைத்த எங்கள் தாயே!
உங்களை காணத் துடிக்கிறது எங்கள் மனது
இறைவனின் கட்டளையை மறுக்க உங்களால் முடியவில்லையே!
ஈராண்டு மறைந்தாலும் ஆறவில்லை எங்கள் மனம்
மறக்கவில்லை உங்கள் முகம்

13, அன்னசத்திர லேன்,
யாழ்ப்பாணம். (49,20,22)

உங்கள் பிரிவால் வாடும்:
மகன்-பபி குடும்பத்தினர்.

(4318)

## வீடு விற்பனைக்கு

புலோலி கிழக்கு புனித சூசையப்பர் வீதியில் அமைந்துள்ள புதிய வீடு விற்பனைக்குண்டு. 4 அறைகள், சமையல் அறை வசதிகளுடன் கூடிய வீடு. தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு- 0775546042

## சேவைநலன் பாராட்டு



அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில்
அதிபராகக் கடமையாற்றி
16.05.2011 இல் ஓய்வுபெற்ற
**சிற்றம்பலம் மாணிக்கவாசகர்**
அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

கோப்பாய் கல்விக்கோட்டம்,
கோப்பாய். (சி/061)

கோட்டக் கல்விப்பணிப்பாளரும்,
அதிபர் சங்கமும்.

## Computer Express
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

Advances Courses

| | | |
|---|---|---|
| Diploma in Video Editing | 4Months | 1000/= |
| Diploma in Multimedia | 4Months | 1000/= |

31.05.2011 மட்டுமே பதிவுகளுக்கு முந்துங்கள்

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

Batch I - 18.05.2011 9Am or 3pm Batch II - 20.05.2011 9Am or 3pm
Batch III -21.05.2011 9Am or 3pm Batch IV -22.05.2011 9Am or 3pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புகள் நடாத்தப்படும்.

Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444



புத்தம் புதிய அழகிய தெரிவுகளுக்கு...

## சரவணா ரெக்ஸ்

770, 772, கே.கே.எஸ்.வீதி,
(தட்டாதெருச் சந்தி),
யாழ்ப்பாணம்.
TP: 021 222 0421, Fax: 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி),
யாழ்ப்பாணம்.
TP :021 222 1723



Meitro PC SYSTEMS

## MEITRO PC SYSTEM
**Full Complete System with Monitor**

Intel Dual core3.0GHZProcessor
G41 Intel Chipset M/B
Ram 01 GB DDR 3
500GB SATA HDD
15.6" LCD Monitor
USB Optical Mouse
USB Optical Key board
Branded ATX Casing
DVD Writer
37900/=



Intel Dual core3.0GHZProcessor
G41 Intel Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
15.6" LED Monitor
Branded ATX Casing
DVD Writer
Wireless Keyboard & Mouse
Mobile Free
41300/=



Intel Dual core3.0GHZProcessor
G41 Intel Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
15.6" LED Monitor
USB Optical Mouse
USB Optical Key board
Branded ATX Casing
DVD Writer
Mobile Free
42000/=





59450/=
Intel Dual core i3 3.06GHZProcessor
Intel H55 Chipset M/B
Ram 04 GB DDR 3
1000GB SATA HDD
18.5" LCD Monitor
Wireless keyboard & mouse free
Branded ATX Casing
DVD Writer
Karboon mobileFree



Intel Dual core3.0GHZProcessor
G41 Intel Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
Wireless Keyboard & Mouse
Branded ATX Casing
DVD Writer
Mobile Free
46100/=



Intel Dual core3.2GHZProcessor
G41 Intel Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
wireless Key board & Mouse free
Branded ATX Casing
DVD Writer
Mobile Free
47000/=



Intel Dual core i3 3.06GHZProcessor
Intel H55 Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
18.5" LED Monitor
Wireless Key board & Mouse free
Branded ATX Casing
DVD Writer
Mobile Free
55250/=





T.P 0779591134 175/3 Kasthuriar Road Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சீவரட்ணம் சீவரஞ்சன் (ரஞ்சன்)

**(உரிமையாளர்- றெஜி றெஸ்ட்டோரன்ட், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி)**



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரட்ணம் சீவரஞ்சன் (ரஞ்சன்) நேற்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி. (4322)

தகவல்:
இந்திரா (மனைவி).

## சிவஸ்ரீ. நித்தியானந்த நடராஜக் குருக்கள்



அளவெட்டி, பெருமாக்கடவையைப் பிறப்பிடமாகவும், உடுவில் கற்பொக்கணையை வதிவிடமாகவும் கொண்டு தற்பொழுது 29, பிக்கிறிங்லேன், கொழும்பு -13 ல் வசிப்பவருமாகிய காலஞ்சென்ற பரமசாமி ஐயர் - புவனேஸ்வரியம்மா தம்பதியரின் புதல்வன் சிவஸ்ரீ. நித்தியானந்தநடராஜாக் குருக்கள் நேற்று (17.05.2011) செவ்வாய்க் கிழமையன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2011) புதன்கிழமை அஞ்சலிக்காக லங்கா மலர்ச்சாலையில் பூதவுடல் வைக்கப்பட்டு குஞ்சுப்பொறளை இந்து மயானத்தில் பிற்பகல் 2 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு - 13,
தொ.பே:- 011 247 2915. (4324)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பெறாமக்கள்.

## திருமதி சிவகுரு சிவக்கொழுந்து

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகுரு சிவக்கொழுந்து நேற்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுருவின் அன்பு மனைவியும் சண்முகலிங்கத்தின் (வாழைப்பழக் கடை, திருநெல்வேலிச் சந்தை) அன்புத் தாயும் காலஞ்சென்ற கனகாம்பிகையின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2011) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/3, கரியப்புலம்,
வைரவர் கோயிலடி,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி. (4323)

தகவல்:
சண்முகலிங்கம் (மகன்)
(வாழைப்பழக்கடை,
திருநெல்வேலி சந்தை).

## பேணாட் பஸ்தியாம்பிள்ளை(பெனே)



யாழ்ப்பாணம் பிரதானவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேணாட் பஸ்தியாம்பிள்ளை (16.05.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை(வலோரி)-திருமதி மேரிமாகிறேட் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை தம்பதியரின் (சில்லாலை) அன்பு மருமகனும் றெஜியின் அன்புக் கணவரும் ஜொனி, பிறைற்சனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பவளம் மற்றும் சோதி, ருக்குமணி, மகேந்திரன், காலஞ்சென்ற ராஜன் மற்றும் பபா, சுவினிதா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான வேதநாயகம், நடராஜா, சிறில் மற்றும் ராணி, இலட்சுமி, ஜெசிந்தா, செல்வநாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.05.2011) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் இல.37, 5 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள அவரின் இல்லத்திலிருந்து திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 37, 5 ஆம் குறுக்குத்
தெரு, யாழ்ப்பாணம். (4321)

தகவல்:
சகோதரர்கள், சகோதரிகள்.

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் உயிர்நாடி வெட்டி எறியப்பட்டது.

இந்த வரலாற்றுப் பெருந்துயரை நினைவுகொள்ளும் முகமாகவே தமிழ் கூறும் நல்லுலகு, மே 18ஆம் திகதியை தேசிய துக்க நாளாகக் கடைப்பிடித்து வருகின்றது.

முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் ஒடுக்கப்பட்டு இரண்டு வருடங்களைக் கடந்துவிட்டபோதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நிவாரணங்கள் உரிய முறையில் இன்னமும் எட்டப்படவில்லை. சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் இன்னமும் முகாம்களில் மக்கள் வாடிக்கொண்டிருக்கிறார்கள்.

சொந்த இடத்துக்கு திரும்பிய மக்கள்கூட தகரக் கொட்டகைகளின் கீழ் அரைவயிறும் கால் வயிறுமாகவே வாழ்நாளைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர். போரின்போது காணாமல் போனவர்களையும், அதன் பின்னர் சரணடைந்து காணாமல் போனவர்களையும் தேடி அவர்களது உறவுகள் கண்ணீரும் கம்பலையுமாக அலைந்துகொண்டிருக்கின்றனர்.

- இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, போரில் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் முகமாக நாளைய நாளிலும் தமிழர்கள் தத்தம் வீடுகளிலும் அருகிலுள்ள பிரார்த்தனை நிலையங்களிலும் வணக்கத் தலங்களிலும் வழிபாடுகளில் ஈடுபடுமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ)

## உலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வணக்க நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடிய உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் உறுதுணையாளர்களின் கூட்டிணைவுடன் இடம்பெற்ற இந்த வணக்க நிகழ்வில் ஈழத் தமிழ் மக்கள் பலர் பங்கெடுத்திருந்தனர்.

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மைக்கலனும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.

பிரிட்டனில் இரண்டு இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. லண்டன் கிறீன்போர்ட் நகரிலும் லண்டன் புறநகர் பகுதியான குளோசெஸ்டர்ஷெயர் என்ற இடத்திலும் நினைவேந்தல்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர்.

பிரிட்டிஷ் அமைச்சர் டிலக்சன் மொறிஸ் நிகழ்வில் கலந்துகொண்டார். அனைத்துலகப் போர்க் குற்ற விசாரணையை வலியுறுத்தும் போராட்டத்தையும் அவர் கையெழுத்திட்டு ஆரம்பித்து வைத்தார்.

கடந்த 12ஆம் திகதி முதல் புலம்பெயர் நாடுகளில் முன்னெடுக்கப்பட்டுவரும் நினைவேந்தல் வார நிகழ்வுகள் பல்வேறு நாடுகளிலும் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

ஜேர்மனியிலும் இரண்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

பிரான்சில் துண்டுப் பிரசுர பரப்புரையும் - நினைவேந்தல் வணக்க நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

இன்று புதன்கிழமை நியூ யோர்க் - ஜெனீவா ஐ.நா. பீடங்களுக்கு முன்னால் அணிதிரள ஐரோப்பா - அமெரிக்கா வாழ் தமிழர்கள் தயாராகி உள்ளனர்.

ஐ.நா. நிபுணர் குழுவின் பரிந்துரைகளை முன்னிறுத்தி முன்னெடுக்கப்படும் இந்த ஒன்றுகூடலுக்கான ஏற்பாடுகள் பிரமாண்டமான முறையில் இடம்பெற்றுவருகின்றன. (உ)

# கண்ணீர் அஞ்சலி

நெடுந்தீவு பிரதேச சபையின் ஊழியர்

**அமரர் கணபதிப்பிள்ளை பரமலிங்கம்**

**(காவலாளி நெடுந்தீவு பிரதேச சபை)**

அவர்களின் திடீர் மறைவையொட்டி ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர், ஊழியர் நலன்புரி சங்கம்,
நெடுந்தீவு, பிரதேச சபை.
(4326)

# மரண அறிவித்தல்

## துஷாந்தி கனகசபை (B.A)



ஈச்சமோட்டை, கடற்கரை வீதியை வசிப்பிடமாகக் கொண்ட துஷாந்தி கனகசபை நேற்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை (றீகல் வீடியோ உரிமையாளர்) மற்றும் பங்கஜா தம்பதியரின் செல்வப்புதல்வி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

42/1, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். (4327)

தகவல்:
பிரஷாந்தன் (தம்பி).

## 13ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்பட்டியலை (கொன்கரன்ட்) நீக்குமாறும் அரசிடம் கேட்டுள்ளோம்'' என்று தெரிவித்தார் டக்ளஸ்.

அவர் கூறும் செனட் சபை, அரசு ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சில் முன்மொழிந்த செனட் கட்டமைப்பை ஒத்ததா என்று கேட்டதற்கு, ''அதில் சில வேறுபாடுகள் உள்ளன'' என்று அமைச்சர் பதிலளித்தார்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலான நாடுகளாலும் முன் வைக்கப்பட்டுள்ளன.

**ஆதரவு**

இதுவரையில் சீனா, ரஷ்யா, மாலைதீவு ஆகிய நாடுகள் மட்டுமே நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தேவையின்றித் தலையிட்டுக் குழப்பக்கூடாது என்று சீனா தெரிவித்துள்ளது. வெளியிடப்பட்டது ஐ.நா. அறிக்கையே கிடையாது என்று ரஷ்யா தெரிவித்துள்ளது. அறிக்கை ஏன் இப்போது விடப்பட்டது என்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்று மாலைதீவு ஜனாதிபதி தெரிவித்தார்.

**எதிர்ப்பு**

உலகெங்கும் 35க்கும் மேற்பட்ட நாடுகள் நிபுணர்குழு அறிக்கையை ஆதரித்துள்ளதுடன் இலங்கை அதனடிப்படையில் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளன.

நிபுணர் குழுவின் அறிக்கை ஒரு வரப்பிரசாதம் என்று தெரிவித்துள்ளது பிரான்ஸ். இலங்கை அதிகாரிகள் அனைத்துலக சமூகத்துடன் இணைந்து செயலாற்ற முன்வரவேண்டும் என்றும் அது கேட்டுள்ளது.

அறிக்கை தொடர்பில் ஐ.நாவுடன் இணைந்து பணியாற்றுமாறு ஜப்பான் வலியுறுத்தி உள்ளது. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசு சரிவரச் செயற்படுத்தாவிட்டால் அனைத்துலக விசாரணை அவசியம் என்கிறது நியூஸிலாந்து. போர்க் குற்றங்கள் குறித்து இலங்கை விசாரித்தே ஆகவேண்டும் என்கிறது நோர்வே.

நிபுணர் குழு அறிக்கையைச் சாதகமான முறையில் பரிசீலிக்கும்படி இலங்கையை ஊக்குவிப்பதாகக் கூறுகிறது பிரிட்டன்.

அமெரிக்காவோ, இலங்கை தனது பொறுப்பை நிறைவேற்றுகிறதா என்பதையே முதலில் கவனிக்கிறோம் என்கிறது. சுவிற்சர்லாந்து நிபுணர் குழுவின் அறிக்கையை வரவேற்றுள்ளது.

27 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐரோப்பிய நாடாளுமன்றம், நிபுணர் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கையைக் கோரி உள்ளது.

மனித உரிமை மீறல் குறித்து விசாரிக்க வேண்டும் என்று இறுதியில் இந்தியாவும் வலியுறுத்தி உள்ளது. எனினும் இந்தியாவுக்குள்ளே, பிரதான கட்சிகளான பாரதீய ஜனதாக் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கட்சி, அதிமுக, திமுக, விடுலைச் சிறுத்தைகள், மதிமுக, பாட்டாளி மக்கள் கட்சி போன்றனவும் இலங்கைக்கு எதிரான கருத்துக்களையே கொண்டுள்ளன. (உ)

# தவறிவிட்டது

நேற்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பேருந்தில் ஆ. திரேசம்மா, கி.மகேஸ்வரன், ம.அனஸ்ரா ஆகியோரின் நகை அடைவு பற்றுச் சீட்டு அடங்கிய வங்கிக் கவர் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கி.மகேஸ்வரன்,
இல.201, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.0774308112

# விசேட பொதுக் கூட்டம்

17.05.2011 உதயன் 20ஆம் பக்கத்தில் மேற்படி விளம்பரத்தில் ''இலங்கை சுதேச வைத்திய சாலை'' என பிரசுரமானதை இலங்கை சுதேச வைத்திய சபை எனத் திருத்தி வாசிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
18 மே 2011 புதன்கிழமை

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களி லும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

# தாளையடி கடலில் தொழில் செய்வதற்கு கற்பிட்டி மீனவருக்கு தன்னிச்சையாக அனுமதி

## யாழ். மாவட்ட கடற்றொழில் சமாசம் கண்டனம்

யாழ்ப்பாணம்,மே18

தென்னிலங்கையைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் 129 பேருக்குத் தாளையடியில் கடற்றொழில் செய்வதற்கான அனுமதியைத் தாளையடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் வழங்கியுள்ளது.

இந்தச் செயற்பாட்டை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

கற்பிட்டியிலுள்ள பெரிய குடியிருப்பு, சின்னக்குடியிருப்பைச் சேர்ந்த நசீர் என்பவரின் தலைமையிலான 129 கடற்றொழிலாளர்களுக்கே தாளையடியில் கடல் அட்டை மற்றும் சங்கு பிடிப்பதற்கான அனுமதியை தாளையடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் சில தினங்களுக்கு முன்னர் வழங்கியுள்ளது.

தாளையடிக் கடலில் 150 தொடக்கம் 200 அடி ஆழம் வரை நீருக்கடியில் சென்று தொழில் செய்வதற்கான சிலிண்டர்கள் சகிதம் தென்னிலங்கைத் தொழிலாளர்கள் தாளையடிக்கு வந்து குவிகின்றனர். மாதக்கணக்கில் தங்கியிருந்து கடற்றொழில் செய்வதற்கான நடவடிக்கைகளை அந்தக் கடற்றொழிலாளர்கள் தற்போது மேற்கொண்டுள்ளனர்.

தாளையடிப் பகுதியில் உள்ள உள்ளூர் கடற்றொழிலாளர்களின் படகுகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களை பயன்படுத்தியே இந்தத் தென்னிலங்கை மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடவுள்ளனர். அதற்கான பேச்சு வார்த்தகளை உள்ளூர் கடற்றொழிலாளர்களுடன் இவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

உள்ளூர் கடற்றொழிலாளி ஒருவரின் படகுக்கு நாளொன்றுக்கான வாடகையாக 3500 ரூபாவை வழங்க தென்னிலங்கை மீனவர்கள் இணங்கி உள்ளனர் எனவும் படகு செலுத்துவதற்கும் உள்ளூர் தொழிலாளர்களைப் பயன்படுத்துதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. தாளையடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இவ்வாறு தன்னிச்சையாக நடந்து தென்னிலங்கைக் கடற்றொழிலாளர்கள் தாளையடியில் தொழில்செய்ய அனுமதித்துள்ளமையை யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் என். திருலிங்கநாதன் இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர். ரவீந்திரனுக்கு அவசர கடிதம் ஒன்றை நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

அதில், சங்கு பிடிப்பதற்கு அரசின் சுற்றுநிரூபத்துக்கு அமைவாகத் தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தாளையடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், சங்குபிடிப்பதற்கான அனுமதியை தென்னிலங்கை கடற்றொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளது. எனவே இதற்கான நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபர் அந்தக் கடிதத்தில் கேட்டுள்ளார்.

கடல் வளம் இந்திய மீனவர்களாலும், தென்னிலங்கை மீனவர்களாலும் சூறையாடப்பட்டு வருவதால், வருமானத்துக்கான வழிவகைகள் இல்லாமல் வாடிக்கொண்டிருக்கின்றனர் வடபகுதிக் கடற்றொழிலாளர்கள். இந்த நிலையில் தாளையடி கடற்றொழிலாளர் சங்கம் தென்னிலங்கை கடற்றொழிலாளர்களுக்கு இங்கு அனுமதி வழங்கி எமது கடல்வளத்தை அவர்கள் அள்ளிச்செல்ல உடந்தையாக இருக்கிறது. கடற் றொழிலாளர் சங்கங்கள் திணைக்களங்கள், மக்கள் பிரதிநிதிகள் இந்த விடயத்தில் தலையிட்டுத் தாளையடி சங்கம் வழங்கிய அனுமதியை இரத்துசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். (த-14)

## ஆற்றில் மூழ்கி இளைஞன் மரணம்

கொழும்பு, மே 18

மட்டக்களப்பு, கோராவெளி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி உற்சவத்துக்காக நண்பர்களுடன் சென்ற இளைஞன் ஒருவர் கோரா வெளி ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் பிரேதபரிசோதனைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

## யாழ். சிறைச்சாலையில் 9 கைதிகள் வெசாக்கை ஒட்டி நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 18

வெசாக் தினத்தை முன்னிட்டுப் பொது மன்னிப்பின் அடிப்படையில் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளில் 9 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்கள் புரிந்து நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டணைப்பணத்தைச் செலுத்தத் தவறிய நிலையில் சிறைவாசம் அனுபவித்தவர்களே இவ்வாறு விடுதலை செய்யப் பட்டனர்.

விடுதலை செய்யப்பட்டவர்கள் அனைவரும் 22 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்களாவர்.

இவர்கள் ஒரு மாதம் தொடக்கம் ஒரு வருடம் வரை சிறைவாசம் அனுபவித்தவர்களாவர்.



யாழ். சிறைச்சாலையின் உதவி அத்தியட்சகர் சந்தன எக்கநாயக்க முன்னிலையில் நேற்று இவர்கள் விடுதலை செய்யப் பட் டனர்.

வருடா வருடம் சுதந்திர தினத்தன்று கைதிகளில் சிலர் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்படுவது வழமை. ஆனால் இந்த முறை சிறைச்சாலை ஆணையாளர் விசேட சுற்றுநிருபத்துக்கு அமைவாக சிறு குற்றம் புரிந்த கைதிகள் 9 பேரை வெசாக் தினத்தில் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்கின்றோம் என யாழ். சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் சந்தன எக்கநாயக்க தெரிவித்தார். (த-14)

## வவுனியாவில் வெசாக் பந்தல் அமைக்க ஆளுநர் உத்தரவு

வவுனியா, மே 18

வவுனியாவில் உள்ள தமிழ் பாடசாலைகளில் வெசாக் அலங்காரக் கூடுகளையும், பந்தல்களையும் அமைக்குமாறு வடமாகாண ஆளுநர் உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

அவரவர் விரும்புகின்ற மதத்தைக் கடைப்பிடிப்பதற்கு உரிமை உள்ளது என இலங்கை அரசமைப்பில் தெரிவிக்கப் பட்டுள்ள போதிலும், வெசாக் கூடுகளையும் தமிழ்ப் பாடசாலைகளில் அமைக்குமாறு உத்தரவிடுவது மனித உரிமையை மீறும் செயல் என வவுனியா வாழ் ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த உத்தரவால் விசனம் அடைந்துள்ள ஆசிரியர்களும், சமூகத்தவர்களும் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வேண்டா வெறுப்புடன் செயற் படுவதாகத் தெரிவித்தனர்.

வலுக்கட்டாயமாக புத்த மதத்தைப் பின்பற்றச் செய்யும் இந்த நடவடிக்கையானது நாட்டில் ஒருபோதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது என்றும் அவர்கள் உறுதிபடக் கூறுகின் றனர். (ஒ-சி)

## சிறைச் சாலையில் இன்று இரத்த தானம்

யாழ்ப்பாணம், மே.18

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இன்று புதன்கிழமை இரத்த தானம் செய்யவுள்ளனர்.

யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கிப் பிரிவு யாழ். சிறைச்சாலையில் நடமாடும் இரத்த வங்கி முகாமை இதற்கென நடத்தவுள்ளது.

சிறைச்சாலை உயர் அதிகாரிகள், சிறைக்காவலாளிகள், அலுவலக உத்தியோகத்தர்கள் இதில் இரத்ததானம் செய்யவுள்ளனர்.

இன்று காலை 8.30 மணி தொடக்கம் இந்த இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

வெசாக் தினத்தை முன் னிட்டு இந்த இரத்த தான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-14)

# நிகழ்வுகள்

### சிரமதானப் பணி

சாவகச்சேரி, மே.18

தென்மராட்சியில் 523 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் கைதடி நவீல்ட் பாடசாலையில் இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் சிரமதானப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

பாடசாலையில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நவீல்ட் பாடச்ாலை மாணவர்களுக்கான கிரிக்கெட் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் என்றும் மாணவர்களுக்கு மதிய போசனமும் வழங்கப்படும் என்றும் படைப் பிரிவின் சிவில் அதிகாரி தெரிவித்தார். (ற-131)

### கலைஞர்கள் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மே.18

மக்கள் கலை இலக்கிய அரங்கத்தின் ஏற்பாட்டில் அங்குரார்ப்பண நிகழ்வும் கலைஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்வும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன. சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும் கலந்துகொள்ள வுள்ளனர். (ற-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முத்தமிழ் விழா

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்வியியற் கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கௌரவ விருந்தினராக வேம்படி உயர்தரப் பெண்கள் பாடசாலையின் அதிபர் திருமதி க.பொன்னம்பலம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# ஜனாதிபதியின் நேரடிப் பணிப்பின் பேரிலேயே லசந்த கொல்லப்பட்டார்

## லசந்தவின் மனைவி சொனாலி

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நேரடிப் பணிப்புரையிலேயே லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டதாக லசந்தவின் மனைவி சொனாலி விக்கிரமதுங்க குற்றம் சாட்டியுள்ளார். லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையை முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தலையில் கட்டிவிட்டு அவரை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதுடன், தானும் தப்பித்துக் கொள்ளும் முயற்சிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அரசுப்பிரதிநிதிகளும் முன்னெடுத்துவருகின்றனர்.

அதற்கான சாட்சியங்களை உருவாக்கும் பணிகள் தற்போதைக்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாக லசந்தவின் கொலையில் சரத் பொன்சேகாவுக்கு தொடர்பிருப்பதாகப் பிரித்தானியத் தூத ரக அதிகாரிகள் தன்னிடம் கருத்துத் தெரிவித்ததாக அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அதற்கடுத்ததாக லசந்த விக்கிரமதுங்க படுகொலை, கீத் நொயர், நாமல் பெரேரா, உபாலி தென்னக்கோன் ஆகிய ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் என்பவற்றில் சரத் பொன்சேகாவுக்குத் தொடர்பிருப்பதாக அண்மையில் சண்டே லீடர் ஆசிரியர் பிரெட்ரிகா ஜேன்ஸ் பத்தியொன்றை எழுதியிருந்தார்.

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைச் சம்பவம் மற்றும் ஏனைய ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடைய இராணுவச் சிப்பாய்கள் சரத் பொன்சேகாவின் நெருங்கிய ஆதரவைப் பெற்ற சிப்பாய்கள் என்று தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் அதனை வன்மையாக மறுத்துள்ள லசந்த விக்கிரமதுங்கவின் மனைவி சொனாலி விக்கிரமதுங்க, தனது கணவன் லசந்தவின் படுகொலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

அது தவிர சரத் பொன்சேகாவுக்கு அதில் தொடர்பிருப்பது குறித்து தனக்குத் தெரியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் பிரெட்ரிக்கா ஜேன்ஸ், தற்போதைய நிலையில் அரசாங்கத்தின் ஊதுகுழலாக மாறியுள்ளதுடன் அவரது சேவையைக் கௌரவிக்குமுகமாக அவருக்கு அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. *(எ-323) (தமிழ்வின்)*

# பத்தினிபுரத்தில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டன

திருகோணமலை தம்பலகாமம் பத்தினிபுரம் களப்புப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டதாகத் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 40 மில்லி மீற்றர் குண்டுகள் 7, ரி 56 ரக துப்பாக்கி மூன்று மற்றும் ரி 56 ரக துப்பாக்கி ரவைகள் 89 என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (10)

*(அதிர்வு)*

# இணையச் செய்திகள்

## கறுப்பு நிறமாகும் காலி கடல் நீர்

### ஜப்பான் அணுக் கழிவின் தாக்கமா?

காலிப் பகுதியில் கடல் நீர் கருமை நிறத்துக்கு மாற்றமடைந்துள்ளதுடன், ஜப்பான் அணுக் கழிவுகள் கடலில் கொட்டப்பட் டதன் தாக்கமாக அது இருக்க லாம் என்ற அச்சம் பரவலாக தோன்றியுள்ளது. காலியின் களுவெல்ல பிரதேசத்திலேயே பிரஸ்தாப கடல் நீர் கறுப்பு நிறத் திற்கு மாற்றமடைந்துள்ள சம்பவம் அவதானிக்கப்பட்டுள்ளது.


கருமை நிறமான கடல் நீருடன் எண்ணெய்த் தன்மையான ஒரு வகைப் படிவும் நீரில் அடித்து வரப்பட்டு கரையொதுங்கும் காரணத்தால் களுவெல்ல பிரதேசக் கடற்கரையோரம் கடுமையாக மாசடைந்து காணப்படுகின்றது.

விடயமறிந்து ஸ்தலத்துக்கு வருகை தந்த சமுத்திரவியல் மாசுகட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகள் கடல் நீரின் கருமைக்கும் அதனோடு சேர்ந்து கரையொதுங்கும் மாசுக ளும் எண்ணெய் அல்லது ஏதாவது இரசாயனம் காரணமாக இருக்கலாம் என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆயினும் அண்மையில் ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தையடுத்துக் கடலில் கொட்டப்பட்ட அணுக்கழிவுகள் தான் இவ்வாறு காலியில் கரையொதுங் குவதாக அப்பகுதி மக்களி டையே ஒரு பரவலான அச்சம் தொற்றிக் கொண்டுள்ளது.

களுவெல்லை பிரதேசத்தின் கடற்பரப்பில் சுமார் ஏக்கர் வரையான பரப்பளவில் பிரஸ்தாப மாசுப் படிவு பரந்து காணப்படுகின்றது.

*(எ-323)(தமிழ்வின்)*



*2600ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு வெலிக்கடை மற்றும் மஹாவ சிறைச்சாலைகளிலுள்ள சுமார் 110 கைதிகளை விடுதலை செய்யும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை களனி ரஜ மஹா விகாரையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதமர் தி.மு.ஜயரட்ன, அமைச்சர்களான சந்திரசிறி கஜதீர மற்றும் மேர்வின் சில்வா உட்பட பலர் கலந்துகொண்டனர். (தமிழ்மிரர்)*

# பான். கீ மூன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமர்சித்து வந்தமை தெரிந்ததே. அது மட்டுமின்றி கொழும்பில் உள்ள ஐ.நா.சபை அலுவலகத்துக்கு முன்பாக வாயிலை மறைத்தவாறு மேடை அமைத்து வீரவன்ஸ உண்ணாவிரதம் மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

ஐ.நா. சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் விமல் வீரவன்ஸ ஐ.நா. துணைப் பொதுச் செயலாளர் கியோடகா அகசகா உட்பட மற்றும் பலருடனும் கைலாகு கொடுத்தார் எனவும் 'இன்னர் சிற்றி பிரஸ்' தெரிவித்துள்ளது.

ஐ.நா.சபைக்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட அமைச்சர் தற்போது ஐ.நா.சபை நிகழ்வுக்கு விஜயம் செய்துள்ளது தொடர்பாக 'இன்னர்சிற்றி பிரஸ்' ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சர் வீரவன்ஸவிடம் கேள்வி எழுப்பினார்.

இக் கேள்வியை ஐ.நா. சபையின் இலங்கைக்கான பிரதிவதிவிடப் பிரதிநிதி சர்வேந்திர சில்வா மொழிபெயர்த்தார். இக் கேள்விக்கு சிறிது நேரம் மௌனம் சாதித்த வீரவன்ஸ ஐ.நாவில் அங்கத்துவம் வகிக்கும் நாடொன்றின் பிரதிநிதி என்ற வகையில் நியூயோர்க்கில் நடைபெறும் இந்த பௌத்த நிகழ்வில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்று தெரிவித்தார் எனவும் 'இன்னர் சிற்றி பிரஸ்'செய்தி வெளியிட்டுள்ளது.

# ஒரு லட்சம் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே அவர்கள் அனைவரையும் மீளக்குடியேற்றி விட்டோம் என்றே அரசு கணக்குக் காட்டுகிறது.

ஆனால், இடைத்தங்கல் மற்றும் நலன்புரி முகாம்களில் இருந்து வெளியேறியவர்களில் பெரும் எண்ணிக்கை யானவர்கள் அவர்களது வீடுகளுக்கோ விவசாய நிலங்களுக்கோ திரும்பவில்லை என்று ஐ.நா. கூறுகின்றது. அவர்கள் தமது சொந்த இடங்களில் இருந்து நீண்ட தொலைவில் உறவினர்களுடன் அல்லது நண்பர்களுடன் தங்கியிருக்கின்றனர்.

இவ்வாறு வவுனியாவில் 18,589 பேரும் மன்னாரில் 4,928 பேரும் யாழ்ப்பாணத்தில் 94,371 பேரும் தங்கியிருக்கின்றனர்.

கிளிநொச்சியில் அனேகமாக மீள்குடியமர்வு பூர்த்தியாகி விட்ட போதும் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அவை இன்னும் முற்றுப்பெறவில்லை.

இந்த மாவட்டங்களில் பல கிராமசேவகர் பிரிவுகள் கண்ணிவெடி அகற்றப்படுவதற் காகக்கூட இன்னும் விடுவிக்கப்படவில்லை என்று ஐ.நா. அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

மீளக்குடியமராமலும் மெனிக்பாம் தடுப்பு முகாமில் இருந்து வெளியேறாமலும் 4,981 குடும்பங்களைச் சேர்ந்த 16,401 பேர் இன்னும் இருக்கின்றனர் என்கிறது அறிக்கை. (உ)

# மனித உரிமை மீறல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டன. அந்தக் கூட்டறிக்கையிலேயே மனித உரிமைகள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு இந்தியா வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்ற விடயத்தில் இரு நாடுகளும் இணக்கம் கண்டுள்ளன என்றும் அந்தக் கூட்டறிக்கை குறிப்பிடுகின்றது.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடந்த 15ஆம் திகதி முதல் நேற்று வரை மூன்று நாள்கள் பயணமாக இந்தியா வந்திருந்தார். இந்தப் பயணத்தின் போது அவர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்திய வெளிவிவகாரச் செயலார் நிருபமா ராவ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சிங்கர் மேனன் ஆகியோருடனும் அமைச்சர் பீரிஸ் சந்திப்புக்களை நடத்தி இருந்தார்.

கடைசி வரை உறுதிப்படுத்தப்படாமல் இருந்த பிரதமர் மன்மோகன் சிங்குடனான சந்திப்பு நேற்றுப் பகல் ஒரு வழியாக ஏற்பாடு செய்யப்பட்டது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து அப்போது பீரிஸ் எடுத்து விளக்கினார். பதிலுக்கு இந்திய அரசு பல விடயங்களை அழுத்தம் திருத்தமாக பீரிஸிடம் எடுத்துரைத்தது என்று புதுடில்லியில் தகவல்கள் கூறுகின்றன.

இதன் பின்னர் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில், "ஆயுதப் போராட்டத்தின் முடிவு இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வரலாற்றுச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி உள்ளது என்பதை இரு தரப்புகளும் ஏற்றுக்கொண்டுள் ளன" என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுவதை நோக்கி இதயசுத்தியுடன் நேர்மையாக அரசியல் தூரநோக்குடன் செயற்படுவதற்கும் இரு தரப்புகளும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அறிக்கை கூறுகின்றது.

இந்த விடயம் தொடர்பில், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று காணப்படும் ஒரு தீர்வு அத்தகையதொரு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சூழலை ஏற்படுத்தும் என்றும் அதற்காக அர்ப்பணிப்புடன் இலங்கை அரசு செயலாற்றி வருவதாகவும் தமிழ்க் கட்சிகளுடன் நடத்தப்படும் பேச்சு அந்த வகையிலானதே என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, மீள்குடியமர்வு மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளிலும் இலங்கை அரசு தொடர்ந்து ஈடுபடும் என்று பீரிஸ் உறுதியளித்துள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப் புரிமையைப் பெறுவதற்கான முழு ஆதரவையும் இலங்கை வழங்கும் என்று இந்தச் சந்திப்புகளின் போது அமைச்சர் பீரிஸ் உறுதியளித்துள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 10 07 1986 | உதிர்வு 01 02 2011



அமரர் செல்வி மகாலிங்கசிவம் சுகந்தா
(முன்பள்ளி ஆசிரியை கரம்பைக்குறிச்சி வரணி)

கடந்த 01.02.2011 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பச் சுடர் செல்வி மகாலிங்க சிவம் சுகந்தா அவர்களின் அந்தியேட்டிக் கிரிகைகள் நாளை (19.05.2011) வியாழக்கிழமை 7.00 மணிக்கும் சபிண்டீகரணக் கிரிகைகள் நாளை மறுதினம் (20.05.2011) வெள்ளிக்கிழமைபகல் 11 மணியளவிலும் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் வருகை தந்து அன்னாரது ஆத்மா சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உன்நினைவில் வாழும்
குடும்பத்தினர்

கரம்பைக்குறிச்சி மேற்கு,
குருக்கள் குடியிருப்பு,
வரணி (இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா வேலாயுதம்

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சுவிற்சர்லாந்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா வேலாயுதம் நேற்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை சுவிஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், கோகிலதாசன்(கனடா) காலஞ்சென்ற விமலதாசன் மற்றும் நளினி (ஜேர்மனி), லிங்கதாசன்(ஜேர்மனி), புகழினி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நாகமுத்து மற்றும் நல்லம்மா, அன்னப்பிள்ளை, கனகம்மா, வீரகத்திப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19.05.2011) வியாழக்கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (சி/067)

தகவல்:
வ.திருமுருகராசா-(மைத்துனர்)

## சவிரி பிலோமினா

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை.)



நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சவிரி-பிலோமினா நேற்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை காலை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரி-ஞானப்பு தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராயப்பு பரிமளம் மற்றும் கபிரியேல், அருட் சகோதரி டொறத்தி (திருச்சிலுவைக் கன்னியர்மடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பிறின்சியசோ (ஆசிரியை, ஏழாலை புனித இசிதோர் றோ.க. பாடசாலை), ஜெராட் ரசீதன் (சிற்றூழியர், யாழ். போதனா வைத்திய சாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயபாலரட்ணம் (ஜெயபால், உரிமையாளர், பிறின்சி சில்க்ஸ் - யாழ்ப்பாணம்), காஞ்சனா ஆகியோரின் அன்பு மாமியாரும் பின்ரோ, ஸ்ரெபோ (மானிப்பாய், கியூ மெடிக்கா தேசிய பாடசாலை), றனோஜில், டனுஸ்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (18.05.2011) புதன் கிழமை பி.ப. 3.00 மணியளவில் குளமங்கால் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித சவேரியார் சேமக்காலையில் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம். (4314)

தகவல்:
கே. ஜெயபால்
(மருமகன்)

# யாழ். நகரில் வெசாக் கொண்டாட்டம் மின் வெளிச்சத்தில் அலங்காரங்கள்



யாழ்ப்பாணம், மே.18

2600 ஆம் ஆண்டு புத்த ஜெயந்தி தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் தயார் செய்யப்பட்டிருந்த வெசாக் பந்தல்கள் மற்றும் அலங்காரக் கூடுகள் அனைவரது பார்வைக்காக நேற்றிரவு 7 மணியளவில் வைபவ ரீதியாக ஒளியேற்றப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வை யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், 51ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜனக வெல்கம மற்றும் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்மதேவ, பாதுகாப்புப் படைகளின் உத்தியோகத்தர் பிரட்றிக்கோ, 52 ஆவது படைப்பிரிவின் தளபதி டபிள்யூ. ஏ.டி.ஏ. சுபசிங்க, 55ஆவது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் ஏ.எச்.ஏ. பெரேரா உட்பட ராணுவ உயர் அதிகாரிகள், பொலிஸார் மற்றும் பொது மக்களும் கலந்துகொண்டனர்.

யாழ். நகரின் மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியை அண்மித்த பகுதியில் இருந்து தந்தை செல்வா சதுக்கம் வரையிலான பகுதி வரை சுமார் 21 வெசாக் பந்தல்கள் அமைக்கப்பட்டு அவை மின் விளக்குகளுடன் கூடிய வெசாக் கூடுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கென தண்ணீர்ப் பந்தல்களும் அமைக்கப்பட்டிருந்தன.

பொலிஸ் நிலையத்தில் வெசாக் தினத்தையொட்டி பிரார்த்தனை நிகழ்வும் இடம் பெற்றது. இதில் பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர். வெசாக் அலங்காரப் பந்தல்களை இன்றும் பார்வையிடக் கூடியதாகஇருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை:-

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நேற்று படையினர் சாவகச்சேரி நவீன சந்தையின் முன்பாக தண்ணீர்ப் பந்தல் அமைத்து பொதுமக்களுக்கு குளிர்பானம் மற்றும் உணவுப் பொதிகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் 52 ஆவது படைப் பிரிவின் சிவில் அதிகாரி அபேயவர்த்தன மற்றும் செலான் வங்கி முகாமையாளர் எஸ். சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஒ-4-131)

## வாடகை FOR- NGO/OFFICE

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பலாலி றோட் பேபி ஸ்ரூடியோ அருகில் 9 அறைகள், ஹோல், விறாந்தை வாகனத் தரிப்புடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:0772850753

## ஆர்கி என்ரப்பிறைசஸ்



தானியங்களை உடைத்து, தீட்டி, அரைத்து, நொருக்கி, பிழியும் இயந்திரங்கள் நம்பமுடியாத விலையில்...
2 வருட உத்தரவாதம்

150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (48)

## யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
### சீட்டிழுப்பு அறிவித்தல்

இன்று (18.05.2011) எமது கல்லூரியில் நடைபெறவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சீட்டிழுப்பு 2011. 05.30 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என்பதை அன்புடன் அறியத் தருகின்றேன்.

அதிபர், யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி.

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை பரமலிங்கம்

(நெடுந்தீவு பிரதேச சபை ஊழியர்)

நெடுந்தீவு-12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 15ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பரமலிங்கம் (17.05.2011) செவ்வாய்க்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவகளான கணபதிப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சாமிநாதர்- அன்னம்மா தம்பதியரின் மருமகனும், அன்னமலரின் அன்புக் கணவரும், சரஸ்வதி, நடராஜலிங்கம் (நடா) அவர்களின் பாசமிகு சகோதரனும், தினேசன், கீர்த்தனா, பிருந்தன் ஆகியோரின் தந்தையும், நவரத்தினசிங்கத்தின் மைத்துனரும், சயந்தினி, ஐங்கரன் ஆகியோரின் மாமனும், தர்சன், துஷாந், வாகீசன், தனுசியா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05 .2011) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கிழக்கு பொது இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15 ஆம் வட்டாரம், நெடுந்தீவு கிழக்கு.. (4328)

தகவல்:
குடும்பத்தினர்.

உடன் அனுமதி
தொடர்புகளுக்கு 0773013060




## வீடு விற்பனைக்குண்டு

அத்தியடி, யாழ்ப்பாணத்தில் (பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) 1½ பரப்பு சுற்றுமதில், தனிக்கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0776702430

## கொள்முதல் செய்யப்படும்

பழைய இரும்பு, பித்தளை, செம்பு, அலுமினியம் தரகர் இன்றி நேரடியாக எவ்வளவு தொகையானாலும் நல்ல விலைக்கு கொள்முதல் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு:
0777769869, 0757846846, 0772357667.

## யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

**Diploma in Mobile Phone Repairing**

(Software & Hardware Repairing)

(பல புதிய விடயங்களுடன்)

(யாது இக் கற்கை நெறியை கற்பதன் மூலம் 100% நீங்கள் Mobile Phone இனை திருத்தி கொடுக்க முடியும்)

*(With Practical Electronic)*

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

வகுப்பு ஆரம்பம் - 21/05/2011 நேரம்12மணி காலம் 3 மாதங்கள் -

உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021-[illegible] / 0777 410862

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்18.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org